www.tamilarangam.net




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூன்றாவது மனிதன்

**நூல் வெளியீட்டகம்!**

ஈழத்து நூல் வெளியீட்டுத் துறையை ஊக்குவித்து-காத்திரமான படைப்பாக்க முயற்சிகளுக்கு "மூன்றாவது மனிதன்" வெளியீட்டுப் பணியகம் உதவத் தயாராக இருக்கிறது - ஏலவே இப்பணியில் நாம் செம்மையாக இயங்கி வருகின்றோம்; உங்கள் படைப்புகள், கருத்துக்கள் நூலுருவாக்கம் பெற வேண்டுமெனில் எம்மைத் தொடர்பு கொள்க.

**- வெளியீட்டாளர் -**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நேர்காணல்

- சேரன் -



## கவிதை - மொழி பெயர்ப்பு

■ எம்.ஏ. நுஃமான்
பலஸ்தீன
பெண் கவிஞர்களின்
கவிதைகள்



■ சி. ஜெய்சங்கர் ■ மு.பொன்னம்பலம்

■ உமா வரதராஜன்

## கட்டுரை

■ மறைந்த - சசி கிருஷ்ணமூர்த்தி



பெண்களின்
தோள்கள் மீது
சுமத்தப்பட்ட
பாரம்
"FIRE"

■ எம். பௌசர்
மு. தளையசிங்கம்
ஏன் இந்த
25 வருட மௌனம்?



- ஆட்டோ லோர்ட்
காமம் ஒரு
ஆற்றலாக,
அதிகாரமாக



## கவிதை

பசீர்
ஆகர்ஷியா
வீ. சுதாகர்
றஷ்மி
அனார்
சாகீர் ஹுஃசைன்



## கடிதங்கள்


## சிறுகதை



பனிமலை
எம்.ஐ.எம்.றஊப்

திரை விலகும் துயர்
எஸ்.கே. விக்னேஸ்வரன்





மூதாட்டியின்
எதிரணியின்
சிரம்பணிதல்
ஏ.எல். ஹஸீன்

மூன்றாவது மனிதன் (காலாண்டிதழ்)
இதழ் - 06
ஜூன் - ஆகஸ்ட்
ஆசிரியர் : எம். பௌசர்

தொடர்புகளுக்கு
53, Vauxhall Lane,
Colombo - 02.
Sri Lanka.
T.P.: 01-300919
Email : tman@dynanet.lk

ஓவியம், எழுத்து - ஏ.எம். றஷ்மி
கணனி வடிவமைப்பு - எம்.எஸ்.எம். றிகாஸ்
விளம்பர உதவி - எஸ்.எச். நிஃமத்
தருகை - 50/=



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மிகவும் தாழ்ந்து போய்க் கிடக்கிறது நமது தமிழ்ச் சூழல்;

நமது சிந்தனைக்கும், நமது ரசனைக்கும்,
நமது வாழ்வுக்கும் என்ன நடந்திருக்கிறது?
தமிழின் கொடிக்கம்பம் உடைந்து, அதில் காகங்கள் எச்சமிட்டு
கேட்பாரற்று மண்ணில் கிடக்கிறது.
இது நமக்கு மட்டும் ஏற்பட்டிருக்கும் அவலம்.

பிற மொழிகளும், பிற தேச சிந்தனைகளும்
21ம் நூற்றாண்டுக்கான பயணத்தை
தயார் நிலையில் எதிர்கொண்டு நிற்கும் போது –
நாம் மட்டும் ஏன் கூனிக்குறுகிப் போய்
இன்னும் இந்தப் புழுதியும் அழுக்கும் தோய்ந்த
சகதியினுள் வீழ்ந்து கிடக்கின்றோம்?

உலகத் தரத்திற்கு ஒப்பான தமிழின் சிந்தனை எது?

ஏன் நாம் துடுப்பு வலிக்க
சக்தியற்றவர்களாக கைசேதப்பட்டு –
அலையின் மூர்க்கத்தினுள் அள்ளுண்டு கரையில் தேங்கிய
குப்பையாய் மாறிவிட்டோம்.

வணிகச் சூழல் நமது தமிழ்ச் சூழலை
விழுங்கி ஏப்பமிட்டு நிற்கின்றது;
ஆபாசமும் வெறும் கிறுக்கல்களும்
நமது வாசிப்புக்குரியதாய் விட்டது.
அதன் ஏப்பத்திலிருந்து வெளிவரும் துர்வாடையை
சகிக்க முடியவில்லை.
இங்கு பெரும்பாலானவர்களின் சுவாசக் குழாய்கள்
இத்துர்வாடைக்கு இசைவும் இயல்பும் அடைந்து விட்டன.

நமது தமிழ்க் கவிதை, நமது தமிழ்ச் சிறுகதை,
நமது தமிழ் நாவல், நமது தமிழ் சினிமா,
நமது தமிழ்ப் பத்திரிகை, நமது சிந்தனைகள் எங்கே?
இன்று வெறும் குப்பை கொட்டிக் கொண்டிருக்கும்
இவைகள்தான் நமது அறுவடைகள் என்றால் –
நமது நிலை குறித்து நாம் வெட்கப்பட வேண்டும்!

இனப் போரினுள் இருபது வருடங்களை
நாம் கழித்து விட்டிருக்கின்றோம்;
இராணுவ ஆதிக்க நெருக்கடிமிக்க சூழலே
நமது வாழ்வாய் உள்ளது.
ஆயிரக்கணக்கான உயிர்களுக்கு சமாதி கட்டப்பட்டிருக்கிறது.
இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து இருக்கின்றனர்.
அகதிகளாய் மக்கள் அல்லாடி நிற்கின்றனர் –
இனப்படுகொலைகளும், இனச்சுத்திகரிப்பும்
நமது மண்ணில் நடந்து விட்டிருக்கின்றன –

கண்ணீரும், மரண வீடுமே நமது அடையாளங்கள்.
இந்த நெருப்புக் கிடங்கிலிருந்து எப்போது நாம் எழுவது?

**- ஆசிரியர் -**

''மூன்றாவது மனிதன்'' 6வது இதழ் இது! ஈழத்து தமிழ்ச் சூழலில் ஒரு சிறு சஞ்சிகையை தொடர்ச்சியாகக் கொண்டு வருவதில் உள்ள தடைகள் ''மூன்றாவது மனிதன்'' தொடர்ச்சியாக வெளிவராமல் இருப்பதற்கான பிரதான காரணங்களில் ஒன்றல்ல.

தொடர்ச்சியாக வெளிவராமல் இருப்பதற்கான பிரதான காரணம் - படைப்பாளிகளிடமிருந்து உரிய காலத்திற்குள் காத்திரமான படைப்புகள் கிடைக்காமையேயாகும்.

இவ்விதழிலிருந்து தொடராக காலாண்டிதழாக கொண்டுவர வேண்டும் என்பதிலுள்ள உறுதியையும் நோக்கையும் நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். படைப்பாளிகள், வாசகர்களாகிய உங்கள் துணை இருப்பின் மாத்திரமே - அடுத்த இதழ் குறித்த காலத்தில் உங்கள் கையில்.

நீங்கள் இதுவரை காட்டிய அக்கறைக்கும் ஆதரவுக்கும் நன்றி - மூன்றாவது மனிதனை உங்கள் சக ஆர்வலர்களுக்கும் அறிமுகப் படுத்துங்கள்.

எழுதுங்கள்! வாசியுங்கள்! விவாதியுங்கள்! நமக்குள் இருக்கும் வெளிச்சங்கள் துலங்கட்டும்!

ஆ-ர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பலஸ்தீனப் பெண் கவிஞர்களின் கவிதைகள்

தமிழாக்கம் : எம்.ஏ.நுஃமான்

## ஆயிஷாவுடன் என் கடைசி நாள்!

இப்போது எனக்கு நினைவிருப்பதெல்லாம்
நாங்கள் பேசாத சொற்கள்தான்

காற்று அவற்றை உயரே எடுத்துச் சென்று
இரவில் வானத்துள் வீசியது
சந்திரன் நட்சத்திரங்களை எண்ணியவாறு இருந்தது

சொல்வதற்கு உன்னிடம் நிறைய இருந்தன
ஆனால் மௌனம் நம்மைச் செவிடாக்கியது
வேதனையால் மௌனித்து
ஜெருசலம் தன் குழந்தைகளைப் புதைப்பதைப்
பார்த்தவாறு நாம் உட்காந்திருந்தோம்

அந்தச் சிறிய புதைகுழியில்
நான் எனது கையை வைத்தேன்
ஒரு கண்ணீர்த் துளியை வழியவிட்டேன்

நாம் இருவரும் கவனித்ததைப்போல்
அது மிகவும் சிறியது
ஊர்க்குருவியின் உடைந்த சிறகுகளையும்
இரத்தம் தோய்ந்த தலையையும்
எனது மென் துப்பட்டியால் போர்த்தினேன்

ஜெருசலத்தின் துயரத்தின் கரையில்
முஅத்தீனின் அழைப்பு ஒலித்தபோது
அதை நான் மக்காவை நோக்கித்
திருப்பி வைத்தேன்

இப்போது மௌனமாக
அசைவற்றுக் கிடக்கும் ஊர்க்குருவியைப்போல்
அந்த இரவின் இருண்ட தனிமையில் திரும்பிவர
நீ ஒரு போதும் சுதந்திரமாய் இருந்ததில்லை

பலஸ்தீன் மீதுள்ள உனது காதல்
ஆகாயத்தைக் கொழுத்தி உயிர்ப்பிக்கும்படிக்கு
வலிக்கும் உன் உடலை
நீ பூமியின் விளிம்பின்மீது வைத்தாய்

இப்போது எனக்கு நினைவிருப்பதெல்லாம்
நாங்கள் பேசாத சொற்கள்தான்

காற்று அவற்றை உயரே எடுத்துச் சென்று
வானங்களுக்குள் வீசியது
சந்திரன்
நட்சத்திரங்களை எண்ணியவாறு இருந்தது.

## நாடு கடத்துதல்

அவர்கள் என்னைப் பிடிக்க வருமுன்
நான் என் குரலை எடுத்து
உதயத்தின் கீழ் மறைத்துவைத்தேன்

ஆகையால்
இரத்தம் ஒழுகும் என் வாயை
என் முறிந்த கைகளை
பார்வையற்ற என் விழிகளை மட்டுமே
அவர்கள் கண்டுபிடித்தனர்

ஏமாற்றத்தை வளர்த்துக்கொண்டு
என் நாட்டின் ஒவ்வொரு மூலைக்கும்
அவர்கள் சென்றனர்

என் குரலின் ஓசை இடிமுழக்கம் போல
அவர்களின் தலைகளைப் பிளந்தது
அவர்களின் நாளங்களின் ஊடே
எனது துயரம் பீறிட்டுச் சென்றது

பின்னர்
இரத்தம் ஒழுகும் என் வாயை
என் முறிந்த கைகளை
பார்வையற்ற என் விழிகளை எடுத்து
உலகின் விளிம்புக் கப்பால்
வீசி எறிந்தனர்

ஆகையால் அவர்களிடம் நான்
என் குரலை விட்டுச்சென்றேன்

அது என் தாய் நாட்டின் மீதான
காதல் பாடல்களைப் பாடுகிறது

ஒருபோதும் அவர்களால்
அதைப் புரிந்துகொள்ள முடியாது
தழுவிக்கொள்ள முடியாது
உரிமைகொள்ள முடியாது

- அமினா கசக் -



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு புதிய படைப்பு



நான் ஜுனில் பிறந்தேன்

அதனால்தான்
என் கண் இமைகள்
முட்களால் அடையாளம் இடப்பட்டுள்ளன
அதனால்தான்
நான் என் கண்களில் இருந்து
வேதனை மிகுந்த இரவை அகற்ற
உதயத்திற்காய் காத்திருக்கிறேன்

நான் ஜுனில் பிறந்தேன்

அதனால்தான்
என் பெயரை மாற்ற
அலுகோசு முயன்றுகொண்டிருக்கிறான்
அவன் தன் மீசையை நறுக்கிக்கொண்டு
என் சிறையின் வெடிப்புகளைக் காவலிடுகிறான்
என் தசையினைப் புசிக்க
வேட்கைகொண்டலையும்
விலங்குகளுக்காக
திறந்த வெளியை விட்டுவைத்திருக்கிறான்

நான் பிறந்தது ஜுனில்
அதனால்தான் அவர்கள்
திருடிய என் உடைகளாலும்
என் சப்பாத்துகளாலும்
என் கோட்டினாலும்
ஓராயிரம் வெருளிகளை உருவாக்கி
நஞ்சூட்டிய அம்புகளை அவற்றுள் செருகி
என் நிலம் எங்கும் நட்டுவைத்துள்ளனர்
என் பாட்டனின் வாளை ஒளித்துவைத்துள்ளனர்
அவரின் எச்சங்களை
என் கண் எதிரே விலைகூறி விற்கின்றனர்

ஜுனில் நான் பிறந்தேன்
நான் மீண்டும் ஜுனிலே
உயிர்பெற்று வந்தேன்

அதனால்தான்
உதயத்துக்காகக் காத்திருக்கிறேன்
நரம்புகளோடும்
தசையோடும்
கண்களோடும்
காத்திருக்கிறேன்

அதனால்தான்
இன்னும் நான்
குழந்தைகளைப் பெறுகிறேன்
சித்திரவதை இரவில்
விலங்குகளிடம் இருந்து
என் உணவைப் பாதுகாக்கிறேன்

மேலும் அதனால்தான்
என் பண்டைக்கால ஒலிவம் கிளை
படைப்பின் நடுக்கத்தினால்
இருபது ஆண்டுகளின் பின்
என் கையில்
ஒரு நெருப்புச் சவுக்காக மாறி
மீண்டும் விழிப்புற்று எழுந்தது

- லைலா அல்லூஹி -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## புதைத்துக் கொல்லுதல்

இந்த இடம்
நடுகைக்கு ஏற்றதல்ல

இங்கு நிலம் காய்ந்து
வரண்ட தரிசாய் உள்ளது
காய்ந்த இலைகளின் ஊசி முனைகள்
கீறி விறாண்டுகின்றன

நான் கண்களை மூடுகின்றேன்
புழுதி என் தொண்டையை அடைக்கிறது
நிலம் இவ்வளவு பாரமாய் இருக்குமென்று
நான் ஒரு போதும் நினைத்ததில்லை

சிலவேளை எனது கரம் ஒன்றை
நான் வெளியே நீட்டக் கூடும்
ஒரு நாள் என் புதைகுழியைக்
கடந்து செல்லும் ஒருவன்
பின்னிரவு வேளைகளில் காட்டப்படும்
திகில் படங்களில் வருவதுபோல்
உயிரற்ற ஒரு கையை
விரல்கள் பாதி சுருண்டு
விரிந்த உள்ளங்கையைக்
கண்டு அலறுவான்

அன்று நான் சாகவில்லை
வேறு எதுவோதான் செத்தது
தன் இருளின் அறிவை
நொதிக்கவிட்டவாறு
அழுகி நாறும் புதைகுழியில்
அது இன்னமும் கிடக்கிறது

ஜுன் 1988

(1988 பிப்ரவரியில் நப்லஸக்கு அண்மையில் உள்ள சலீம் என்ற கிராமத்தைச் சேர்ந்த இசாம் ஷபீக் இஷ்தையே, அப்துல் லத்தீப் இஷ்தையே, முஹ்சின் ஹம்துன், முஸ்தபா அப்துல் மஜீத் ஹம்துன் ஆகிய நான்கு இளைஞர்களை இஸ்ரவேல் இராணுவத்தினர் உயிருடன் புதைத்தனர். படையினர் சென்றபின் கிராமவாசிகள் அவர்களின் சடலத்தைத் தோண்டி எடுத்தனர்)

- ஹனான் மிக்காயில் அஷ்ராவி -

## மரண தண்டனை

"கட்டளை இதுதான்
விடியமுன்னர் செய்த்தா அழிக்கப்படும்
எல்லாரும் வெளியேறலாம்"

ஆயினும் நாங்கள்
இறுகப்பற்றி அணைத்து நின்றோம்
பாடினோம்: செய்த்தா எங்கள் பூமி
பூமியின் இதயம்,
நாம் அதன் கிளைகள்

எனினும் மக்கள் வீழ்ச்சி அடைந்தனர்
சிறிது நேர எதிர்ப்பு,
பின்னர் இரவுகளின் எல்லை தாண்டி
அழிவற்ற ஒரு அணைப்பாக மட்டும்
செய்த்தா எஞ்சி இருக்கிறாள்

வினாடிகளில் அவள் கற்குவியலானாள்
ஒரு சிறு அடுப்புக்கூட மிஞ்சவில்லை
மனிதரும் கற்களும் அரைக்கப்பட்டு
புழுதியாய் மாறினர்
சாத்தியமற்றதின் வெளிச்சத்தில்
என்றைக்குமாகத் தூவிக் கலந்தனர்

இப்போது மாலை வேளைகளில்
எமது காற்றின் பாடலில்
சமவெளிகள் மேலாக
தன் கருஞ்சிவப்புத் தீப்பொறிகளைக்
கனலவிட்டவாறு செய்த்தா எழுகிறாள்
காலையில் செய்த்தா
வயல்களுக்குத் திரும்புகிறாள்

டியூலிப் மலர்களைப்போல்
செய்த்தாவில் இரவுதான் காலை
இரவுதான் காலை

- சுலஃபா ஹஜாபி -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கிட்டத்தட்ட நான்கு வயது சிறுமி ஒருத்தியின் நாட்குறிப்பிலிருந்து....

நாளை கட்டை அவிழ்ப்பார்கள்
எனக்கு யோசனையாக இருக்கிறது
எஞ்சியிருக்கும் என் ஒற்றைக் கண்ணால்
அப்பிள் பழத்தின் ஒரு பாதியை மட்டும்
தோடம் பழத்தின் ஒரு பாதியைமட்டும்
என் தாயின் பாதி முகத்தை மட்டும்தான்
என்னால் பார்க்க முடியுமா?

துப்பாக்கிக் குண்டை நான் பார்க்கவில்லை
என் தலைக்குள் வெடித்த
அதன் வலியை மட்டுமே உணர்ந்தேன்
பெரிய துப்பாக்கியுடன்
நடுங்கும் கைகளுடன்
கண்களில் ஒரு வெறித்த பார்வையுடன்
அந்த ராணுவ வீரன்
என் மனதில் அழியாதிருக்கிறான்
அதைத்தான் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை

என் மூடிய கண்களால் இவ்வளவு தெளிவாக
அவனைப் பார்க்க முடியுமென்றால்
எங்கள் தலைகளுக்குள்ளே
நாம் இழக்கும் கண்களை ஈடுசெய்ய
இன்னும் ஒரு சோடிக்கண்கள் உள்ளன போலும்

அடுத்த மாதம் என் பிறந்த நாளுக்கு
முற்றிலும் புதியதோர் கண்ணாடிக் கண்
எனக்குக் கிடைக்கும்
சிலவேளை பொருட்கள் நடுவில் தடித்தும்
வட்டமாயும் தெரியக்கூடும்
நான் விளையாடும் கண்ணாடிக் குண்டுகள் ஊடே
நான் உற்றுப் பார்த்திருக்கிறேன்
அவை உலகத்தை வினோதமாய்க் காட்டும்

நான் கேள்விப்பட்டேன்
ஒன்பது மாதக் குழந்தை ஒன்றும்
ஒற்றைக் கண்ணை இழந்ததாக

என்னைச் சுட்ட ராணுவ வீரன்தான்-
தன்னை உற்றுப் பார்க்கும்
சின்னஞ் சிறுமிகளைத் தேடும்
ஒரு ராணுவ வீரன்தான்-
அவளையும் சுட்டானோ என்று
எனக்கு யோசனையாக இருக்கிறது

நானோ வளர்ந்தவள்
கிட்டத்தட்ட நாலு வயது
போதிய அளவு நான்
வாழ்க்கையைப் பார்த்துள்ளேன்
ஆனால் அவளோ சின்னக் குழந்தை
எதுவும் அறியாச் சின்னக் குழந்தை

**- ஹனான் மிக்காயில் அஷ்ராவி -**

(ருஷா ஹெவ்சிப்யே 1988 மார்ச் மாதத்தில் ஒரு கண்ணை இழந்தாள்.இஸ்ரேல்வீரன் ஒருவன் றப்பர் குண்டுகளால் சுட்டபோது அவள் கண்ணை இழக்க நேர்ந்தது. அச்சமயம் றமல்லாவுக்கு அண்மையில் உள்ள அல்-பிறெஹ் என்ற ஊரில் தன் பாட்டியின் வீட்டு மாடியில் றஷா நின்றுகொண்டிருந்தாள். அச்சமயம் அதேபோன்று வேறு இரண்டு குழந்தைகளும் (இருவரும் 9 மாதவயது உடையவர்கள்) ஒவ்வொரு கண்ணை இழந்தனர். இன்திபாதா இயக்கத்தின் ஏழாவது மாதத் தொடக்கத்தில் சுமார் 40 பேர் இதேபோல் பாதிக்கப்பட்டனர்.)



### அவனது படம்

. அவனது சடலம்
தூக்கு மேடையில்
காற்றில் அசைந்து கொண்டிருக்கையில்
அவனது படம் இன்னும் சுவரில் தொங்குகிறது
வெதுவெதுப்பாகவும் பிரகாசமாகவும்

தயவுசெய்து கவனி
காற்றுக்கு அது ஒரு திறந்த அடையாளம்

ஓ காற்றே
அவனது உடலின் காயங்களைத் தடவிக் கொண்டு
நான்கு திசைகளுக்கும் நீ செல்கையில்
தூங்கும் குழந்தைகளை எழுப்பி விடாதே
அல்லது காத்திருக்கும் நட்சத்திரங்களுக்குச் சொல்
கொலைக்கள வீதியில்
அவர்கள் அவனைத் தூக்கிலிடும் போது
அவனது படம் சுவரில் இன்னும் தொங்குகிறது
வெதுவெதுப்பாகவும் பிரகாசமாகவும்.

**- சுலஃபா ஹஜாபி -**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# பனி மலை

எம்.ஐ.எம். றஊப்

ஆற்றின் கரையோரம். குறுக்குப் பாலத்திற்கு மிக அருகில். கருஞ்சிவப்பில் அடர்ந்து மூங்கிற் புதர். புதருக்குக் குடை விரித்து சாமரம் வீசும் போதிமரம். ஓங்கி வளர்ந்து, அகன்ற பிரமாண்டம் கொண்ட மரம். அதன் கீழே ஆற்றை நோக்கி புத்த முனியின் ஏகாந்த சம்மாரம். உலகில் அகிம்சை மனக்கண்ணில் விரிய, பார்த்துப் பார்த்து பரவசம் கொண்டு கண்மூடி மௌனித்திருக்கும் சித்தார்த்த குமாரனின் சமாதிநிலை. பார்வை கொள்ளும் ஒரு கணத்தில் மனதில் கிளர்ச்சியை ஊட்டும், பரவசத்தைத் தவிர்க்கும் அசைவற்ற பாவம்.

ஆற்றில் தவழ்ந்து மேலெழும்பும் காற்று. போதி மரத்தின் இலைச் சிலுசிலுப்பு. அதில் மோதுண்ட வண்ணம் வானுயர்ந்த விகாரை. விகாரையின் தாழ்வாரம். அதனடியில் சித்தார்த்த முனியை வருசித்த பிக்குகளின் தொடர்மாடம். மாடத்தின் இரு தூண்களைத் தொடுத்துக் கட்டியபடி கொடிக் கயிறு. காவிவஸ்திரங்களை தாங்கியபடி ஆடிக்கொண்டு அது.

துறவிகள் மரணத்தைக் காத்துக் கொண்டு, பிணி, மூப்புக் கொண்ட துறவிகள். தினம் முகம் வளித்துக் கொண்டதனால் உதட்டின் மேலும், நாடியிலும் பாசி நிறம் கொண்ட துறவிகள். அம்மாவின் முகம் நினைத்து, ஏக்கத்தை ஏந்திக் கொண்ட துறவிகள். வீட்டுத் தோழர்களும், தோழிகளும் உலாவர, பழந்தின்னி வௌவால்களின் நட்பினை இன்னும் மறவாத, எப்போதும் பால்வடியும் முகத்தோடு சின்னத் துறவிகளின் முடி சிரைத்த தலைகள்.

மலர்க் கூடைகளைப் பரப்பிக் கொண்டு பெட்டிக் கடைகள், விகாரை வாசலை களை கொண்டதாக்கி வெண்மையும், மஞ்சளுமாக கூடை நிறையப் பூக்கள். மனசுக்கு மகிழ்ச்சியைத் தருகின்ற காட்சி. மாதத்தில் வரும் பௌர்ணமி நாட்கள் ரம்மியத்தையும், பவுத்திரத்தையும் சுமந்து கொண்டு விளங்கும் விகாரை.

தெற்கில் மலைச் சரிவில் அடியில் ரயில் நிலையம். கிழக்கு நோக்கி நகரமாட்டாத மட்டோடு முடிவுறும் தண்டவாளங்கள் தினமும் காலை மாலைகளில் வந்தடையும், மேற்கிருந்தும் புறப்பட்டும் வரும் வண்டிகள் மேகக் கூட்டங்களை ஊடறுத்து, சில்லென்ற பயங்கர இரைச்சலுடன் சுரங்கப் பாதைகளில் புதையுண்டு எழும் வண்டிகள். ஊவாவின் வனப்பை தரிசித்து வரும் வண்டிகள். ரயில் நிலையங்களில் ஜீனியஸ் மலர்களையும், பாபடாஸ் பூக்களையும் கண்ட களிப்பில் வரும் வண்டிகள். டீசல் கசிவில் வழுக்கி ஓடும் நீர்த்துளித் தாரைகள் போர்த்தபடி வந்து நிற்கும் வண்டிகள். சூடு பரவி, பனிப்புகார்கள் கலையும் கணங்களில் வந்து நிற்கும் வண்டிகள். சூடு தணிந்து பனிப்புகார் கூடும் வேளையில் வந்து நிற்கும் வண்டிகள்.

ரயில் வரும் தறுவாயும், ரயில் ஏறும் தறுவாயும் நிலையம் கலகலப்புக் கொண்டு நிற்கும். சிங்களமும், தமிழும் காற்றில் கலந்து ஆற்றில் தவழும். போதி முனிவனின் மோனத்தில் புதைந்து, மேலெழுந்து போதி மரத்தில் பட்டுக் கலகலத்து மகிழும். வானுயர்ந்த காற்றில் கலந்த பாஷைகள், சித்தார்த்தனுக்கு உவகை கொண்ட விசயங்கள்.

ரயில் நிலையத்தில் தொடங்கும் பள்ள வீதி, பள்ளிவாசல், பாலம், விகாரை, தியேட்டர், முருகன் கோயில் என வந்து தேவாலயத்தில் முடிவுறும் பள்ளவீதி. வீதியின் இரு மருங்கும் கடைகள். பொடிபண்டா பேக்கரி. அம்பாள் சைவ ஹோட்டல், முஸ்லிம் சாப்பாட்டுக் கடை என இத்தியாதி. சுது மெனிக்கையை வாழ்க்கைத் துணையாகக் கொண்ட நாடார் முதலாளி. சுந்தரலிங்கம் மாஸ்டர் பெண்சாதி பௌசியா டீச்சர். கசாப்புக் கடைக்காரனில் காதல் கொண்டு, அவனோடு வந்து விட்ட, அவனோ உலகமென்று உதைபட்டுக் கொண்டு வாழும் புஞ்சி மெனிக்கே, கலியாணம் முடித்து அடுத்த வருடமே சீக்காளியான சக்கரியாவுக்கு மலம், சலம் அள்ளிக் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கும் பொட்டு. ராலகாமியோடு ஓடிப் போய் சொத்துச் சுகத்துடன் வாழும் சியானா பேகம். சிங்களத்தில் பெண்ணெடுத்து வாழும் சிவா டெக்டர். எல்லாமே பள்ளவீதிக்கு அழகு.

ஏகாந்த சம்மாரத்தில் இருந்து கொண்டு மக்களின் வனப்பையும், வாழ்வையும் காண்பதும் மகிழ்வதுமாய் சித்தார்த்தன். உலகு அவன் பார்வைக்குள் அடங்கி பிரபஞ்ச ஒளியை நோக்கியதாக தன் போதனை ஜெயம் கொண்ட கழிப்பில் புத்தன்.

பனிப்புகார் வேளையில் மாலையாகிக் கொண்டு வரும் விருட்சங்கள் அமைதி கொண்டு, பனித்துளிகளைச் சுமந்தபடி இலைகள். பனிப்புகாருக்குள் அழிந்து, மின் விளக்குகளின் வெளிச்சத்தில் புகைந்து எழும் மூட்டத்துள் புகுந்த கலக்கும் பண ஒலி. பரவும் பனி மூட்டத்தை தடவிக் கொண்டு அலையும் பள்ளிவாசல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாங்கொலிகள். யூப்கலிஸ்ட் மரங்களின் இலைகளை தழுவிக் கொள்ளும் மாதாகோயில் மணியோசை. சூடங்காட்டி சுடர்விட்டெழும் கற்பூர வாசனை நிறைந்தபடி முருகன் சந்நிதானம்.

நிஷ்டை கலைந்தெழுந்த புத்தனுக்கு பூரித்த சந்தோசம். வஸ்திரத்தைக் களைந்து ஆற்றில் குளிக்க ஆசை. படியிறங்கி பாதத்தைத் தொட்டவேளை சில்லென்ற சீதளம். உடலெங்கும் புகுந்து ஆற்றில் கரைந்தது மைத்திரி புத்தனின் சர்வாங்கம்.

மலைகள் சூழ அகன்று, பரந்த சமநிலம், சமதரையின் ஓரத்தே தெற்காக ஓடும் ஆறு. மேற்கிருந்து துள்ளிக் குதித்து கிழக்கு நோக்கித் தவழும் ஆறு. ஒரு மைல் தொலை கடந்ததும் வடக்கு இறங்கி ஓடும் ஆறு. இரு புறமும் உயர்ந்து நீர் நோக்கித் தாழ்ந்த மூங்கில் புதர்கள் அணிவகுக்கும் ஆறு. குறுக்குப் பாலத்தின் கீழே முருங்கை நீளத்துக்கு நீண்ட, வீட்டுத் திண்ணையை ஒத்த பாறைகள் மீது சலசலத்துப் புரளும் ஆறு. மிகுந்த வெயிற் பொழுதில் பழிங்கு போல தணிந்து ஊரும் ஆறு. மேற்கில் மழை தொடங்கப் பெருக் கெடுத்து பிரவாகிக்கும் ஆறு. சுரி கலந்து கிறவல் வண்ணத்தில் நுரைத்துப் பொங்கும் ஆறு. துள்ளலுடன் அள்ளுபட்டு, நீர்ச்சுழிகளில் புதைந்து, தாண்டு நிமிர்ந்து பின் மிதக்கும் மரங்களும், மட்டைகளும் சுமக்கும் ஆறு. கருப்பட்டிச் சாலைகளுக்கு நீர் மொள்ளும பெருங்குழாய்கள் இடைமறிக்கும் ஆறு. ஞாயிற்றுக் கிழமைகளில் பாலத்தடி கூடும் சந்தைக் கழிவுகளை அள்ளிக் கொண்டோடும் ஆறு. குடிக்க, குளிக்க, துவைக்க அனைத்திற்கும் உதவும் ஆறு.

ஈரம் சொட்டச் சொட்ட அங்க வஸ்திரத்தைப் போர்த்திக் கொண்டான் புத்தமுனி. கூதலும், குளிரும் கலந்த கதகதப்பில் ஊவாவும் உலகும். அதனூடே விரியும் பிரபஞ்சமும், ஆற்றைக் கடந்து கவடெடுத்து மலைக்குத்தாவி உயர்ந்தான் முனி.

தேயிலைச் செடிகள் படர்ந்து, நிறைந்த சாரல் கொண்ட மலைகள். ஒன்றை ஒன்று தொட்டுத்தடவி நெகிழ்ந்து புணரும் மலைகள். அலை அலையாய்ப் பள்ளங்கள் பரவி, சிறு தொலைவில் தடித்துப் பின் புடைத்து எழும்பும் மலைகள். புடைப்பில் சிறு மேட்டுடன், குனிந்த பார்வையில் செங்குத்தாய் கீழிறங்கும் விளிம்பு கொண்ட மலைகள். தொலைவில், மேகத்தைத் தொடும் புகை எழுப்பும் ஆலைகள் அணி சேர்க்கும் மலைகள். ஏறு பள்ளத்தில் தொடங்கி, வளைந்து சென்று உச்சியைத் தொடும் பாதைகள் சூழ்ந்த மலைகள். இரு கண்களினதும பார்வைக்குள் விசாலமும், பரப்புமாக வியாபித்து நிற்கும் மலைகள். பார்வை கொள்ளும் மட்டும் தேயிலைப் புதர்கள் அடர்ந்து கிடக்க திடீரென மேலெழும்பி கவனத்தை ஈர்த்து, மூக்கு நுனியை உராய்த்தபடி பார்வை உயரும் உயர் மரக்காடுகள் நிரம்பிய மலைகள். சில்லென்ற குளிர்ச்சியுடன், காற்றில் பனிக்கும் நீர்த்துளிகள் தருகின்ற, சலசலத்த விழும் அருவிகள் ஊற்றெடுக்கும் மலைகள். பாதையின் இரு மருங்கும் கண்களைக் கொள்ளைமிட்டு, மனசில் கிளர்ச்சியை வரவிக்கும் மஞ்சள் பூஞ்செடிகள் வாழும் மலைகள். திரண்ட பனி மூட்டங்கள் மோதி, சீதளத்தை ஊட்டி, உடலைப் புல்லரிக்கச் செய்கின்ற மலைகள். எங்கும் மலைகள். எதிலும் மலைகள். பொங்கும் மலைகள். புணரும் மலைகள். உயரும் பார்வை கொள்கின்ற இடமெல்லாம் மலைகள்.

ஆடிமாதப் பௌர்ணமியில் ஒளிபட்ட இடமெல்லாம் புத்தன். மனசுக்கு உவப்பான முழு நிலா இரவு. பவுத்திரம் கொண்டு மிளிரும் விகாரை. நிறையவரும் பெண்கள். வெள்ளைச் சீலை உடுத்தி, எண்ணெய் கொண்டு தீபம் கொழுத்தும் பெண்கள். சட்டையும், துண்டும் கட்டிக் கொண்ட சின்னப் பெண்கள். எல்லோரும் கையில் பூத்தட்டை ஏந்திக் கொண்டு வருவார்கள். போதி முனிவனின் பாதங்களில் மலர்களைக் குவித்து, முழந்தாளிட்டு கிடப்பார்கள்.

ஓடும் ஆற்றின் சலசலப்பு. போதி விருட்சத்தில் ஆடும் இலைகளின் சிலுசிலுப்பு மலைகளில் எதிரொலித்து காதுகளில் சங்கமமாகும் பண ஒலிகள். பூரண நிலாக் காய்ந்து கொண்டிருக்க போதிமரத்தை தடவி சிலுசிலுத்து ஓடி, ஆற்றில் பட்டதும் சிலிர்க்கும் காற்று. நள்ளிரவில் படியத் தொடங்கி விடியம் வரை குளிரும் கூதல். கூதல் வேளையில் கண் துஞ்சாது விழித்தபடி பண ஓதும் பிக்குகள். எப்போதும் தன்னை சித்தார்த்த குமாரனாய் உருவகித்துப் பெருமிதம் கொள்ளும் மூத்த பிக்கு.

புத்தன் கண் விழித்த போது ஆடிமாத முன்னிரவில் ஒரு நாள். அலங்காரத் தேர் ஊர்ந்து செல்ல இழுத்த வண்ணம் பக்தர்கள். அலங்காரத் தேர் ஏறி நகர்வலம் வந்து கொண்டிருந்தான் முருகன். கும்பம் வைத்து, கற்பூரம் கொழுத்தி தெரு முழுக்கச் சனங்கள். சனுபா பேகமும், மல்காந்தியும் சரஸ்வதி கொடுத்த கற்கண்டை நினைத்துக் கொண்டார்கள். என்ன ஆர்ப்பாட்டமான தேர்வருகை. வியப்பும், மகிழ்வும் போதி சத்துவனுக்கு உண்டாயிற்று. ஆனந்தம் மனதில் களிபுரள மீண்டும் மோனத்தில் ஆழ்ந்தான்.

தங்கட சாதியில் பெண் கொண்டதற்காக, சிவாவின் ஆனுடம்பை வெட்ட மீன்கடை லொக்குபண்டா தலைமையில் பெரும் கும்பல். தலைக் கேறிய நிறை போதையும், கையில் மீன் வெட்டுக்கத்திகளுமாக சிவா டொக்டரின் வீட்டைத் தட்டிய வண்ணம் கும்பல்.

தன் முன்னாலேயே தன் மனைவி மானபங்கம் செய்யப்பட்டதை காண வேண்டியதாயிற்று சுந்தரலிங்கம் மாஸ்டருக்கு. மனைவியைத் துவம்சம் செய்தவர்கள் தன்னைக் கொல்லாத விட்ட பாவம் மனசை அழுத்தியது சுந்தரலிங்கத்திற்கு. பௌசியாவுக்கு ஆறுதல் கூற சுந்தரலிங்கம் இருக்கவில்லை. சுருக்கிட்டுத் தானே மாண்டு போனார்.

என்ன அவலம். தன்னோடு, மறியல்கடை சந்தியில் அந்தியானதும் கட்டுச் சம்பலும் ஆப்பையும் தின்னும் நண்பர்களால் நடார் முதலாளியின் இளைய மகன் பரிகாசம் செய்யப்பட்டான். பாஹயாய்.... பாஹயாய் வார்த்தை கொண்டு குணே கேலி செய்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இத்தனைக்கும குணேயும் அவனும் ஒரே வகுப்பு மாணவர்கள்.

புச்சர் கடை சேகு நானா ஜிஹாத்துக்குப் போய் வெற்றி கொண்டு கனிமத்துப் பொருட்களுடன் வீடு வந்தான். முத்திய வெறியும், ஒரு கோணி நிறையப் பொருட்களுமாக வந்தான். வழமையான வசைபாடி, புஞ்சி மெனிக்கேக்கு அன்று அவன் உதைக்கவில்லை. புச்சர் கடை சம்பாத்தியத்தில், தன் தாம்பத்ய வாழ்விலே மெனிக்கேயிக்கு வாங்கிக் கொடுத்திராத பண்டங்களை கொண்டு வந்திட்ட பெருமை சேகு நானாவுக்கு. நானாவின் துப்புக் கெட்ட தனத்தை மெனிக்கே தூசித்தாள். மனதில் பொங்கி வரும் ஆத்திரத்தைக் காட்டி வசை பாடினால் அவனோடு இத்தனை காலமும் அடிபட்டக் கொண்டு வாழ்ந்ததன் சாரமே பொய்யாக எண்ணி பெருமூச்சு விட்டாள். சேகு கொண்டுவந்த பொருட்களைத் தீயிட்டுக் கொழுத்தினாள். சருவச் சட்டியில் கிடந்த பொலஸ் காயை எடுத்து அவனுக்கு மொத்தினாள். இது வரையும் அவளை இக்கோலம் காணாத சேகு வியப்பும், பயமும் கலந்து, மெனிக்கே.... மகே மெனிக்கே... என்று கத்தி போதை இறங்கிப் பின் பெரு மௌனமானான்.

சக்கரியாவுக்கு.... ஏலாதானே. நீங்கள் நமக்கு சப்போர்ட் தாரதானே... பொட்டு நீங்க மிச்சம் நல்லம். கதைக்கும் சோமரத்தின பொட்டைத் தொட்டு ஆசை தீர்க்கப் பார்த்தான். கிழிந்த மேற்சட்டையுடன் ஓடி வந்த பொட்டு சகலதையும் சொல்லி அழுதாள். சிக்காளி சக்கரியா தம்பிமாரும், தாத்தா பிள்ளைகளும் சோமரத்தினாவை துரத்திக் கொணடோடி, பிங்கிக் கருகில் பந்தாடினார்கள். மகே அம்மே... ஹகண்ட எபா... சோமரத்தினவின் அபயக்குரல் பொட்டுக்குக் கேட்டுக் கொண்டே இருந்தது. சில கணங்களின் பின், அவளை நினைத்து தானே சிரித்துக் கொண்டாள் பொட்டு.

சியானா பேகம் எங்காளமிட்டுச் சிரித்தாள். தன் கணவனுக்கு வியாபாரப் போட்டியாளன் லிலா டெக்ஸ் டைல்ஸ் கடை தீப்பற்றி கொழுந்து விட்டெரிந்த புகையில் துணிவாடை மணம் விளைந்து சியானாவின் மனதில் திகட்டியது. ஊ... ராலகாமியை கட்டிப் பிடித்து முத்தினாள் பேகம்.

முஸ்லிம் ஹோட்டல் சஹீட் நானா தெருச் சண்டியனாய் இருந்து ஹோட்டல் உரிமையானவன். துணிச்சல் மிக்கவன். அம்பாள் ஹோட்டலை தீயிட வந்த கும்பலை தன் வாய்ச்சவடலாலே ஓட்டம் காட்டினான். பின், நள்ளிரவில் உழுந்த மூட்டைகளையும், பருப்பு மூட்டைக ளையும் அவனே தனியனாய் நின்று தன் கடைக்கு மாற்றிக் கொண்டான். முருகன் கோயில் தங்கச்சிலை எதிர்க்கடை பேக்கரி அடுப்புச் சாம்பலில் புதையுண்டு கிடந்ததாம். பேக்கரி பொடிபண்டா பின் இரு நாட்களில் பாண் சுடத் தொடங்கினான்.

எல்லாம் நடந்து முடிந்தாயிற்று. ஜூலை மாதத்தின் கடைசிப் பத்தில் பின்னிரு நாட்களில் எல்லாம் நடந்தாயிற்று. சூழ வர, சரிந்துயர்ந்த கொழுந்து படர் மலைப் படக்கைகள் சாட்சி சொல்ல எல்லாம் நடந்தாயிற்று. பனி மூட்டம் கவியும் மலைகளில் புகைமூட்டம் படர்ந்து போயிற்று. கொழுந்து விட்டெரிந்த தீ நாக்குகள் அடங்கி, புகைமூட்டம் கசிந்து கொண்டிருந்தது.

வழமையான எதுவுமே இல்லாது சோபை குலைந்து கிடந்தது பூமி. மரண அபாயத்திலிருந்து தப்பிய தெம்புடன் முகாம் முழுக்கச் சனங்கள். துவம்சம் நடந்து, வெறியாட்டம் முடிந்த தறுவாயில் ஒலிபெருக்கி வாகனம் நகர்வலம் வந்தது. சுற்றிப்படர்ந்த தேயிலைக்காட்டை ஒலிபெருக்கி மூடிய மோதியதும் புதர்களின் மறைவில் இருந்து எழுந்தார்கள். பலவந்தமாய் முலை கசக்கப்பட்ட பேச்சி பீதியுடன் அப்பாவைப் பின்தொடர்ந்தாள். அழு பிள்ளைக்குப் பால்கொடுத்த மரியாயி சின்னவளைக் கைப்பிடியில் தாங்கிக் கொண்டாள். முனியாண்டியும், பழனியும் பனிக்கு வெடித்த சிராய்ப்புகளுடன் மலையிறங்கி வந்தார்கள்.

அகதி முகாம் பொறுப்பாளரை கூட்டி வந்து, மோதின் அப்பா பள்ளிவாசல் களஞ்சிய அறையை திறந்து விட்டார். ஊறுகாய்ப் பொட்டலமாக களஞ்சிய அறை. நாசி சுருங்கும் துர்வாடை வீச்சம் வீச வீரசாமி, பாக்கியன், பீடாக்கடை துரை.... இது போல பல நூறு சனங்கள். ஹஜ்ஜுக்குப் போய்வந்த தெம்பு போல மோதின் அப்பா சந்தோசம் கொண்டார். எல்லாம் நடந்து பத்தாவது நாள். பீதி, பரபரப்பு, தீவைப்பு கடையுடைப்பு உயிர்க் கொலை, சூறையாடல், பெண் துவம்சம் எல்லாமும் நடந்து பத்தாவது நாள்.

மோனம் கலைந்த கௌதமனுக்கே பேரதிர்ச்சி. தான் காண்பது தன் பாதம்பட்ட பூவுலகா என்கின்ற பரிதாப நிலை. மீண்டும் ஒரு கலிங்கத்துப் போரைக் காண்கின்ற காட்சி. மனத்தில் ஆற்றாமை. தன்னை மீறி சகலதும் நடந்து விட்ட பச்சாதாபம். குலுங்கிக் குலுங்கி அழுதான். கலிங்கத்தின் முடிவில் ஆசுவாசம் கொள்ளாத, குற்ற உணர்வு குதிர்க்கின்ற அசோகனைக் காணாது கண் கலங்கினான்.

மேற்கில் திடீரெனப் பரவிய மேகக் கூட்டங்களோடு வானம் திரண்ட புகார்கள் மோதிப் புணர்கையில் பெரும் சத்தத்துடன் விழுந்த மழைப்பழங்கள்.

ஓவென்ற பேரிரைச்சலுடன் நீர்ப்பிரவாகம். துள்ளிக் குதித்து கிழக்கு நோக்கித் தாவும் பேராறு. இரு புறமும் நீர்நோக்கித் தாழ்ந்த மூங்கில் புதர்களை வாரி இழுத்துக் கொண்டோடும் ஆறு. குறுக்குப் பாலத்தின் சிலிப்பர் கட்டைகளை புரட்டிவிட்டுக் கொண்டோடும் ஆறு. சுரி கலந்து கிறவல் வண்ணத்தில் நுரைத்துப் பொங்கும் ஆறு. பொங்கலுடன் அள்ளுப்பட்டு, நீர்ச்சுழிகளில் புதைந்து, தாண்டு, நிமிர்ந்து பின், மிதக்கும் பிணங்களைச் சுமந்தபடி ஆறு. புத்தனின் கண்ணீர்த்துளிகள் பெருக்கிய அருவியை இணைத்துக் கொண்ட படி ஆறு. மழையில் நனைந்த சாம்பல் நீரை சேர்த்துக் கொண்டபடி ஆறு.

**1999.05.04 இரவு 12.57**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# "பெண்களின் தோள்களின் மீது சுமத்தப்பட்ட பாரம்"

## தீபா மேத்தாவின் 'நெருப்பு'




**சசி கிருஷ்ணமூர்த்தி**

**சசி கிருஷ்ணமூர்த்தி - உரத்துப் பேசத்தெரியாத ஒரு மனிதன். எழுத்தை தனது மனைவி, குழந்தைகளை நேசித்தது போல் நேசித்தவர்.**

**நீண்ட காலமாய் எழுதி வருபவர். திரைப்படம், நாடகம், ஓவியம் பற்றிய அவரது விமர்சனக் குறிப்புகள் மிக முக்கியமானவை.**

**சசி தனது மரணத்திற்கு முன்பு இறுதியாக எழுதிய கட்டுரைதான் இது. "யாழ்ப்பாணத்திற்கு நாளை காலை போய் விடுவேன். இதை கொடுத்து விடுங்கள்" என, நண்பர் சிவகுமாரிடம் கொடுத்து விட்டுச் சென்றவர் திரும்பி வந்து எங்களைச் சந்திக்கவில்லை.**

**1998 செப்டம்பரில் யாழ்பாணத்திற்கும் கொழும்புக்குமிடையில் காணாமல் போன பயணிகள் விமானத்தில் இவரும் இருந்தார். சசி பற்றிய செய்திகள் இன்னுமில்லை. அவரது கட்டுரை நம்முடன் உரையாடுகிறது....**

எந்த உயிரினங்களுக்கும் பாலுணர்வு என்பது முக்கியமானது. அதை அறிவுபூர்வமாக அனுகுபவனும் அனுபவிப்பவனும் மனிதன் மட்டும்தான். ஆயினும் மனிதன் தனது நடவடிக்கைகளினால் சமூக ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கி தன்னுள் ஆதிக்க மனோபாவங்களை வளர்த்துக் கொண்டதனால் பாலியல் சிக்கல்களுள் சிக்குண்டு தவிப்பவனும் அவன்தான். பக்கச்சார்பான ஒழுக்க விதிகளை உண்டாக்கி சமத்துவமான புரிந்துணர்வின் அடிப்படையில் இருக்கக்கூடிய பாலுறவுத் தேவை சமூகத்தில் சிலருக்கு மறுக்கப்படுகிறது. எந்தவொரு சமூகத்திலும் ஏதோ ஒரு வடிவத்தில் எழக்கூடிய பாலுணர்வுச் சிக்கல்கள் அதன் முழுப்பரிமாணத்தில் கலை இலக்கியங்களில் மிகக்குறைந்த அளவிலேயே வெளிப்படுத்தப்படுகின்றன. அதுவும ஆசிய வாழ்வியல் பின்புலத்தில் பாலியல் பிரச்சினைகளை வெளிப்படுத்துவது ஆபாசமானது, தேவையற்றது என்று கருதப்படுகிறது. ஆயினும் உண்மையான ஆபாசத்துடனும் கொச்சைப்படுத்தும் விதத்திலும் வியாபாரரீதியில் பரவலாக எழுத்திலும், காட்சியிலும பயன்படுத்துவது பற்றி யாரும் அக்கறைப்படுவது கிடையாது. இந்த நிலையில்தான் தீபா மேத்தாவின் 'நெருப்பு' (FIRE) என்ற இந்திய வாழ்வை வெளிப்படுத்தும் ஆங்கிலத் திரைப்படம் பல்வேறு வழிகளிலும் பேசப்படுகிறது.

இந்திய சமூகத்தில் பாலுணர்வு ஒளிவு மறைவுக்குரியதொன்றாக என்றுமே இருந்ததில்லை. வாத்சாயணரின் காமசூத்திரம் என்ற நூல் பாலுணர்வு பற்றிக்கூறும் காலத்தில் முந்திய நூல். இதைப் போன்றதொரு நூலை வேறு மொழிகளில் காணமுடியாது என்று பலரும் கருதுவர். இந்திய மதங்களில்கூட விடுதலைக் கோட்பாடு பாலியலோடு இணைந்ததாகவும் இருக்கிறது. கோவில்களில் காணபடுகின்ற சில குறியீடுகளும் சுவர் வரைபுகளும் இவற்றை வெளிப்படுத்துகின்றன. ஆயினும் இன்று பாலியல் ஒளிவுமறைவுக்குரியதொன்றாகவும் அதேவேளை ஆண் ஆதிக்கமும் நிலவும் ஒன்றாகவும் இருந்து வருகின்றது. பெண்களை தமது உணர்வுகளைப் பகிர்ந்துகொள்ளும் நண்பர்களாக அல்லாமல் அவர்களைப் போகப் பொருளாகவே பெரும்பாலும் ஆண்கள் பார்க்கின்றனர். பாலுறவு என்பது முக்கியமாக ஆண்களுக்குரியதொன்றாகவே இருந்து வருகிறது. காமசூத்திரம்கூட ஆண்கள் பெண்களை அனுபவிக்க உதவுகின்ற கண்ணோட்டத்தில் அக்காலத்து ஆதிக்க சக்திகளது தேவைக்கேற்ப எழுதப்பட்டுள்ளது. பாலுறவு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் சமமானதென்பது பரஸ்பர பரிந்துணர்வுக்கும் காதலுக்கும் உரியதொன்றென்பதும் இங்கே மறுக்கப்பட்டுள்ளது. இதனால் இந்திய சமூகம் ஒரு நுகர்வுச் சமூகமாக மாறியுள்ள இன்றைய சூழலில், பெண்களின் உலகு பற்றிய பார்வை விரிவடைந்து வருகின்ற சூழ்நிலையில் வாழ்க்கையில் நிலவும் ஒரு பக்கச்சார்பான பாலியல் பிரச்சினைகள் தவிர்க்கமுடியாத . வகையில் வெளித்தெரிய வருகின்றன.

பொதுவாகவே சினிமா உலகம் ஆண்களின்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆதிக்கத்திற்கு உட்பட்டதாகவே இயங்குகின்றது. பெரும் மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவன மயப்பட்ட இன்றைய சினிமாச் சூழலில் நடிப்பதைத்தவிர வேறு வழிகளில் தமது ஆற்றலை வெளிப்படுத்தவோ பெண்களென்ற வகையில் தமது உணர்வுகளை, பிரச்சினைகளை வெளிப்படுத்தவோ முடியாதவர்களாகவே பெண்கள் உள்ளனர். ஆயினும் தற்போது ஏற்பட்டு வரும் சமூக மாறுதலினால் பெண்களும் தமது விருப்பத்திற்கேற்ப திரைப்படத்தைக் கையாள முடிகிறது. இதன் மூலம் இதுவரை திரைப்படங்கள் வெளிப்படுத்தத்தவறிய வாழ்க்கையின் இருண்ட பக்கங்களை இவர்களது திரைப்படங்களினால் வெளிக்கொணர முடிகின்றது. அபர்ணாசென், சாயிபரப்பஜ்சாஜி, பிரேமா கரன்ந், மீரா நாயர் போன்றோர்களது திரைப்படங்கள் இந்திய சமூகத்தில் நிலவும் பெண்கள் வாழ்வினை அதன் உண்மை ரூபத்தில் வெளிப்படுத்துகின்றன. இதையே தீபா மேத்தவும் தனது "நெருப்பு" (FIRE) மூலம் சாதிக்கத் துணிகின்றார். காலம் காலமாக இந்திய சமூகத்தில் குறிப்பாக மத்தியதர சமூகத்தில் பாரம்பரியப் பண்பாடுகள் மற்றும் இதிகாசக் கருத்துகள்

இதன் கதைச் சுருக்கம் இதுதான். டெல்லியில் வாழும் பஞ்சாப் கூட்டுக் குடும்பம் ஒன்று. அசோக்கின் சகோதரர்கள், அசோக்கின் மனைவி ராதா. ஜதின் புதிதாக மணம் செய்து மனைவி சீதாவை வீட்டிற்கு கூட்டி வருகின்றார். குடும்ப வாழ்வை மிகவும் அலட்சியத்துடன் ஏற்றுக் கொள்பவன் ஜதின். தேனிலவுக்காக தாஜ்மஹாலுக்குச் செல்லும் போது காதலுக்கு அடையாளமாக இருக்கும் தாஜ்மஹாலும், அதன் வரலாறும் சீதாவை மகிழ்ச்சியடையச் செய்கின்றது. ஜதின் அங்கே ஒதுங்கி இருக்கின்றான். அசோக் ராதாவுக்குக் குழந்தைகள் கிடையாது. கிடைக்குமென்ற நம்பிக்கையும் இல்லை. இந்தியப் பாரம்பரியங்களில் நம்பிக்கை கொண்ட அசோக் தனது சிற்றின்ப புலன்களை ஒடுக்கி மன ஒடுக்கத்தைப் போதிக்கும் குரு ஒருவரின் பக்தனாகி அவர் அருகில் இருப்புடன் திருப்திப் படுகின்றான்.

அந்தக் குடும்பத்தை இணைத்து வைப்பவர் அச்சகோதரர்களின் வயது போன படுக்கையில் கிடக்கும் தாய். அவளிடம் இன்னும் அதிகாரம் இருக்கிறது. அவளது விருப்பு வெறுப்பு

*நெருப்பு என்பது அவர்களுள் கொளுந்து விட்டெரியும் உணர்ச்சிக்கு மட்டுமல்ல உணர்வுகளை தீர்க்கும் பாரம்பரியங்களின் குரூரத்திற்கும் குறியீடாக இருக்கின்றது. அதனால்தான் அவள் நம்மீது பற்றிப்பிடிக்கும் நெருப்பை அணைத்து விட்டு வேறொரு வழியில் முன்னேற முயலுகின்றாள். அசோக் பாரம்பரியங்களை பாதுகாப்பதிலேயே முனைப்பாக இருக்கின்றான் என்பது பாரம்பரியத்தை மீற எத்தனிக்கும் மனைவியைப் பற்றிய நெருப்பை அணைப்பதைவிடுத்து பாரம்பரியத்திற்குக் குறியீடாக விளங்கும் தாயை வெளியே கொண்டு போவதிலேயே குறியாக இருப்பதிலிருந்து தெரிகின்றது.*



கவனத்தில் எடுக்கப்படுகின்றன. அவளுக்குச் சேவை செய்வதும் ராதாவின் கடமையாகிறது.

அவர்களது தோள்கள் மீது சுமத்தப்பட்ட பாரத்தினால் தமது அந்தரங்க வாழ்வு, உணர்வுகளை வெளிப்படுத்த முடியாதவர்களாக அந்த வாழ்க்கையையே தமக்கு விதிக்கப்பட்ட விதியாக ஏற்றுக் கொண்டு வாழும் போக்கிற்கு எதிர்வினையாக "நெருப்பு" அமைந்திருக்கின்றது. இந்தப் படத்தின் முக்கியத்துவம் இதுவரை காலமும் பேசாப் பொருளாக இருந்து வந்த ஒரு பாலுணர்வு பழக்கத்தினை வெளிப்படுத்தும் துணிவுதான். "நெருப்பு" இந்திய மத்தியதர வர்க்கத்தில் நிகழும் கதை. மத்தியதர வர்க்கத்தின் பிரச்சினையை தான் ஏன் தேர்ந்தெடுத்ததை தீபா மேத்தா இப்படிக் கூறுகின்றார். "முந்நூறு மில்லியனுக்கு மேலாக இருக்கும் இந்திய சமூகத்தில் பெரும் பங்கு வகிக்கும் மத்தியதர வர்க்கம் பெரும் புறக்கணிப்புக்குள்ளாகி இருக்கின்றது. இதனால்தான் இது எனது அக்கறைக்குரியதாக இருக்கின்றது. அவர்கள் இராச்சியத்தை ஆள்பவர்களாகவோ அன்றி பட்டினி கிடப்பவர்களாகவோ இல்லை. உண்மையில் அவர்கள் வாழும் முறையும் அபிலாசைகளும் உலகில் எந்த மத்தியதர வர்க்கத்திலிருந்தும் மாறுபட்டதல்ல. ஆனால் ஒரு விசயம் மட்டும் அவர்கள் காலாதி காலமாக மரபுகளின் பழுவினை தமது தோளின் மீது சுமந்து வருகின்றார்கள். இந்தச் சுமை இன்று சுதந்திரத்திற்கான உந்தலுடனான நேரடி மோதலாக மாறியுள்ளது. காலம் மாறுகின்றன. பொருளாதார எழுச்சி தொலைக்காட்சியின் செல்வாக்கு, எம்.ரீ.வி. ஆகியவற்றின் தோற்றத்துடன் இந்த மத்தியதர வகுப்பு சமூகத்தில் நிலவிய நூற்றாண்டு காலமாகிய நடைமுறைகளுடன் நேரடியாக முரண்படும் விருப்பங்களுக்காக அவாவி நிற்கின்றது. அவர்களது வீழ்ச்சிக்கும் விழுமியங்களுக்கு மிடையிலான இழுபறி நிலையை "நெருப்பு" சித்தரிக்கின்றது.

அவர்களின் வீட்டிற்கு அருகில் இருக்கும் சிற்றுண்டிச்சாலை அசோக்கிற்கும் சொந்தம். அதோடு இருக்கும் வீடியோக் கடையை ஜதின் நடத்துகின்றான். ராதா சீதா சிற்றுண்டிகளை தயாரிப்பதிலும் விற்பனை செய்வதிலும் உதவுகின்றார்கள். மாலையில் கடை மூடியதும் அசோக் குருஜியிடம் சென்று விடுவான். ஜதீன் தனது காதலியான சீனப் பெண் ஜுலியிடம் சென்று விடுவான். தங்களை அவர்கள் தங்கள் தேவைகளுக்காக மட்டும் பயன்படுத்தும் தமது கணவன்மாரிடம் அதிருப்தியுறும் அந்தப் பெண்கள் இருவருக்குமிடையில் ஏற்படும் பரஸ்பரப் புரிந்துணர்வும் நேசிப்பும் அவர்களை மிகவும் நெருக்கமுறச் செய்கிறது. அந்த நெருக்கத்தினால் ஏற்படும் ஒரு பாலுறவில் அவர்கள் சந்தோசமடைகின்றார்கள்.

அவர்களது வீட்டிலும் கடையிலும் நீண்ட காலமாக வேலை செய்யும் வேலைக்காரன் மண்டு இல்குவில் கிடைக்கக்கூடிய நீலப்படத்தை போட்டுப் பார்த்து சுயஇன்பத்திலீடுபடுகின்றான். ஒரு நாள் இதை நேரில் காணும் ராதா அவனது செய்கைக்காக அவனைக் கண்டித்து வீட்டை விட்டு வெளியேற்றப் போவதாக அச்சுறுத்துகின்றாள். ராதா சீதா விவகாரத்தை தெரிந்து வைத்திருக்கும் மண்டு அதை எல்லோருக்கும் தெரிவித்து விடப்போவதாகக் கூறுகின்றான். கடைசியில் அதைக் கூறியும் விடுகின்றான்.

ராதா சீதாவுக்குமிடையில் அப்படியொரு உறவு இருக்கக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கூடாது என்று எதிர்பார்க்கும் அசோக் மண்டுவை வீட்டைவிட்டு வெளியேறி விடுமாறு கோபத்துடன் கூறுகின்றான். தன்னை வீட்டைவிட்டு வெளியேற்ற வேண்டாம் என்று மண்டு கெஞ்சிக் கேட்டுக் கொள்கின்றான்.

ராதாவின் அறைக்கு வரும் அசோக் ராதா சீதா ஒரு பாலுறவில் ஈடுபடுவதைக் காணுகின்றான். அவளுக்குத் தேவைப் படும் உடல் சுகத்தை தான் தருவதாகக்கூறி அவளைப் பலவந்தமாக அணைத்துக் கொள்கின்றான். அதற்கெல்லாம் காலம் கடந்து விட்டதென தீர்மானமாகக் கூறும் ராதா அவனிடமிருந்து விலகிக் கொள்கின்றாள். அசோக் நடந்த விடயத்துக்காக தன்னிடம் மன்னிப்புக் கேட்குமாறு ராதாவைக் கேட்கிறான். இருவருக்கும் இடையில் ஏற்படும் இழுபறியில் சேலையில் தீப்பற்றிக் கொள்கிறது. மனைவியைக் காப்பாற்றாமல் தாயைக் காப்பாற்றுவதில் முனைப்பாக இருக்கின்றான் அசோக். தானே தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறாள் ராதா.

ஏற்கனவே முடிவுக்கு வந்திருந்ததைப் போல சீதா ஒரு பழைய தர்காவில் காத்திருக்கின்றாள். மழையினூடே நனைந்து வரும் ராதா சீதாவுடன் இணைந்து கொள்கின்றாள்.

இந்திய சமூகத்தில் பாலியல் உறவைத் தீர்மானிப்பவர்கள் பெரும்பாலும் ஆண்களாகவே இருக்கின்றார்கள். பாலியல் உறவு ஒரு அனுபவம் என்பதிலும் பார்க்க வம்ச விருத்திக்காகவே முதன்மைப் படுத்தப்படுகிறது. குழந்தைப் பாக்கியம் தங்களுக்கு இல்லையென்று அறிந்ததும் அசோக் குடும்ப சுகத்தைத் துறந்து மனதை ஆன்மீகத்தில் ஈடுபடுத்திக் கொள்வதும் மனைவியின் உணர்வுகளை கவனத்தில் எடுக்காது தன் புலனடக்கத்தை சோதித்துப் பார்க்க மனைவியைத் தூரத்திலும் அருகிலுமாக படுக்க வைத்து நடந்து கொள்வதும் ஆண்மனோபாவத்தையே காட்டுகின்றது. ஜதின் சீதாவின் உறவில்கூட இதுவே வெளிப்படுகின்றது. தனக்குப் பிடித்த பெண்ணுடன் சந்தோசமாக உறவை வைத்துக் கொள்ளும் அவன் சொந்த மனைவியோடு மாந்திரீக ரீதியில் நடந்து கொள்கின்றான்.

ஒரு பாலுறவு சரியா பிழையா என்பதில் விவாதங்கள் நடக்கின்றன. பாரம்பரிய ஒழுக்க விதிகளின் அடிப்படையில் இது கேள்விக் குறியானதாகவும் இருக்கலாம். ஆயின் தமிழ் சமூகத்தில் இது நீண்டகாலம் நிலவி வந்திருக்கின்றதையும் மறுப்பதற்கில்லை. நெருப்பில் ஒரு பாலுறவை இப்படியான ஒரு பிரச்சினைக்கு ஒரு பொதுத் தீர்வாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமென்று நியாயப்படுத்தப்படவில்லை. வாழ்க்கையில் ஏற்படும் ஒரே மாதிரியான ஏமாற்ற அனுபவத்தின் அடிப்படையில் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதால் ஏற்படும் நெருக்கமும் நேசிப்பும் காதலாகவும் உடல் ரீதியான உறவுக்கும் இட்டுச் செல்கிறது. சரி பிழை என்பதற்கும் மேலாக அவர்களை அந்த நிலைமைக்கு இட்டுச் சென்ற சமூகச் சூழலின் இருப்பு நிலையே இங்கு முக்கியமாகப் படுகின்றது. இவர்களது இந்தத் தேர்வு இந்த இருப்பு நிலைக்கு எதிரானதாக மரபுக்கெதிரானதாக இருக்கின்றது. நெருப்பு என்பது அவர்களுள் கொளுந்து விட்டெரியும் உணர்ச்சிக்கு மட்டுமல்ல உணர்வுகளை தீர்க்கும் பாரம்பரியங்களின் குரூரத்திற்கும் குறியீடாக இருக்கின்றது. அதனால்தான் அவள் நம்மீது பற்றிப்பிடிக்கும் நெருப்பை அணைத்து விட்டு வேறொரு வழியில் முன்னேற முயலுகின்றாள். அசோக் பாரம்பரியங்களை பாதுகாப்பதிலேயே முனைப்பாக இருக்கின்றான் என்பது பாரம்பரியத்தை மீற எத்தனிக்கும் மனைவியைப் பற்றிய நெருப்பை அணைப்பதைவிடுத்து பாரம்பரியத்திற்குக் குறியீடாக விளங்கும் தாயை வெளியே கொண்டு போவதிலேயே குறியாக இருப்பதிலிருந்து தெரிகின்றது.

ஆண்நிலை நோக்கிலிருந்து பெண்களை அணுகும் போது பெண்களது உணர்வுகள் அவர்களது பிரச்சினைகள் புறக்கணிக்கப்படுதல் முற்போக்கு மற்றும் ஜனநாயகப் பண்புகளுக்கு முரணானதே. ஆயினும் அதே புறக்கணிப்பு பெண்களால் மேற்கொள்ளும் போது அதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. சமூகக் குடும்ப அமைப்புக்களாலும் பாரம்பரியங்களாலும் ராதா சீதா ஆகியோரது உணர்வுகள் புறக்கணிக்கப்படுவதும் அவர்கள் தமது அந்தரங்க உறவை தேர்ந்து கொள்ளும் போது அதற்குரிய தர்க்க ரீதியிலான நியாயமும் அவர்கள் மீது பரிவையும் ஏற்படுத்துகிறது. ஆனால் ஏறக்குறைய அதே சமூகக் காரணங்களால் அந்த வீட்டு வேலைக்காரனது உணர்வுகள் இங்கே புறந்தள்ளப்படுகின்றன. வேலைக்காரனாகவும் அதே வேளையில் அந்த வீடே போக்கிடம் என்றும் இருக்கும் அவனுக்குக் கிடைக்கக்கூடிய சந்தோசம் நீலப்படம் பார்த்தலும் சுயமைதுனம் அனுபவித்தலுமே. அவனது உணர்வுகள் இங்கே கொச்சைப்படுத்தப்படுகின்றன. அவன் ஒரு வகையில் வில்லன் போல சித்தரிக்கப்படுகின்றான். பெண்நிலை சார்ந்ததென்பது ஆண் மனோபாவத்திற்குப் பதிலாக பெண் மனோபாவத்தை நிலை நிறுத்துவதாக இருக்கக்கூடாது.

திரைப்படம் ஒரு கற்புலம் சார்ந்த கலை என்பது நெருப்பில் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நேர்த்தியான திரைப்படப் பிரதியாக்கத்தின் மூலம் திரைப்படம் அதற்குரிய அழகியல் வெளிப்பாட்டுடன் நகர்த்தப்படுகிறது. மனஉணர்வுகள் சமூக யதார்த்தங்கள் காட்சி ரூபமாக்கப்பட்டுள்ளன. சீதாவின் சிறு பராயத்துக் கனவுகள் வாழ்வின் நீட்சியின் யதார்த்தத்தில் நொறுங்குண்டு போவது அழகிய முறையில் முண்டேஜ் மூலம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஜில் நட்ஜென்ஸ் (Jill Nettgens) என்பவரது ஒளிப்பதிவு மனதைத் தொடுகின்றது. அழகியல் உணர்வுகள் மாத்திரமல்ல நிதானத்துடனும் கமரா கையாளப்பட்டிருக்கிறது. ராதா, சீதா ஆகியோருக்கிடையில் நிகழும் ஒரு பாலுறவு கொச்சைப் படுத்தலோ, விரசமோயின்றி பக்குவமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

திரும்பத்திரும்ப வரும் ரஹ்மானின் இசைக் கீற்றுகள் காட்சிகளுக்கு ஆழத்தைக் கொடுக்கின்றன. சூழலை வெளிப்படுத்துவதற்கு ஒலி எவ்வாறு முக்கியமோ அது போல மௌனமும் திரைப்படத்திற்கு முக்கியம். சீதாவும் ராதாவும் உறவு கொள்ளும் வேளை நேருக்கு நேர் அதைக் காணும் அசோக்கின் மனஉணர்வு ஒலி அடங்கிய மௌனத்தினூடே ஆழப்படுத்தப்படுகின்றது.

வர்த்தகமயமாக்கப்பட்டு வரும் இன்றைய உலகச் சூழலில் வாழ்வு அர்த்தமிழந்து சமூகம் நுகர்வுச் சமூகமாகிக் கொண்டு வருகின்றது. வீடியோவின் செல்வாக்கு விளம்பரங்களால் நிறைந்த தெருக்கள் நெருக்குவாரமிக்க சூழல் இவற்றின் மூலம் இந்திய சமூகத்தில் ஏற்பட்டுவரும் நுகர்வு மனோபாவம் நாசுக்காக வெளிப்படுத்தப்படுகின்றது.

ஸபானா அஸ்மி (ராதா) நந்திதாஸ் (சீதா) ஆகியோர் மிகச் சிறப்பாக நடிக்கிறார்கள்.

இந்திய சிந்தனைப் போக்கிலும் திரைப்படத் துறையிலும் பெரும் அதிர்வை இப்படத்தின் மூலம் ஏற்படுத்தி இருக்கிறார் தீபா மேத்தா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(1) சுந்தரராமசாமி அவர்களின் 'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்' நாவலைப் படித்துக் கொண்டிருக்கின்றேன். மிகவும் மெதுவாக நகர வேண்டியுள்ளது. அவருடைய முந்தைய நாவலான 'ஜே.ஜே. சில குறிப்புகளின்' முதல் வாக்கியமே வெகு வசீகரமாக அமைந்து, வாசகர்களை ஈர்த்து விடக் கூடியதாக இருந்தது. ஆனால் 'குழந்தைகள் பெண்கள் ஆண்கள்' நாவலின் உருவமும், பாணியும் இன்னொரு வகையானது. மிகவும் விஸ்தாரமான வெளியில், ஆற அமர வாசகர்களைச் சந்திக்க சுந்தரராமசாமி அவர்கள் இந்த நாவலில் முனைந்திருப்பதாக நான் நினைக்கின்றேன். நாவலை முழுமையாகப் படித்துவிட்டு அது பற்றிப் பேசுவதே நியாயமானது.




'இதை விடவும் விரும்பும் நாவல் ஒன்றை நான் பின்னால் எழுதக்கூடும்' என திரு. சுந்தரராமசாமி அவர்கள் தனது 'ஒரு புளியமரத்தின் கதை' நாவல் முன்னுரையில் குறிப்பிட்டிருந்தார். 'அதன்படி உங்கள் இரண்டாவது நாவலான ஜே.ஜே. சில குறிப்புகள் சிறந்த நாவல்தான் என்பது உங்களுடைய அபிப்பிராயமா' என அவரிடம் நான் ஒரு தடவை கேட்டேன். அதற்கு டிசம்பர் 1, 1990இல் திரு.சுந்தரராமசாமி எனக்கு எழுதிய பதில் இது;

ஒரு படைப்பை முடித்ததும் அதில் கூடிவிடும் தரம் சார்ந்து ஒரு திருப்தி; நம் கனவுகளுக்கேற்ப அது உயரவில்லை என்பதில் அதிருப்தி; இவை இரண்டும் படைப்பாளியின் பொதுவான மனநிலையாகும். ஒரு புளிய மரத்தின் கதையில் நான் வெளிப்படையாகப் பகிர்ந்து கொண்டிருக்கும் ஆசுவாசம் - 'இதை விடவும் விரும்பும் நாவல் ஒன்றைப் பின்னால் எழுதக்கூடும்' - ஒரு தீவிர மனநிலையில் எழுதப்பட்டுள்ள எல்லாப் படைப்புகளுக்குப் பின்னாலும் எழுதாமல் எழுதப்பட்டிருப்பதாகும். இருபது வருடங்களுக்குப் பின் ஜே.ஜே. எழுதிக் கொண்டிருக்கும் போது முதல் நாவலின் முன்னுரையில் நான் தேடிக் கொண்டிருந்த ஆசுவாசம் என் நினைவில் இல்லை. மனவெளி முழுக்க ஜே.ஜே. நிரம்பியிருக்க அந்த நாவல் எனக்கு அளித்த சவாலை எதிர்கொள்ள என் முழு சக்தியையும் திரட்டி எழுதினேன்.




அச்சேறிவிட்ட என் படைப்பை படிப்பதில் எனக்கு எப்போதும் ஒரு சங்கடம் இருந்து வந்திருக்கிறது. பெரும்பாலும் இதைத் தவிர்த்தே வந்திருக்கின்றேன். இதற்கு மாறாக அச்சேறிய ஜே.ஜே.யைப் பார்த்தேன். ஒரு முறைக்கு இரு முறை. வெவ்வேறு சந்தர்ப்பங்களில். நன்றாகவே வந்திருப்பது போலவே பட்டது. வேறு யாரேனும் எழுதிய நாவலாக ஜே.ஜே. இருந்திருந்தால், நான் எழுதியதாக அது இல்லையே என்று வெகுவாக ஆதங்கப்பட்டிருப்பேன் என்று பட்டது. ஜே.ஜே.யின் நாட்குறிப்பில் பல பகுதிகள் நவீன கவிதைகள் பற்றிய எனது கோட்பாடுகளுக்கு ஏற்ப கவிதைகளாக பரிணமித்திருப்பதை உணர்ந்தேன். பன்முகம். பல அடுக்குகள். ஒரு தளத்திலிருந்து மற்றொரு தளத்திற்குத் தாவி அனுபவத்தின் வெளியை விரித்தல். இவை மிகுந்த மன நிறைவைத் தந்தன.

பாரதிக்குப் பின் தமிழில் எழுதப்பட்ட ஆகப்பெரிய கவிதைகள் இவைதாம் என்று எண்ணத் தொடங்கினேன். தாழ்வு மனப்பான்மையை அடக்கத்தின் அடையாளமாகவும், தன் திறன் மதித்தலை அகங்காரத்தின் சின்னமாகவும் கருதப்படும் மரபு நமக்கு என்பதால் என் கூற்று தவறாக எடுத்துக் கொள்ளப் படும் அபாயம் கொண்டது. விமர்சன அளவுகோலை கூர்மையாக வளர்த்துக்கொள்ள விரும்பும் ஒரு ஆசிரியன் அவன் வாழும் காலத்தில் எப்போதும் அபாயமான சூழ்நிலையைத்தான் எதிர் கொள்கிறான். காலம் மாறும். விமர்சனப் படைப்பாளியும் அந்தக் காலத்தில் ஒரு பகுதியாக மாறுகிறான். இன்றைய சக எழுத்தாளன் ஏற்றுக்கொள்ளத்திமிறும் உண்மைகள் அன்றைய வாசகனுக்கு சகஜமாகப்படும்.

'இதை விடவும் விரும்பும் நாவல் ஒன்றைப் பின்னால் எழுதக்கூடும்' என்ற வாசகம் எழுதப்படாமல் ஜே.ஜே.யிலும் தொற்றி நிற்கிறது. இப்போது அந்த நாவலை எழுதிக் கொண்டிருக்கின்றேன். எழுதப் போகும் விசயம் நிழலாடிய பின்னும் உருவம் பிடிபடாமல் பத்தாண்டுகள் அலைக்கழிந்து கொண்டிருந்தேன். இப்போது எழுத எழுத விஷயத்தின் உக்கிரம் அதன் வடிவத்தைத் தேடிச் சென்றடைவதில் நிம்மதி ஏற்படுகிறது. அளவில் இது பெரிய படைப்பு. ஆழத்திலும் இதுவொரு பெரிய படைப்பாக பரிணமிக்க வேண்டும் என்பது என் கனவு. இதுதான் என் படைப்புகளில் ஆகச் சிறந்ததாக இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றாலும் அதற்கு மேல் ஒன்றும் செய்வதற்கு இல்லை. ஏனெனில் இந்தப் படைப்பின் மூலம் என்னை முற்றாக நான் காலி செய்து கொண்டு விடுவேன் என்று நினைக்கிறேன். ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(2) ஆரவாரங்கள் சற்று அடங்கிய நிலையில், அண்மையில் 'படையப்பா' பார்த்தேன். மரணப் படுக்கையில் கிடக்கும் தமிழ் சினிமாவை தத்தம் பங்குக்கு அவ்வப்போது பலரும் மிதிப்பதுண்டு. இரண்டு வருட அவகாசம் கொடுத்து அருணாச்சலத்திற்குப் பிறகு ரஜனிகாந்த் மறுபடியும் இப்போது ஒரு மிதி மிதித்திருக்கிறார்.

ரஜனிகாந்தின் பேச்சுக்களையும், அறிக்கைகளையும், செய்கைகளையும் பார்க்கும் போது அவருக்குப் பைத்தியமோ என்று எண்ணத்தோன்றும். ஆனால் அவர் ஒரு காரியப் பைத்தியம் என்பதுதான உண்மை.

எம்.ஜி.ஆருக்குப் பின்னர் தமிழ்நாட்டு மக்களின் ரசனைகளை சரியாக அளவிட்டு வைத்திருக்கும் ஒரே நடிகர் அவர்தான். அருணாச்சலம், படையப்பா என அவர் தொடர்ச்சியாக தாங்கிவரும் தெய்வத் திருநாமங்கள் தற்செயலான ஒன்றல்ல. அவருடைய எண்ணத்தில் அவர் தமிழ் நாட்டின் புதிய,காக்கும் கடவுள்.



புற்றுக்குள் கையை விடும் அவர், பாம்பைத் தூக்கியெடுத்து முத்தமிடுகிறார். சீறிவரும் காளையைக் கையிலிருக்கும் வேலால் எறிந்து தடுத்து நிறுத்துகிறார். என்னை வாழவைத்தது தமிழ்நாட்டு மண்ணப்பா என்று பாடுகிறார். தன்னை மதியாத இடத்தில் அனுமார் பாணியில் தானே இருக்கை அமைத்து அமர்ந்து கொள்கிறார். அப்பா சொன்ன வார்த்தைக்காக சொத்து சுகங்களை இழக்கிறார். அம்மா தங்கையிடம் பாசம் பொழிகிறார். ஆணவக்காரியை அடக்குகிறார். இவை மட்டுமா? விஷம் கலந்த பாலை பாம்பு வந்து தட்டிவிடுகிறது. திடீர் சூறாவளி மோசடி பாத்திரங்களை அள்ளிச் செல்கிறது. ஆஹா, இவ்வளவு நவரசக் கலவைகளையும் ஒரே படத்தில் பெற தமிழ் ரசிகர்கள் எவ்வளவு கொடுத்து வைத்திருக்க வேண்டும்? அண்மைக் காலமாக அவருடைய திரைப்படங்களின் பொதுச் சரடு ஜெயலலிதாவைத் தாக்குவதாகும். படையப்பாவில் ஜெயலலிதாவுக்கு நீலாம்பரி என்று பெயர்.

ரஜனி உதிர்க்கும் ஒவ்வொரு வசனங்களுக்கும் அறிக்கைகளுக்கும் பல்வேறு வியாக்கியானங்களை வழங்கும் பணியில் இன்றைய பத்திரிகைகள் இயங்குகின்றன. உண்மையிலேயே ரஜனிகாந்தின் பிரச்சினை என்ன? ரஜனிகாந்த் அநீதிக்கு எதிர்க்குரல் கொடுக்கத்தான் அரசியலுக்கு வருகிறாரா? நான் அப்படி நினைக்கவில்லை. ரஜனிகாந்தை மதிக்காத ஓர் ஆணவத்துடன் ரஜனிகாந்தின் ஆணவம் மேதிப்பார்க்க விரும்புகிறது.

1992ம் ஆண்டு சினிமா எக்ஸ்பிரஸ் விருது வழங்கும் விழாவில் அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதாவைப் பாராட்டி ரஜனிகாந்த் பேசிய வார்த்தைகளை அப்படியே தருகின்றேன்.

'........முதல்வராகப் பொறுப்பேற்ற புரட்சித் தலைவி அவர்களை வாழ்த்துவதற்காக அவருடைய வீட்டுக்குச் சென்றிருந்தேன். அப்போது உடல்நலம் சரியில்லாமல் இருந்தார். உடல்நலத்தைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுமாறு அவரிடம் சொன்னேன். அதற்கு அவரோ உடல்நலம் பற்றிக் கவலையில்லை. உயிரைத்தான் கவனமாகக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. கொலைப்பட்டியலில் முதலாவதாக என் பெயர் இருக்கிறது என்று சொன்னார். அதைக் கேட்டதும் எனக்கு மிகவும் சங்கடமாகப் போய்விட்டது.

கள்ளம் கபடமற்ற இனிய அன்புள்ளம் கொண்ட அவருக்குத் துணையாக கோடானுகோடி தமிழ் மக்களின் அன்பும் ஆதரவும் இருக்கிறது. அவரை எமன்கூட நெருக்க முடியாது. எமன் அல்ல. எமன், எமன், எமனுக்கு அப்பனே வந்தாலும் அவரை ஒன்றும் செய்ய முடியாது...'

அன்று கள்ளம் கபடமற்ற இனிய அன்புள்ளம் கொண்ட ஜெயலலிதா இன்று கொடூர குணம் கொண்ட நீலாம்பரியாக மாறிவிட்டார். நாளை இதே ஜெயலலிதா தில்லானா மோகனம்பாளாகவும், ரஜனிகாந்த் சிக்கல் ஷண்முக சுந்தரமாகவும் மாறினால் கூட வியப்பில்லை.

அணுஆயுத பரிசோதனை சம்பந்தமாக ரஜனியின் அபிப்பிராயம் என்ன? அயோத்திப் பிரச்சினை சம்பந்தமாக ரஜனி என்ன சொல்கிறார்?அண்டை நாடான இலங்கையில் அல்லலுறும் தமிழினம் குறித்து அவர் என்ன நினைக்கிறார்? இவற்றைப் பற்றியெல்லாம் கேட்டால் வருங்கால முதலமைச்சர் 'என் வழி தனி வழி' என்று விரல்களைச் சொடுக்கக்கூடும். அல்லது 'நான் ஒரு தரம் சொன்னால் நூறு தரம் சொன்ன மாதிரி' என்று தலை மயிரைச் சிலுப்பக்கூடும். மேற்சொன்னவையெல்லாம் ரஜனிகாந்துக்கு பிரச்சினைகளே இல்லை. அவருடைய முக்கிய பிரச்சினை, தன்னை பொருட்படுத்தாத ஜெயலலிதா.

இத்தகைய அற்பமான காரணங்கள் அரசியல் பிரவேசத்திற்குப் போதுமானது என்பது எவ்வளவு அபாயகரமான நிலைமை. முடக்கருத்துக்களைப் பரப்பும் படையப்பா போன்ற ஒரு திரைப்படத்திற்கு பகுத்தறிவுத் திலகம் கலைஞர் கருணாநிதி நற்சான்றிதழ் வழங்கி 'படையப்பா படம் ரஜனிகாந்தின் மற்ற வெற்றிப் படங்களின் சாதனையை உடையப்பா' என ஆக்கியிருக்கிறது என்கின்றார். திராவிட அரசியலுடன் தொடங்கிய இந்த சினிமா நட்சத்திர அரசியலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் தைரியம் எந்த அரசியல் தலைவர்களுக்கும் இன்று தமிழ்நாட்டில் இல்லை. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



3 வெள்ளிக்கிழமை தோறும் எனக்கு இரண்டு கஷ்டங்கள். ஒன்று மரக்கறிச் சாப்பாடு. மற்றது, மாலையானதும் பேச்சுத் துணைக்கு யாரும் இருப்பதில்லை. வீட்டிலுள்ளவர்கள் எல்லாம் பாலச்சந்தரின் காதல் பகடை பார்க்க T.V முன்னால் குழுமி விடுகிறார்கள்.

தலைப்புக் காட்சிகளின் போது பாலச்சந்தர் விதவிதமான போஸ்கள் வழங்குகிறார். ஓர் அங்கத்தில், பாலச்சந்தர் பற்றியே இரு பாத்திரங்கள் பேசிப் பேசிப் புல்லரிக்க வைத்து விட்டார்கள்.

பள்ளிக்காலத்தில் நானும் நண்பர்களும் பாலச்சந்தரின் பரமரசிகர்கள். பாலச்சந்தரின் புதுமை நாட்டம் எவனுக்கும் புரியவில்லையே என்று அங்கலாய்த்துக் கொள்வோம். பாலச்சந்தரை எல்லோருக்கும் புரிந்து தலைமேல் கொண்டாடும் தருணத்தில் நாங்கள் வெகுதூரத்துக்கு விலகிப் போய் விட்டோம்.



அவருடைய முதல் சாதனை என்று நான் குறிப்பிட விரும்புவது இதைத்தான். வெறும் கோமாளியாக, கதாநாயகனுக்கும் கதாநாயகிக்கும் தூது போகிறவனாக, வில்லனிடம் அறை வாங்குபவனாக இருந்த நாகேஷை ஒரு குணச்சித்திர நடிகனாக பரணமிக்க வைத்தது. நீர்க்குமிழி, எதிர்நீச்சல், மேஜர் சந்திரகாந்த், அனுபவி ராஜா அனுபவி, நவக்கிரகம், பத்தாம்பசலி.... இப்படிப் பலபடங்கள். தாடை பெருத்த, தொந்தி வைத்த பயில்வான்கள்தான் தமிழ்த்திரைக் கதாநாயகர்கள் என்ற விதியை சற்று விலக்கி வைத்தவர் அவர்.

தமிழ்த் திரைப்படங்களின் மாமூலான வடிவமைப்பை அவர் மாற்றியமைத்திருக்கிறார். ஸ்ரீதரின் 'நெஞ்சில் ஓர் ஆலயமும்' பாலச்சந்தரின் 'நீர்குமிழி'யும் தேர்ந்தெடுத்த களம் ஒன்றுதான். ஒரு வைத்தியசாலை. எனினும் ஸ்ரீதரின் நெஞ்சில் ஓர் ஆலயம் இயல்புக்கு முரணான சம்பவங்களுடன் ஒரு முக்கோணக் காதல் கதையாக திரையில் வருகின்றது. நீர்க் குமிழியோ ஒரு வைத்தியசாலையின் விடுதி தன்னைப் பற்றிக் கூறுகிற கதை என்ற அறிமுகத்துடன் ஆரம்பமாகிறது.

நாடகத் தன்மைகளைத் திரைப்படங்களிலிருந்து கொஞ்சமேனும் ஒழிக்க முயற்சி செய்தவர் என ஒரு காலத்தில் நம்பியதை இப்போது மறுக்க வேண்டிய நிலைமை.

1972இல். வெளியான அரங்கேற்றம்தான். பாலச்சந்தரின் திரையுலக அந்தஸ்தை வெகுவாக உயர்த்திவிட்ட திரைப்படம். தமிழிலும் அது முக்கியமான படம் என்பதில் ஐயமில்லை. அதிலிருந்து அவருடைய பயணம் முன்னோக்கி நகர்ந்திருக்க வேண்டும். ஆனால் அதற்கு சாத்தியம் இல்லாமல் போய் விட்டது.

பாலச்சந்தரின் சரிவு அபூர்வராகங்களிலிருந்து ஆரம்பமாகின்றது. பாலச்சந்தருக்கு அபூர்வ இயக்குனர் என்ற பட்டத்தைப் பெற்றுத் தந்த அபூர்வராகத்தின் கதையமைப்பு அபத்தமானது. மிகவும் செயற்கையானது. அபூர்வராகங்களுக்குக் கிடைத்த வரவேற்பே அது போன்ற அபத்தமான கதைகளை மென்மேலும் படமாக்கும் தைரியத்தை பாலசந்தருக்கு வழங்கியிருக்க வேண்டும். அவள் ஒரு தொடர்கதை, மூன்று முடிச்சு, புதுப்புது அர்த்தங்கள், கல்கி எனப் பல பொம்மலாட்டங்கள் இன்றுவரை தொடர்கின்றன....

நமது தென்னாட்டு சத்யஜித்ரே மிகவும் சிறுத்துப் போய் (T.V க்கு வந்ததைச் சொல்கிறேன்.) இன்று வெறும் தமாஷ்களைத் தோரணம்கட்டி மாலை தொடுத்து காலத்தை ஓட்டுவது வேதனையாக இருக்கிறது. இந்த நாடகங்களையெல்லாம் பார்க்கும் போது அவர் மறுபடியும் பாமாவிஜயம், எதிர் நீச்சல், பூவா தலையா காலத்துக்குப் போய்ச் சேர்ந்திருப்பதாகத் தோன்றுகிறது. இது பாலச்சந்தரின் மறுபதிப்புக் காலம்.

இன்று மணிரத்தினத்தைப்பற்றி சிலாகித்துக் கூறுபவர்களிடம் நான் சொல்வது இதைத்தான். 'அவர் தமிழ்த் திரையுலகின் இரண்டாவது பாலச்சந்தர்.' ■

## கிடைக்கப் பெற்ற சிறு சஞ்சிகைகள்.

**எக்ஸில்**
6வது இதழ்

தொடர்புகளுக்கு -
EXIL
Chez R. Inpavalli
94, Rue de la Chapelle
75018 Paris
France.




**காலச்சுவடு**
இதழ் 25




தொடர்புகளுக்கு -
காலச்சுவடு
151, கே.பி. சாலை,
நாகர் கோயில் 629 001
தொ.பேசி : 04652 - 22525
Email : kalachuvadu@vsnl.com

**வியூகம்**
**(அச்சில்)**

**தொடர்புகளுக்கு -**
**வியூகம்**
**27, மட்டக்களப்பு வீதி,**
**கல்முனை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**"உன்னதமான, நியாயமான இலட்சியங்களில் இருந்து இப்போது ஒரு வகையான பின்னடைவு, இன்னும் உரத்துச் சொல்வதானால் சீரழிவே நடந்திருக்கிறது."**

**- சேரன் -**



ஈழத்து நவீன தமிழ்க் கவிதையின் பிரதானம். சமூக, அரசியல், கலை, இலக்கியத் தளங்களில் இரண்டு தசாப்தங்களாக கால்பதித்து நிற்பவர். கவிஞர், பத்திரிகையாளர், சமூகவியலாளர். மரணம் அச்சுறுத்தும் நெருக்கடிமிக்க, அரசியல், இராணுவவாத சூழலுக்குள் புதைக்கப் பட்டிருந்த கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரத்தை வெளிக்கொணர தவிரமாக தனது செயற்பாட்டின் ஊடே போராடியவர் - போராடுபவர்.

தமிழ்ச் சூழலையே உலுக்கிய ஈழத்துக் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பான '**மரணத்தினுள் வாழ்வோம்**' (1985) தொகுதியின் தொகுப்பாசிரியர்களில் ஒருவர். நெருக்கடியும், அச்சுறுத்தலுமிக்க யாழ்ப்பாணச் சூழலில் 1984 தொடக்கம் 1987வரை '**சற்றடே றிவியூ**' பத்திரிகையின் உதவி ஆசிரியர். ஈழத்தில் 90களிலிருந்து வெளிவரும் தமிழில் முதல் மாற்றுப் பத்திரிகையான '**சரிநிகரின்**' பிரதம ஆசிரியர்.

'**இரண்டாவது சூரிய உதயம்**' (1982) '**யமன்**' (1984) '**கானல் வரி**' (1989) '**எலும்புக் கூடுகளின் ஊர்வலம்**' (1990) '**எரிந்து கொண்டிருக்கும் நேரம்**' (1994) என்பன இவரது வெளிவந்த ஐந்து கவிதைத் தொகுதிகளாகும்.

கனடாவில் உள்ள 'யோர்க்' பல்கலைக் கழகத்தில் சமூகவியல் துறையில் கற்பித்து வருகின்றார். இலங்கைக்கு அண்மையில் வந்த வேளை அவருடனான சந்திப்பின் போது எடுக்கப்பட்ட நேர்காணல் இது.

**'எனது வாழ்வையும் எனது அனுபவத்தையும் எனது கவிதைகளையும் பொறுத்தவரை - அரசியலையும், அரசியல் ஈடுபாட்டையும் அதிலிருந்து பிரிக்க முடியாது' என்கிறார் சேரன்.** ●

**சந்திப்பு - எம். பௌசர்**

**கவிதை குறித்த உங்கள் கருதுகோள் என்ன?**

கருதுகோள் என்று கட்டிறுக்கமாகச் சொல்வதில் எனக்கு அவ்வளவு உடன்பாடில்லை. கவிதை என்பது ஒரு இலக்கிய வடிவம். அதே நேரம் கவிதை என்பது ஒரு வாழ்க்கை முறையுமாகும். மொழியில் உங்களுக்கு அதிக ஈடுபாடு இருக்குமானால் அந்த மொழியின் உச்சங்களைப் பற்றியும் பிற சாத்தியப்பாடுகளையும் பற்றி நீங்கள் யோசிக்கக் கூடும். அந்த நேரத்தில் கவிதை கைகூடும் எனலாம். மொழியைத் தீவிரமாகவும் பல இயங்கு தளங்களிலும் அழகாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு வாகனமாகக் கவிதையுள்ளது. அந்த வகையில்தான் கவிதை எனக்கொரு பிடிப்பான இயக்கமாக உள்ளது. இப்படி ஏற்பட்டமைக்கு எந்த வகையான அதிர்ஷ்டமோ, "கருவில் திருவுற்றது" மாதிரியான ஆச்சரியங்களோ எதுவும் இல்லை. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் தீவிரமாக வாசிக்கும் பழக்க நிலையும் இருந்ததே முக்கிய காரணம் என நினைக்கின்றேன்.

கவிதையில் இன்ன இன்ன விசயங்களைத்தான் சொல்ல முடியும் என்ற வரையறையை நாம் செய்வது சாத்தியமில்லை. கவிதை கொண்டாட்டங்களைப் பற்றியும் இருக்கும். 'CHEERS' சொல்வதைப் பற்றியும் இருக்கும். போராட்டத்தைப் பற்றியும் பேசும்; அனுபவங்கள், சிந்தனைகளையும் கொண்டு வரும்; அது அறிவூட்டுதலாகவும் இருக்கும். ஆடுதல், பாடுதல், சித்திரம் ஆகிய சகல' விசயங்களும் கவிதைக்குள் வரலாம். கவிதைக்கு ஒரு பன்முகப்பட்ட தன்மை இருக்கிறது. கவிதையைப் பாவிக்கின்றவரின், கவிதை எழுதுபவரின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆளுமை, இயல்பு, பயிற்சி, தேர்ச்சி, சமூக ஈடுபாடு போன்றவற்றைப் பொறுத்து இவ்விடயங்கள் கவிதைக்குள் பல தரங்களிலும் பல தளங்களிலும் வரக்கூடும். இப்படித்தான் கவிதை இருக்க வேண்டும் என்று வரையறுப்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. அது எனது கருதுகோளும் இல்லை.

**தமிழ்க் கவிதை வரலாற்றில் பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு ஒரு "Major Poet" தோன்றவில்லை என்கிறார்கள். அவன் தோன்றாமலே போய்விடுவானா?**

நாங்கள் இப்போது 1999ல் நிற்கின்றோம். 10 வருடங்களுக்குள் நடந்த சில விடயங்களைப் பற்றி நாங்கள் தீர்க்கமாக எடைபோடுவது மிகக் கஷ்டம். பாரதியை உயிருடன் இருக்கும் வரைக்கும் ஒரு மஹாகவி என்று யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. பாரதியின் மறைவுக்குப் பின்புதானே அவன் ஒரு மகாகவி என்று கண்டு கொள்ளப்பட்டான். அதிலும் பெரிய வாதங்கள் நடந்தன. கம்பனுக்குப் பிறகு கவிதையே வரவில்லையென்று சொல்பவர்கள் இன்னும் இருக்கிறார்கள். ஏ.கே. ராமானுஜன் சொன்னார் "சங்ககால இலக்கியத்திற்குப் பிறகு தமிழ்க் கவிதையில் உச்சங்கள் இல்லையென்று." ஒவ்வொருவரும் எந்தெந்த காலகட்டங்களில் உறைந்து போய் நிற்கிறார்களோ அதற்குப் பிறகு கவிதையே இல்லை என்கிறார்கள்.

இன்றைக்கு பாரதிக்குப் பின் ஒரு Major Poet வரவில்லை என்று சொல்லுபவர்கள் மதிப்பீடுகளில் காலத்தின் பங்கைச் சரியாக எடை போடாதவர்கள் எனலாம். இவ்விடயங்களை நாம் 10 வருடத்திற்குள் அல்லது 20 வருடத்திற்குள் தீர்மானிப்பது சாத்தியமில்லை. சிலவேளைகளில் நூறு வருடங்கள் கூடக் காத்திருக்க நேரலாம். தருமுவோ, ஜெயபாலனோ அல்லது சோலைக்கிளியோ ஒரு Major Poetஆ என்பதனை இன்றோ அல்லது சில வருடங்களிலோ தீர்மானித்து விடமுடியாது. அந்தமாதிரியான விடயங்களைப் பற்றி நாங்கள் கருத்துக் கூறுவது "தினசரி"பத்திரிகையில் சோதிட பலன் பார்ப்பது போல்தான்.

**தமிழில் "Major Poet" என்ற உச்ச சிகரத்தை நோக்கி பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு போனவர்கள், போகின்றவர்கள் என்று யாராகிலும் உள்ளனரா?**

தமிழுக்கு நீண்ட காலமான ஆரோக்கியமான ஒரு கவிதைப் பாரம்பரியம் உள்ளது. அதற்கு ஒரு ஒழுங்கும் தொடர்ச்சியும் உள்ளது. அவ்வொழுங்கும் தொடர்ச்சியும் உள்ளதால் கவிதா ரீதியான அற்புதமான படைப்புகளும், சாதனைகளும் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டு வருகின்றன. அம்மாதிரியான ஒழுங்கும் தொடர்ச்சியும் வேறு பல மொழிகளுக்கு இல்லை. இங்குதான் எமது பலமும், பலவீனமும் இருக்கிறது. அப்படி நாங்கள் பார்க்கும் பொழுது கவிதையைப் பொறுத்தவரை எந்த இடத்திலும் தொய்வு வந்ததாக இல்லை. உதாரணமாக சங்கப் பாடல்களில் அற்புதமான கவிதை உள்ளதாகச் சொல்கின்றோம். அதற்குப் பிறகு கம்பன், இளங்கோ அடிகள், பாரதி, மஹாகவி என ஒரு தொடர்ச்சியுள்ளது. அந்த வகையில் தமிழ்க் கவிதைக்குள் ஒரு பலமான, தனிப்பட்ட ஆளுமைகளும் வந்திருக்கின்றன. அதே நேரம் படைப்பு சார்ந்த அற்புதமான போக்குகளும் இருந்திருக்கின்றன. மஹாகவி, நீலவாணன், சண்முகம் சிவலிங்கம், நு..மான், போன்றோர் முக்கியமாகவே Major Poet என்பது எனது கருத்து. தமிழ் நாட்டில் தருமூ ஒரு Major Poet.

தருமூ சிவராமு மரணித்த போது பாரதி போல் கவனிக்கப்படாதவராகவே இருந்தார். ஆனால் தருமூ சிவராமு ஒரு நல்ல கவிஞன் என்ற புரிந்துணர்வும் அது பற்றிய ஒரு தேர்வும் ஆங்காங்கே பல மட்டத்திலும் உள்ளது. அவையெல்லாம் திரண்டு ஒரு காலகட்டத்தில் தருமூ ஒரு முக்கியமான கவிஞன் என்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு சொல்லும் ஒரு காலம் வரும். தமிழில் இப்படியான கவிதை ஆளுமைகள் தொடர்ச்சியாக வந்து கொண்டே இருக்கின்றன. இது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பொருந்தும்.

**ஈழத்து நவீன தமிழ்க் கவிதை ஓரளவு நல்ல நிலையில் வளர்ச்சியடைந்திருப்பதாக சில குரல்கள் எழுப்பப்படுகிறதே - கவிஞன் என்ற வகையில் இதுபற்றி...**

ஈழத்து தமிழ் கவிதைக்கும், தமிழ்நாட்டு, மலேசிய, சிங்கப்பூர் தமிழ் கவிதைகளுக்குமிடையே தனித்துவங்களும் வேறுபாடுகளும் உள்ளன, அத்தனித்துவங்களுக்கும் வேறுபாடுகளுக்கும் பிரதான காரணம் எங்கள் சமூக, அரசியல் அனுபவங்கள் வித்தியாசமாக இருப்பதே ஆகும். இலக்கியம் வாழ்க்கை அனுபவங்களுக்கூடாக வெளிப்படுகிறது. வாழ்க்கை அனுபவம் என்பதை ஒரு படைப்பாளியோ ஒரு கவியோ தனக்குள் வாழ்ந்து அதனை வெளிப்படுத்தும் போது படைப்பாளியின் தனித்துவங்களும், ஆளுமைகளும் சேர்ந்து புது வடிவம் எடுக்கிறது. புதிய அனுபவங்கள், இதுவரை பேசப்படாத கிடைக்கப் பெறாத அம்சங்கள் வரும் போது இலக்கியம் இன்னொரு பாய்ச்சலுக்கு போக முடிகிறது. இதற்கு ஒரு சமூகப் பின்புலம் உள்ளது. அந்தப் பின்புலம் நாங்கள் விரும்பியோ, விரும்பாமலோ ஈழத்தில், தமிழில் எழுதுபவர்களுக்கு கிடைத்துள்ளது. அதனூடாக ஒரு தனித்துவமான பாய்ச்சல் ஈழத்தில் கவிதையைப் பொறுத்தவரை நடந்துள்ளது. அந்தப் பாய்ச்சல் தொடர்கிறது. அந்த வகையில் ஈழத்தின் கவிதைப் போக்கும் அந்தக் கவிதைப் போக்கின் ஊடாக வெளிப்பட்ட தனிப்பட்ட ஆளுமைகளும், அந்த ஆளுமைகளுக்கூடாக வெளிப்பட்ட பல்வேறு தரத்திலான கவிதைகளும் தமிழ் நாட்டை விடவும் தமிழில் எழுதப்படும் வேறு நாடுகளைவிடவும் வித்தியாசமானது; தனித்துவமானது.

இதில் எந்த அனுபவம் உயர்ந்தது என்ற தரநிர்ணய அளவு தேவையில்லை. ஒவ்வொருவருடைய அனுபவமும் வித்தியாசமானது. அந்த அனுபவங்கள் எவ்வளவு தூரம் கலா பூர்வமாகவும் தாக்கமாகவும் பரிமாறப்படுகிறது என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்த வகையில் ஈழத்துக் கவிதைகளுக்கு ஒரு முக்கிய பங்கு இருப்பதாகவே நான் கருதுகிறேன்.

இன்னொரு வகையாகவும் இதனைப் பார்க்க வேண்டும். இங்கிலாந்திலும், அவுஸ்திரேலியாவிலும், இந்தியாவிலும் நிறையப் பேர் ஆங்கில மொழியில் கவிதை எழுதுகிறார்கள். ஆங்கிலேயர் எங்கெங்கு போய் தங்கள் காலனித்துவத்தை விஸ்தரித்தார்களோ அங்கெல்லாம் ஆங்கில மொழியில் கவிதை எழுதப்படுகிறது. மேற்கிந்தியத் தீவுகள், நைஜீரியா, கனடா, அவுஸ்திரேலியா என்று பல உதாரணங்கள் உள்ளன. இந்த நாடுகளில் எழுதப்படும் இலக்கிய மொழி ஆங்கிலமாக இருந்தாலும் அதற்குள் வரும் அனுபவங்களும், உணர்திறன்களும் வித்தியாசமானவை. இப்போது English Literature என்று பாவிப்பது சாத்தியமில்லை. ஆங்கில மொழி மூலம் எழுதப்பட்ட இலக்கியம் என்றே இப்போது சொல்ல முடியும். அதே போல்தான் தமிழ் இலக்கியம் என்பதற்கு இந்தியாவை மட்டும் வைத்துக் கொண்டிருக்க முடியாது. தமிழ் மொழியில் பல விடயங்கள் பல விதத்திலும் பல நாடுகளிலும் எழுதப்படுகின்றன. அந்தப் பிரக்ஞை எம்மிடம் இருக்க வேண்டும்.

அமெரிக்காவில் இருந்து வரும் ஆங்கில இலக்கியத்திற்கும், இங்கிலாந்தில் இருந்து வரும் ஆங்கில இலக்கியத்திற்கும் ஆபிரிக்காவில் இருந்து வரும் ஆங்கில இலக்கியத்திற்கும் நைஜீரியாவில் இருந்து வரும் ஆங்கில இலக்கியத்திற்குமிடையே எவ்வாறான வித்தியாசமான ஆளுமை வேறுபாடுகள், தனித்துவங்கள், அனுபவச் செறிவு இருக்கின்றதோ அதே போல்தான் ஈழத்தில் இருந்து வரும் தமிழ் இலக்கியத்திற்கும் கவிதைகளுக்கும் தமிழ் நாட்டிலிருந்து வரும் தமிழ் இலக்கியத்திற்கும் கவிதைகளுக்குமிடையே இத்தகைய ஆளுமை வேறுபாடுகள், தனித்துவங்கள் உள்ளன. இது ஒரு தொடக்கப்புள்ளி. இதே மாதிரியான விசயங்கள் ஒரு நாட்டிற்குள் ஒவ்வொரு பிரதேசத்திலும் மாறுபடுவதைக் காணலாம். இந்தமாதிரியான பரந்துபட்ட ஓர் அணுகு முறையை நாம் கொண்டிருப்போமானால் ஆரோக்கியமான திறனாய்வுகளுக்கு அவை வழி வகுக்கக்கூடும்.

**ஈழத்தில் கவிதை வளர்ச்சிக்கு எமது அரசியல் பின்புலம் முக்கிய பங்காற்றி இருக்கிறது என்பதை வலியுறுத்துகின்றீர்கள் - இதில் இருவகையான கவிஞர்கள் இருப்பதாக நினைக்கிறேன். ஒன்று நேரடியாக போராட்டத்தில் நின்று கவிதை படைப்ப வர்கள்; மற்றவர்கள் போராட்டத்திற்கு வெளியே நிற்பவர்கள் - இவர்களின் படைப்புகளை என்ன மாதிரிப் பார்க்கலாம்?**

நீங்கள் குறிப்பிடுகிற இரண்டு வகைக் காரருக்கும் அப்பால் வேறு வகையினரும் இருக்கக் கூடும். உதாரணமாகப் பெண்ணியக் கவிதைகளை இவற்றுள் பொருத்தி விடுவதில் சிக்கல்கள் உள்ளன. போராட்டம் என்பதை நாங்கள் எப்படி புரிந்து கொள்கிறோம் என்பது பற்றி நாம் பேசி ஆக வேண்டும். ஆயுதம் ஏந்தி முன்னுக்குப் போய் நிற்பது மட்டும்தான் போராட்டம் என்ற கருத்துடன் எனக்கு உடன்பாடு இல்லை. போராட்டம் என்பதற்குப் பரந்த, ஆழமான பன்முகப்பட்ட விளக்கங்கள் உள்ளன. வடக்குக் கிழக்கிலும் வடக்குக் கிழக்குக்கு வெளியிலும் தமிழ், முஸ்லிம் பொதுமக்கள் அன்றாடம் எதிர் கொள்ளும் துயரங்களும், சோதனைகளும், அவலமும் அவற்றுக்கு அவர்கள் முகங்கொடுக்கும் பாங்கும் கூடப் போராட்டம்தான். கொழும்பு நகரில் உள்ள இராணுவச் சோதனைச் சாவடிகளில் தங்களுடைய மனித கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல் எதிர்ப்பாக நின்ற பலரை எனக்குத் தெரியும். இதுவும் போராட்டம்தான்; எதிர்ப்பின் ஒரு கூறுதான். ஆயுதம் தாங்கிய போராட்டத்தை முக்கியப்படுத்துவதும் அதுமட்டும்தான் போராட்டம் எனக் கருதுவதனை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன். போராட்டத்திற்கு பல பரிமாணங்கள் உண்டு. எழுத்தாளர்கள் தங்களுக்குரிய தளத்தில் அதனைச் செய்வர். வைத்தியர்கள் வைத்தியர்களுடைய வேலையைத்தான் பார்ப்பார்கள். அவர்களிடம் பொறியியலாளர்களின் வேலையை பார்க்கச் சொல்லி வற்புறுத்த முடியுமா?

ஆயுதமேந்தி களத்தில் நின்று போராடுபவர்கள் எழுதியிருக்கின்றார்கள் என்பதால் அது நல்ல இலக்கியமாக வரவேண்டுமென்ற கட்டாயம் இல்லை. எது நல்ல இலக்கியம் என்பது ஒரு பெருவிவாதம். அந்த விவாதத்திற்கு முடிந்த முடிவான ஒரு முடிவு இருக்கும் என நான் நம்பவில்லை. எனினும் தர வேறுபாட்டைப்பற்றி நாம் குறிப்பாய்ப் பேசுவது சாத்தியம்தான். ஆயுதமேந்திப் போராடுகிறவர்கள் எல்லாம் நல்ல இலக்கியப் படைப்பவர்கள் என்பதுவோ போராட்டத்திற்கு வெளியே நிற்பவர்கள் அப்படி இருப்பதனால் நல்ல இலக்கியம் படைப்பவர்கள் இல்லை என்பதும் பொருந்தாது. ஒரு நல்ல கவிதை வெளிப்படுவதற்கு சமூக அரசியல் பின்புலங்கள் துணை செய்யக்கூடும். ஆனால் அந்த சமூக, அரசியல் பின்புல பலத்திலிருந்து ஆக்கபூர்வமான படைப்புச் சக்தியை பெற்று அதனை ஒரு நல்ல படைப்பாகக் கொண்டு வருவது தனிப்பட்ட ஆளுமையிலும், அவர்களின் சிந்தனை ஆழத்திலும் கருத்து விரிவிலும் அனுபவச் செழிப்பிலும், செய்நேர்த்தியிலுமே தங்கியுள்ளது. இவ்வளவும் சேரும் போதுதான் அது ஒரு உயரிய படைப்பாக மாறக்கூடும் என்று கருதுகிறேன். எவ்வளவுதான் அனுபவம் இருந்தாலும் ஆளுமையும், சிந்தனை ஆழமும், கலை நேர்த்தியும் இல்லாவிட்டால் அது உயரிய படைப்பாக உருமாற்றம் பெறுவதில் பலத்த தடங்கல்கள் உள்ளன. ஆயுதம் ஏந்திய படைப்பாளிகளால் எழுதப்படும் படைப்புகள்தான் உயர்ந்த இலக்கியம் என்பதனை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். உதாரணத்திற்கு இப்போது விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டு வருகிற கவிதைகளையும் ஏனையவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள். கவிதைகளைப் பொறுத்தவரை – வானதி, கஸ்தூரி, ஆகியோரின் கவிதைகள் உட்பட – பெருமளவுக்கு வரட்டுத்தனமான கோஷங்களும், உயிர்ப்பற்ற மொழியுமே பரவலாகக் காணக் கிடைக்கிறது. உணர்வும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சீரான மொழியும் பளிச்சிடும் கவிதைகள் ஆங்காங்கே பாடல்களில் கிடைக்கின்றன. ஆனால் இது ஆட்சி பெற்ற போக்கு அல்ல. "போராட்டத்தை முன்னெடுக்கும், போராட்டத்திற்குத் துணைசெய்யும் இலக்கியமே நமது தேவை" என்ற தலைவரின் கலாசாரக் கொமிஸார்த்தனமான மணிமொழியை ஏற்றுத்தான் பலரும் எழுதுவது போலத் தோன்றுகிறது. எனினும் கவிதை, புனைகதை சாராதவை – non fiction என்று வருகிற போது அவர்களிடமிருந்து மிகத் தரமான படைப்புக்கள் வெளியாகியுள்ளன. யுத்தத்தின் அனுபவப் பதிவுகள் (போர் உலா போன்றவை) இழந்த போராளிகளைப் பற்றிய சித்தரிப்புகள், ஞாபகக் குறிப்புகள் என்று உயர்ந்த தரமிக்க பல எழுத்துக்கள் வெளியாகின்றன. நீங்கள் கேள்வியில் குறிப்பிட்ட "போராட்டத்திற்கு வெளியே" இருப்பவர்களிடமும், முன்னாள் போராளிகளிடமிருந்தும் இத்தகைய non fiction தாக்கமாக வெளிவரவில்லை. விதி விலக்குகள் என செழியனின் ஒரு மனிதனின் கதை, மற்றும் துணுக்காய்ச் சிறை அனுபவங்கள் பற்றி சமரன் எழுதியவை ராஜனி திரணகம, ஹூல், சிறிதரன், தயா சோமசுந்தரம் ஆகியோர் எழுதிய முறிந்த பனை என்பவை உடனடியாக நினைவுக்கு வருகின்றன. எனக்குத் தெரியாமல் வேறு படைப்புக்களும் இருக்கக்கூடும்.

**வெகுஜனப் பத்திரிகைக்கும் தீவிர இலக்கியத்திற்கு மிடையே ஒரு மிகப்பெரிய பிளவும், இடைவெளியும் இருக்கிறதே, இவை இரண்டும் இரு துருவங்கள்தானா?**

ஈழத்துத் தமிழ் சூழ்நிலையைப் பற்றிக் கேட்டால் வித்தியாசமாகப் பேச வேண்டும். தமிழ் நாட்டு தமிழ் சூழலைப்பற்றிக் கேட்டால் வித்தியாசமாகப் பேசவேண்டும். நாங்கள் ஈழத்துச் சூழ்நிலையை பற்றியே பேசுவோம். தமிழ் நாட்டில் இருப்பது போல குமுதம், விகடன் வகையிலான ஒரு பாரிய வெகுஜனப் பத்திரிகை, சஞ்சிகைச் சூழல் எம்மிடமில்லை. நாங்கள் வெகுஜனப் பத்திரிகைகள் என்று கருதுவது ஆயிரக் கணக்கில் விற்பனையாகும் தினசரிப் பத்திரிகைகளையும் வார வெளியீடுகளாக அபத்தமான வண்ணக்கலவைகளில் வெளியாகும் வாரப் பதிப்புகளையும்தான். இந்தப் பதிப்புகளில் ஓரளவுக்கு தரமான இலக்கிய அம்சங்களும் வெளிவந்தமைக்கும் ஒரு கணிசமான வரலாறு இருக்கிறது. தமிழ் நாட்டில் காணப்படுவது போன்று தரமான இலக்கியத்துக்கும் இத்தகைய வெகுஜனப் பத்திரிகைகளுக்கும் இடையிலான பாரிய இடைவெளி இங்கு இல்லை என்றுதான் நான் கருதுகிறேன். எனினும் ஈழத்தில் வெகுஜனப் பத்திரிகைச் சூழல் மிகவும் ஆரோக்கியமாக இருந்ததற்கான ஒரு வரலாறு நமக்கில்லை. மேலும் பிரதேச ரீதியான ஒரு பத்திரிகைத் துறை நமக்குள் வளர்ந்து வந்திருக்கின்றது. இலங்கையில் பல பாகங்களிலும் இந்தப் போக்கு இருந்திருக்கின்றது. மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் இத்தகைய முயற்சிகள் உள்ளன.

பல காலகட்டங்களில் ஈழத்தில் நல்ல இலக்கியக்காரர்கள் வெகுஜனப்பத்திரிகைகளில் எழுதி வந்திருக்கிறார்கள். உதாரணமாகத் தினபதி, சிந்தாமணி, ஆசிரியராக எஸ்டி. சிவநாயகம் இருந்த காலத்தில் அது நடந்திருக்கின்றது. 'சுதந்திரனில்' மஹாகவி, முருகையன், நீலாவணன் போன்றவர்கள் ஏராளமாக எழுதியுள்ளனர். அதேபோல் கைலாசபதியின் காலத்தில் தினகரனில் நிறையவே நல்லவை வெளியாகியுள்ளன. அந்த மாதிரியான போக்கும் நமக்கு இருந்துள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை வெகுஜனப் பத்திரிகைகளும் தீவிர இலக்கியத்திற்கு மிடையே மிகப்பெரிய பிளவு இருக்கவில்லை. ஆனால் இந்தப் பத்திரிகைகளுக்கு பத்திரிகைத்துறை தொடர்பாகத்தான் பெரிய பிரச்சினை இருந்திருக்கிறது. ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தயாரித்துப் பொருத்துவது போல முதுகெலும்பும் தயாரித்து நமது தமிழ்ப் பத்திரிகைகளுக்குப் பொருத்த வேண்டும் எழுத்துச் சுதந்திரம், பத்திரிகைத் துறை தொடர்பான கவனம், விழிப்பு, பணிபுரியும் பத்திரிகையாளர்களை கௌரவமாக நடத்துதல், செய்திகளைத் துணிவுடன் தருதல், மொழிப் பாவனை, புதுமை போன்ற எந்த அம்சங்களுமோ அக்கறையும், சுரணையும் அற்ற வெற்றுத் தாள்களே இன்றைய தினசரி, வாரப்பத்திரிகைகள். இலக்கியம் தொடர்பாக இவர்களுக்கு பிரச்சினை இருக்கவில்லை என்றே கூற வேண்டும். இன்றைய ஈழத்து சிறுகதையாளர்களை எடுத்துக் கொண்டால் உமா வரதராஜன் தொடக்கம் ரஞ்சகுமார், கவியுவன் வரை பலர் வெகுஜனப் பத்திரிகைகளிலும் எழுதியிருக்கிறார்கள்.



இந்தப் போக்கு ஒரு ஆரோக்கியமான தளத்தில் இணைந்து போக வேண்டுமானால் பத்திரிகை ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கு பத்திரிகைத்துறை மட்டுமல்ல, இலக்கிய ஆழம், அரசியல் ஆழம், வெளியுலகம், பிறமொழி பற்றிய தேடல் அறிவு இருத்தல் அவசியம். இத்தகைய விரிவு இல்லை. இது மிகவும் பலவீனமானது.

**அனுபவம் சார்ந்து வாழ்க்கை சிக்கல்களைப் பற்றி விவாதிப்பது - அது பற்றிப் பேசுவது தீவிர இலக்கியத்தின் முக்கிய வெளிப்பாடு என்கிறார்கள். நமது ஈழத்து தமிழ் சூழலில் நமது அனுபவம் சார்ந்து நமது வாழ்க்கை பற்றிய தேடலுக்கு நாம் நமது கலைகளை பயன்படுத்தியிருக்கிறோமா?**

அனுபவம் ஒரு முக்கியமான விசயம், அனுபவத்தை நீங்கள் மிகவும் ஆழமாக மற்றவர்களுக்கு தொற்றும்படியாகச் சொல்லலாம். அல்லது வரட்டுத் தனமாகவும் சொல்லலாம். குறிப்பான உதாரணங்களால் சொல்ல வேண்டுமானால் அண்மைக் காலத்துச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சக்கரவர்த்தியின் கதைகள், கவியுவன், ஷோபாசக்தி, சுரேஷ் சுப்பிரமணியம், ரஞ்சகுமார் போன்றோரின் கதைகளை நீங்கள் பார்ப்பீர்களேயானால் அவர்களுடைய அனுபவங்கள் மிகவும் உயிர்ப்பான முறையில் வாசகர்களிடம் தொற்றி உள்ளது. இது இலக்கியத்தில் மிகவும் முக்கியமான ஒரு பரிணாமம். ஆனால் இது போதாது. இது சிறுகதைக்கு மட்டுமல்ல ஈழத்து தமிழ் கவிதைகளுக்கும் பொருந்தும். அனுபவத்தை உயிர்ப்பாகக் கொடுப்பது என்பது வேறு, அந்த அனுபவத்தை ஒரு சமூக, அரசியல் வரலாற்றுப் பகைப்புலத்தில் வைத்துக் கொடுப்பது என்பது வேறு. இப்படி அனுபவத்தைக் கொடுக்க முற்படும் போது அதற்கொரு ஆழம் வரும். அப்படியொரு ஆழம் வரும் போதுதான் இலக்கியம் இன்னொரு கட்டத்திற்குப் போகிறது என்பதுதான் என்னுடைய கருத்து. இக்கட்டத்திற்கு ஒரு படைப்பாளி பாய முடியாமல் போய்விட்டால், குறிப்பிட்ட வட்டத்திற்குள் தங்கிவிடுபவராகிறார். அனுபவத்தைத் திருப்பித் திருப்பி ஆழமாகத் தருவதே நமது ஏராளமான படைப்பாளிகளின் வேலையாகிப் போய்விட்டது.

ஈழத்தில் கவிதைகளிலும், சிறுகதைகளிலும், நாடகத்திலும் கணிசமான மாற்றங்கள் நடந்திருக்கின்றன. நாவலில் அப்படியொரு பாய்ச்சல் நடந்திருப்பதாக சொல்ல முடியவில்லை.

போராட்டம் என்பது நாணயத்தின் ஒரு பக்கம் என்றால், சொந்த இடத்தைவிட்டு அகதிகளாய்ப் புலம்பெயர்வது அந்த நாணயத்தின் மற்றப்பக்கம். புலம் பெயர்ந்து போகிறார்கள் என்பதற்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் புலம் பெயர்ந்து போகின்றவர்களை "நாய்கள், பேய்கள்" என்று பேச முடியாது. வரலாற்றில் அது சாத்தியமில்லை. எங்கெங்கு போராட்டம் நடந்திருக்கின்றதோ அங்கெல்லாம் மனித இடப் பெயர்வும், புலம் பெயர்வும் நடந்துதான் உள்ளன. லட்சக்கணக்கானோர் இப்படிப் புலம்பெயர்ந்துள்ளனர். அவர்களும், அவர்களின் அனுபவங்களும் கவிதைக்கூடாக, சிறுகதைக்கூடாக, ஓவியத்திற்கூடாக, நாடகத்திற்கூடாக வெளிவந்திருக்கின்றன. குறிப்பாக Non Fiction என்று சொல்லப்படுகின்ற வாழ்க்கை அனுபவங்கள், வரலாற்றுப் பதிவுகள் இன்னும் முக்கியமாக வெளியாக வேண்டும். இந்தச் சவால்களை நாம் எதிர் கொள்வதற்கு புலம்பெயர் இலக்கியமும் புலம்பெயர்வும் எமக்கு உதவக்கூடும்.

இன்னொரு தளத்தில் இப்புலம் பெயர்ந்தவர்களின் சிந்தனையும், கழிவிரக்கமும் ஈழத்தில்தான் குவிந்திருக்கிறது; பிணைந்திருக்கிறது. ஈழத்து இலக்கியத்திலிருந்து இவர்களைப் பிரித்துப் பார்க்க முடியும் என்று நான் கருதவில்லை. அடுத்த தலைமுறையில் மாற்றங்கள் நிகழலாம். அடுத்த தலைமுறை தமிழில்தான் எழுதும் என்றும் இல்லை, சியாம் செல்லதுரை எழுதுவது மாதிரி ஆங்கிலத்தில்தான் எழுதுவார்கள். ஆனால் அத்தகைய எழுத்துக்களை வாசிக்கிற போது அவர்களின் உணர் திறனும், அவர்களின் அனுபவமும் தமிழ் நிலைப்பட்ட அனுபவமாக இருக்கக்கூடும். 83 இனப்படுகொலையில் தப்பி எப்படிப் புலம்பெயர்ந்தேன் என்பதை வைத்துத்தான் சியாம் எழுதியிருக்கிறார். அது தமிழில் வரவில்லை. ஆனால் அது பேசுவது தமிழ் நிலைப்பட்ட அனுபவம்தான். இன்று தமிழர்கள் அல்லது தமிழ் பேசும் மக்கள் என்பதை எப்படி வரைவு செய்வது என்பதே சுவாரசியமான முயற்சி. தமிழர் என்பது ஒன்றைப் பரிமாணம் கொண்ட ஒரு அடையாளமாக இருப்பது சாத்தியமில்லை. பன்முகத்தன்மை பெற்ற இந்த அடையாளம் ஆரோக்கியமானதுதான்.

**இன்றைய நெருக்கடிமிக்க சூழலில் வாழ்க்கைக்கும் கலைக்குமான உறவு உங்கள் அனுபவம் சார்ந்து எப்படி இருக்கிறது?**

என்னைப் பொறுத்தவரை இவ்விரண்டையும் பிரித்துப் பார்ப்பதே கஷ்டமாகயுள்ளது. ஒன்றிரண்டு நல்ல கவிதைகள் எழுதி விடுவது அவ்வளவு கஷ்டமான விசயமல்ல. சாதாரணமான எல்லா மனிதருக்குள்ளும் கவித்துவ உணர்வு இருக்கிறது. ஆனால் எல்லோரும் அதனை வெளிப்படுத்துவது இல்லை. இலக்கிய, அழகியல் உணர்வு எல்லா மனிதர்களிடமும் இருக்கிறது. மனிதராய் இருப்பதன் அடிப்படை-நுண்ணுணர்வுகள் கொண்டவராக இருப்பதும்தான். ஆனால் ஒரு கவியாக இருப்பது அல்லது ஒரு படைப்பாளியாக இருப்பது என்பது வித்தியாசமான ஒரு தளம். உங்களுக்குள் எப்போதும் கவிதை உணர்வும், சிந்தனையும் - நீங்கள் எழுதினாலும் சரி - எழுதாவிட்டாலும் சரி அது உங்களுள் சுரந்து கொண்டு இருக்கும். அந்த வகையில் வாழ்க்கையையும் கலையையும் பிரிக்க முடியும் என்று நான் நினைக்கவில்லை.

கலை - வாழ்க்கை அனுபவங்களில் இருந்து தனது செழிப்பையும் வளத்தையும், ஊட்டத்தையும் பெறுகிறது. ஒரு வீட்டைக் கட்டுவதும், உங்கள் ஆடையைத் தெரிவு செய்வதும் ஒரு கலைதான். ஒட்டுமொத்தமாக ஒரு படைப்பாளியின், ஒரு கவியின் நடத்தைகள், அம்சங்களில் எல்லாம் கலாபூர்வம் மிளிரமுடியும். வசதி கருதி வாழ்க்கையையும் கலையையும் பிரித்து விடுவது எனக்கு சாத்தியம் என்று தோன்றவில்லை.

**நமது தமிழ் சூழலில் கவிதை பற்றிய ஒரு கோட்பாட்டை ஏன் நம்மால் இன்னும் உருவாக்க முடியாமல் போய் விட்டது? கவிதையில் ஏன் மேனாட்டு கோட்பாடுகளை நாம் தலையில் வைத்திருக்கின்றோம்?**

எப்போதும் கோட்பாடு என்று போய் ஒரு வரையறையை நாங்கள் உருவாக்க முடிந்தால் அதனை இலக்கியமோ, கவிதையோ மீறிக் கொண்டுதான் போகும். அந்த வகையான ஒரு கட்டிறுக்கமான கோட்பாட்டை உருவாக்குவது சாத்தியமில்லை. ஆனால், கவிதை எப்படி காலங்காலமாக மாறிவந்திருக்கிறது என்பது பற்றிப் பேசலாம். அது தொடர்பாக கதைப்பதை ஒரு விமர்சனமாக எடுத்துக் கொண்டால் கவிதைக்கும் விமர்சனத்திற்குமான ஒரு தொடர்ச்சியான உரையாடலாகவும் அது இருக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தமிழ்க் கவிதையைப் பொறுத்தவரை மேனாட்டுக் கோட்பாடுகளை இப்போது யார் யார் முன்வைக்கிறார்கள் என்பது பற்றி விபரமாக எனக்குத் தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை எனது கவிதைகள் பற்றி ஒட்டுமொத்தமான, செழிப்பான விமர்சனங்கள் வரவில்லை. நான் தனிப்பட்ட முறையில் சொல்வதாக இருந்தால் எனது ஐந்து கவிதைத் தொகுதிகள் இதுவரை வெளிவந்திருக்கின்றன. இக்கவிதைத் தொகுதிகள் பற்றி வந்த விமர்சனங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். "இரண்டாவது சூரிய உதயம்" "யமன்" ஆகிய இரு தொகுதிகளும் வந்தபின் சிவத்தம்பி அவர்கள் ஒரு நீண்ட ஆரோக்கியமான விமர்சனம் எழுதியிருந்தார். "எரிந்து கொண்டிருக்கும் நேரம்" வந்தவுடன் இந்திரன் (தமிழ்நாடு) ஒரு விமர்சனம் எழுதியிருந்தார் "எலும்புக் கூடுகளின் ஊர்வலம்" பற்றி சிவசேகரம் அவர்கள் ஒரு விமர்சனம் எழுதியிருந்தார்.

இவற்றைவிட ஆங்காங்கே சில விமர்சனக் குறிப்புகள் வந்திருக்கின்றன. ஆனால், ஆழமான விமர்சனங்கள், திறனாய்வுகள் என்று எனது கவிதை பற்றியோ அல்லது தனிப்பட்ட ஆளுமைகளாக ஈழத்தில் வெளிக்கிளம்பிய கவிஞர்கள் பற்றியோ வெளிவரவில்லை. மஹாகவி பற்றி சண்முகம் சிவலிங்கம், நு.்மான் போன்றவர்கள் விமர்சனங்களை எழுதியுள்ளார்கள். ஆனாலும் இத்தனிப்பட்ட ஆளுமைகள் பற்றிய விரிவான ஆழமான விமர்சனங்கள் நமக்குள் வரவில்லை. அது எமது விமர்சனப் பாரம்பரியத்தில் உள்ள குறைபாடுதான். தனி ஆளுமையையும், கவனத்தில் எடுப்பதற்குப் பதிலாக சில போக்குகளை அடையாளம் கண்டு அப்போக்குகளுக்கு உதாரணங்களாகவே அக்கவிஞர்களை காட்டும் நிலைதான் இருக்கிறது. இலக்கியத் திறனாய்வுக்குப் பதிலாக இலக்கியத்தின் சமூகவியல் பின்னணிக்கு அழுத்தம் கொடுப்பதாக மாறி நிற்கிறது. "இலக்கியத்தை, சமூகவியல் ஆய்வுக்குரிய கச்சாப் பொருளாகப் பாவிப்பதைத் தடை செய்ய வேண்டும்" என்று லியோ லொவந்தால் என்ற அறிஞர் கூறியிருப்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் நினைவு கொள்ளலாம். இது நமது இலக்கியத் திறனாய்வுப் பலவீனம். இப்போது வெளிவரும் பத்திரிகைகளும் கூட, இலக்கியத் திறனாய்வுக்குப் பதிலாக, அரசியல், சமூகவியல் போக்குகளுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றன. இது தேவையில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒரு விசயத்தை நாம் வலியுறுத்த முற்படும் போது மற்ற விசயங்களை விட்டு விடுகின்றோம். இங்கு சமநிலை இல்லாது போய்விடுகிறது. இங்கு மட்டுமல்ல, தமிழ் நாட்டிலும் இதுதான் நிலை.

**உங்கள் தத்துவத் தளம் என்ன?**

மனிதனாய் இருப்பது.

**இன்று 'மார்க்ஸிஸம்' எந்தளவிற்கு மனிதகுல விடுதலைக்கு பங்காற்ற முடியும்?**

நீங்கள் 'மார்க்ஸிஸம்' என்று சொல்வதிலே ஒரு அடிப்படைப் பிரச்சினை இருக்கிறது. 'மார்க்ஸிஸங்கள்' என்றுதான் சொல்ல வேண்டும் என்பது என் கருத்து. சோவியத் யூனியனின் உடைவு, இன்று பலரும் சொல்வது போன்ற 'பின் மார்க்ஸிஸம்' பெரும்பாலான பின் நவீனத்துவவாதிகள் சொல்வது போன்று மார்க்ஸிஸம் ஒரு காலாவதியான கோட்பாடு என்று சொல்வதில் எனக்கு நிறையப் பிரச்சினைகள் உள்ளன. ஏனெனில் முதலாளித்துவத்திற்கும், ஒடுக்கப்படுகின்ற மக்கள் தொழிலாளர்களுக்குமிடையிலான அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கும் வரைக்கும் மார்க்ஸிஸத்துக்கு வலு இருக்கத்தான் செய்யும். இன்றைய காலகட்டத்திற்கு முகம் கொடுக்கக் கூடியவாறு கருத்தியல் தளத்திலேயும், போராட்டத் தளத்திலேயும், அனுபவத் தளத்திலேயும் அதனுடைய வடிவங்களும், சிந்தனைகளும், நடைமுறையும் மாறியுள்ளன. அந்தப் போக்கில் எனக்கு நம்பிக்கை உள்ளது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் சுதேசிய மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், நிலவுடமையாளர்களுக்கும் இடையிலான பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படாமலேயே உள்ளன என்பது மட்டுமல்ல, நவீன போராட்டங்களும் வெடித்துள்ளன. உலகில் பல்வேறு நாடுகளிலும் இப்பிரச்சினை உள்ளது. 'உலக மயமாக்கல்' மூலம் தேசிய எல்லைகளை, தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. மூலதனம் எந்த தேசிய எல்லைகளும் இல்லாது எல்லா இடத்திற்கும் பரவுகிற அதே நேரம் நடைமுறையில் மனிதர்களும், தொழிலாளர்களும் இவ்வாறு போக முடியாது. இதற்குள் வர்க்கம் மட்டுமல்ல, இனத்துவம், பால் போன்ற பல்வேறு விசயங்கள் உள்ளன. ஆகவே இவ்வனுபவங்களை உள்வாங்கி புதிய புதிய தளங்களுக்குப் போவதற்கான சிந்தனைகள் மார்க்ஸிஸ சிந்தனைக்கூடாக கைகூடி வருகிறது. எனினும் இப்போக்கு இன்னும் போதுமான அளவு பலம் பெறவில்லை.

**'அரசியல் போராட்டத்தில் முழு நேர ஈடுபாடு' உங்கள் தலைமுறையின் தனிச்சிறப்பாக இருந்துள்ளது. அந்தக் காலகட்டத்தில் உங்கள் அனுபவம் என்ன? இன்று அதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

எனது வாழ்வையும், எனது அனுபவத்தையும், எனது கவிதைகளையும் பொறுத்தவரை அரசியலையும், அரசியல் ஈடுபாட்டையும் அதிலிருந்து பிரிக்க முடியாது என்றே நான் கருதுகின்றேன். இன்றும் இதற்குப் 15 வருடத்திற்கு முன்பும் இதுதான் எனது நிலைப்பாடு. இயக்கத்தில் இருந்து இரண்டு மூன்று சாதனைகளைச் செய்து விட்டு வெளியேறி குடியும், குடித்தனமுமாக இருந்து கொண்டு – 'இவன்கள் இன்னும் அரசியலில் இருக்கிறார்கள்' என்று கிண்டலாகச் சொல்வது போல் இல்லை எனது அரசியல். அதே நேரம் கட்சி சார்பற்று, அரசியல் இயக்கங்கள் சார்பற்று சுயாதீனமான அரசியலை முன்னெடுப்பதில் மிகவும் ஆபத்துக்களும், சிக்கல்களும் நிறைய உள்ளன. என்னைப் பொறுத்தவரை ஒரு இயக்கத்திலோ ஒரு கட்சியிலோ முற்றுமுழுதாகச் சேர்ந்து வேலை செய்யலாம் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. அது எனது தனிப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பலவீனமாகவும் இருக்கக்கூடும். என்னுடைய யதார்த்தம் இப்படித்தான் உள்ளது. அதே நேரம் இந்தப் போராட்டம் ஏதோ ஒரு வகையில் நடந்து, தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இப்போராட்டம் பற்றி எனக்கு ஏராளமான விமர்சனங்கள் உள்ளன. ஆனால் இத்தளத்திலிருந்து நான் ஒதுங்கி விடவில்லை. அப்படி ஒதுங்கமுடியும் என்று நான் நம்பவுமில்லை. என்னுடைய கருத்துக்களையும், சிந்தனைகளையும் நான் பகிரங்கமாகவே தெரிவித்து வருகின்றேன். கருத்துக்களை, மாற்றுக் கருத்துக்களால் மட்டுமே எதிர் கொள்ளலாம் என்ற சூழல் இருக்கும் வரை நான் தப்பிப் பிழைத்து விடுவேன்.



உங்களுடைய கேள்விக்குப் பின்னணியில் உள்ள ஒரு முக்கியமான விசயத்தைப் பற்றியும் நாம் பேச வேண்டும். மார்க்ஸிஸம் என்பது ஒரு கட்சி சார்ந்து ஒரு அரசு சார்ந்ததுதான் இயக்கமாக இருக்க வேண்டும் என்ற குறுகிய நம்பிக்கை இப்போது இல்லை. அது கல்வித்துறை சார்ந்து, சமூகவியல், அரசியல், இலக்கியப் போக்கு சார்ந்தும் இருக்கிறது. அதேநேரம் அது ஒரு அரசியல் இயக்கமாகவும இருக்கிறது. அதற்கு பல்வேறுபட்ட வடிவங்கள் இன்று இருக்கின்றன. ஆனால் ஒரு 15 வருடங்களுக்கு முன்பு நீங்கள் ஒரு இடதுசாரியாக அல்லது மார்க்ஸிஸவாதியாக இருப்பதென்றால் கட்சிக்குள் இருந்தால் மட்டுமே அது சாத்தியம் என்ற நிலை இருந்தது. இப்போது அந்த நிலைமை இல்லை, இது மார்க்ஸிஸத்திற்கு மட்டுமல்ல, பெண்ணியம், தலித்தியம் போன்ற பல விசயங்களுக்கும் பொருந்தும். கட்டாயம் ஒரு கட்சியை இயக்கத்தை சார்ந்து இருப்பதுதான் உங்கள் கருத்தியலை தீர்மானிக்க வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இன்று இல்லை.

**எதிரே திரண்டு நிற்கும் அடக்குமுறை, அச்சுறுத்தல் சக்திகளை எதிர் கொள்வதற்கு பல தனிமனிதர்கள், பல நிறுவனங்களின் இணைப்பினூடான பெரும் பலம் இன்று தேவைப்படுகிறதே? இது காலத்தின் தேவையாகவும் மாறி நிற்கிறதே?**

நிச்சயமாக, இதுவொரு கட்டிறுக்கமான அரசியல் யாப்பை கொண்ட கட்சியாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை, பல்வேறு கருத்துள்ளவர்களும் சில அடிப்படையான விடயங்களில் உடன்பாடு கொண்டவர்களும் பங்குபெறும் ஒரு கூட்டு அரசியலாக இருக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட நிறுவனங்கள், கட்சிகள் ஏன் ஒரு பொதுவான வேலைத்திட்டங்களின் கீழ் ஒன்றிணைந்து வேலை செய்ய முடியாதுள்ளது? இங்கு மீண்டும் மீண்டும் எமது வரலாற்றைப் பார்ப்பீர்களேயானால் எங்களுக்கு இருக்கக்கூடிய மிகப் பெரும் சிக்கல். ஒரு கட்சி, அது தன்முனைப்பாக Van guard மாதிரி போராடுகின்ற கட்சியாக, இயக்கமாக இருக்க வேண்டும் என்பது இந்த மனநிலை முதலில் மாற்றப்பட வேண்டும். அப்படி இருக்க வேண்டுமென்ற அவசியமும் இல்லை. கூட்டரசியல் பற்றி நாம் தீவிரமாக யோசிக்க வேண்டும்.

இன்றைய சமகால அரசியல் வரலாற்றில் நிக்கரகுவா, எவ்சல்வடோர், கிழக்குதிமோரை எடுத்துப் பார்ப்போமானால் ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகளும், நிறுவனங்களும் பல்வேறுபட்ட கருத்துடையவர்களும் ஒரு பொதுவான வேலைத்திட்டத்தின் கீழ், ஒரு ஐக்கிய முன்னணியின் கீழ் வந்திருக்கிறார்கள். எங்கள் துரதிர்ஷ்டம் அப்படி ஒரு ஐக்கிய முன்னணிக்கு எந்தவித சாத்தியமும் இல்லாது இருப்பதாகும். அப்படியான ஒரு ஐக்கிய முன்னணி ஏற்படும் போது தனிநபர்கள், பல்கலைக்கழகங்கள், பல்வேறுபட்ட நிறுவனங்கள், புத்திஜீவிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் போன்ற பலர் இணைந்து வேலை செய்வதில் எந்தவிதமான சிக்கலும் இருக்காது. அங்கு ஒவ்வொருவரினது தனித்துவமும், சுயநிர்ணயமும் பேணப்படும். சுயநிர்ணயம் கட்சிக்கு அல்லது ஒரு தேசிய இனத்திற்கு மட்டும்தான் என நாம் வரையறுக்க முடியாது! ஒவ்வொரு தனிநபருக்கும் அது இருக்கிறது. இதனைக் கவனத்திற் கொள்ள வேண்டும்.

மக்கள் குழுக்களுக்கு அல்லது இனத்துவக் குழுக்களுக்கு கூட்டாக இருக்கக்கூடிய உரிமைகள் உள்ளன. ஒரு தனிநபருக்கு தனியாள் என்ற வகையில் தனிநபர் உரிமையும் (Individual Rights) உள்ளது. இந்த இரண்டுக்கும் இடையில் ஒரு சேதன பூர்வமான இணக்கம் இருக்க முடியுமென்றால் இன்றைய பிரச்சினைகளில் பலவற்றுக்கு இடமிருக்காது.

**படைப்பாளியாகவும் பத்திரிகையாளனாகவும் இருப்பதில் உள்ள உறவுகளும் முரண்பாடுகளும் யாது?**

முரண்பாடுகள் என்று பெரியளவில் இருக்குமா என்று தெரியவில்லை. ஆனால் என்னை எடுத்துக் கொண்டால், நானொரு கவிஞனாகவும், பத்திரிகையாளனாகவும், பல்கலைக்கழகத்தில் சமூகவியல் படிப்பிப்பவனாகவும் இருக்கின்றேன். இவற்றைவிட வேறுபட்ட பல தளங்களும் எனக்குள் உள்ளன. ஒருவர் தன்னை ஒரு தனி அடையாளத்திற்குள் குறுக்கிக் கொள்வது அவசியமன்று. நீங்கள் ஒரு படைப்பாளியாக இருக்கும் அதே நேரம் பத்திரிகையாளராகவும் இருக்கிறீர்கள். இருக்கக் கூடாது என்ற நிர்ப்பந்தம் இல்லை. ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பல தளங்களிலேயும் ஈடுபாடாகப் பங்களிக்கலாம். ஆழமும், காத்திரமும் அவரின் ஆளுமையையும் தெரிவையும் பொறுத்தது. தனியே ஒரே வட்டத்திற்குள் குறுகிக் கொண்டு நிற்பதால் எமது அனுபவச் செறிவும், சிந்தனை ஆழமும், பார்வையின் விரிவும் மிகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறைவாகவே இருக்கும். கடந்தகால அனுபவங்களினடியாகப் பேசுகிற போது ஒரு பத்திரிகையாளனாகவும் சமூகவியல், அரசியல் விடயங்களில் ஆர்வம் கொண்டிருந்ததன் பயனாகவும் எனது சிந்தனை ஆழமும் உரமும் பெற்று இருக்கிறதே தவிர குன்றிப் போய் விடவில்லை. அதே நேரம் சிக்கல்கள் இருப்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். எப்படியென்றால், ஒரு வருடம் 365 நாளும் முழுக்க முழுக்க கவிதா மனத்துடன் இருப்பது என்பது ஒரு நல்ல அனுபவம். அதே நேரத்தில் வேறு விசயங்களும் உங்களுக்குள் முன்னுரிமை கேட்டு போராடிக் கொண்டிருக்கக் கூடும். ஒரு கட்டுரை எழுத வேண்டியிருக்கும், அதேநேரம் உங்கள் மனதுக்குள் ஒரு கவிதை துளிர்விட்டுக் கொண்டிருக்கும், அதேநேரம் நாடகத்திற்கு ஒரு பிரதி எழுத வேண்டியிருக்கும். இவ்வளவு விசயங்களையும் நீங்கள் முற்று முழுதான ஈடுபாட்டுடன் செய்யும் போது உங்களுக்குள்ளேயே ஒரு தெரிவுச் சிக்கல் இருக்கும். அதில் சில விசயங்களை நீங்கள் முற்று முழுதாக செய்ய முடியாமல் இருக்கும். இது ஒருவகை யான சிக்கல்தான். ஆனால் இதனை தவிர்க்க முடியாது.

**நீங்கள் பிரதம ஆசிரியராக இருக்கும் 'சரிநிகர்' ஈழத்து அரசியல், கலை, இலக்கிய சூழலில் ஒரு தசாப்த காலமாக ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்த உங்கள் மதிப்பீடு என்ன?**

சரிநிகரின் ஆரம்ப கட்டங்களில் நான் பிரதம ஆசிரியராக இருந்தது உண்மை. அப்போது அதற்கான ஒரு அரசியல் தேவையும் இருந்தது. பிற்பாடு 1993ல் நான் இலங்கையை விட்டு வெளியேற நேர்ந்தது. அதற்குப் பிற்பாடு என்னுடைய நாட்கள் கனடாவில் பாதி இலங்கையில் மீதி என்று கழிந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சூழலில் சரிநிகரின் பொறுப்பு முழுவதும் ஒரு கூட்டு ஆசிரியத்துவமாக இருக்கிற வகையில் மாற்றியமைத்தோம். இந்தக் கூட்டு ஆசிரியத்துவத்துக்கு என்னோடு கூடவே இன்று பொறுப்பாக இருப்பவர்கள் அருண், ரஞ்சித், அரவிந்தன் ஆகிய புனைப் பெயர்களில் எழுதி வரும் எஸ்.கே. விக்னேஸ்வரன், பஞ்சமன், சங்கரன் போன்ற புனைப் பெயர்களில் எழுதிவரும் பா. சிவகுமார், எம்.கே.எம். ஷகீப், என். சரவணன் ஆகியோர். அ.இரவி, சி. ஜோதிலிங்கம் ஆகியோரும் எமது ஆசிரியர் குழுவில் நீண்டகாலம் பணியாற்றியவர்கள். சரிநிகரின் சாதனைகள், வீச்சு, தாக்கம் என்பவற்றுக்கு இவர்கள் எல்லோருமேதான் பொறுப்பு.

1990இல் 'சரிநிகர்' வர ஆரம்பித்த போது இருந்த நிலைமையும் பயங்கரமான அரசியல் சூழலும் இப்போது இல்லை. அந்தக் காலத்தில் மாற்றுக் கருத்துக்களை தெரிவிப்பதற்கு எந்தவிதமான பத்திரிகைகளும் இருக்கவில்லை. அரசியலுக்குச் சமாந்திரமாகப் பண்பாட்டு, கலாசார விடயங்களையும் இணைத்துக் கொள்ளக்கூடிய ஒரு பத்திரிகை ஈழத்தில் இருக்கவில்லை. இம்மாதிரியான பத்திரிகைகள் தமிழில் சரிநிகரைவிட வேறு இருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை. சரிநிகரின் வருகைக்குப் பின்புதான் மாற்று அரசியல் கருத்துக்களையும் துணிச்சலுடன் எழுதலாம் என்ற உத்வேகம் பல இடங்களில் இருந்தும் வெளிவர ஆரம்பித்தன. இன்று ஈழத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் வெளிவரும் பத்திரிகைகளில் சரிநிகரின் தாக்கத்தையும் பாதிப்பையும், சிந்தனை வீச்சையும் நீங்கள் பார்க்கலாம். இது ஒரு முக்கியமான தாக்கம். எந்தவிதமான கட்சி சார்பும் இல்லாது, மாற்றுக் கருத்துக்களையும் மாற்று சிந்தனைகளையும் தாக்கமாகக் கொடுக்கலாம்; அதனைத் துணிவாகவும் நீங்கள் செய்யலாம் என்ற நம்பிக்கையை 'சரிநிகர்'தான் கொடுத்திருக்கிறது இது மிகவும் முக்கியமான பங்களிப்பாகும்.

இரண்டாவதாக– சிறுகதை, கவிதை மற்றும் பண்பாட்டு அரசியல், பெண்ணியம், பஞ்சமரியம் போன்ற பல துறைகளில் தமிழ்ச் சூழலுக்கு 'சரிநிகர்' முக்கியமான பங்கு அளித்திருக்கிறது. மூன்றாவதாக சரிநிகரின் முதலாவது இதழின் ஆசிரியர் தலையங்கத்திலேயே குறிப்பிட்டபடி எழுத்திலேயும் நடைமுறையிலேயும் முதல் தடவையாக இந்த நாடு தனியொரு இனத்துக்கு மட்டும் சொந்தமான நாடு அல்ல என்பதனையும், சிங்கள மக்கள், தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், மலையக மக்களுக்கும் சொந்தமானது என்பதனை அம்மக்களினது குறிப்பானதும் தனித்துவமானதுமான சிந்தனைக்கூடாக வெளிப்படுத்தியிருக்கிறோம். சரிநிகரில் கடந்த 10 வருடமாக இச்சிந்தனைகள் வெளிப்படுத்தப்பட்ட அளவிற்கு தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ அல்லது சிங்களத்திலோ யாரும் வெளிப்படுத்தவில்லை என்பதை நான் துணிந்து கூறுவேன்.

அடுத்ததாக, இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த 48லிருந்து இன்றுவரை சிங்கள மொழி மூலம் வரக்கூடிய அவர்களுடைய கலை, இலக்கிய, அரசியல் சிந்தனைகளை தமிழுக்கு சரிநிகர் கொண்டு வந்திருக்கிறது. இதனைத் தமிழ்ச் சூழலில் விரிவாக யாருமே இதுவரை செய்யவில்லை. இந்தப் பணியை முன்னெடுத்ததன் ஊடாக தமிழில் வரக்கூடிய எமது சிந்தனைகளும் எமது இலக்கிய முயற்சிகளும் சிங்கள மொழியில் பரிமாறப்பட்டன – இதுவும் மிகவும் பிரதானமானது.

ஈழத்து தமிழ் பத்திரிகைச் சூழலில் வாசகர்களின் எதிர்வினைகளுக்கும் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் பாரம்பரியம் இருக்கவில்லை. இதனை 'சரிநிகர்' மாற்ற முயல்கிறது. மாற்றுக் கருத்துக்களுக்கு நாம் முக்கியத்துவம் அளிக்கிறோம். இவ்வளவு விடயங்களையும் பத்து வருடங்களுக்குள், மிக நெருக்கடியான சூழலில் செய்ய முடிந்தது சாதனைதான். பல்வேறு அரசியல் காரணங்களால் சரியான விநியோகத்தை எம்மால் வடக்கு கிழக்கில் செய்ய முடியவில்லை. வடக்கில் எமது பத்திரிகையின் விநியோகத்தை புலிகள் தடை செய்திருந்தார்கள். இப்படியான நெருக்கடிகளுக்குள்ளும் நாம் சாதித்ததையிட்டு பெருமைப்படத் தேவையில்லை ஆனால் சந்தோஷப்படுகின்றோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**தமிழ்த் தேசியவாதம் தொடர்பான உங்கள் நிலைப்பாடு?**

தமிழ்த் தேசியவாதம் தொடர்பாகப் பேசுவதற்கு முன், தேசியவாதங்கள் தொடர்பான சில கருத்துக்களை முன்வைக்க வேண்டும். தேசியவாதம் தொடர்பாக ஒட்டுமொத்தமான ஒரு கருத்தை முன்வைப்பது குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். தேசியவாதத்திற்குள் மிக மோசமான போக்குகளும், பல்வேறு வடிவங்களும் உள்ளன; பல்வேறு வகையான கருத்தியல்கள் அதனுள் இருக்கின்றன.

உதாரணமாக பிரித்தானியாவுக்கு எதிராக எழுந்த தேசியவாதத்தையும் தமிழ்த் தேசியவாதத்தையும் நாங்கள் ஒன்றாகப் பார்க்க முடியாது. ஆக்கிரமிப்புக்கு எதிரான தேசியவாதம் வேறு, நாடுகள் சுதந்திரமடைந்ததன் பின் ஏற்பட்ட இனத்துவத் தேசியவாதம் வேறு, குணங்களும் வேறு. ஆகவே தேசியவாதத்தை நாம் குப்பைத் தொட்டியில் போடுவதும் பிழை. தேசியவாதத்தில் மட்டும் தங்கி நிற்பதும் அதனைக் கட்டு மீறிக் கொண்டாடுவதும் ஒரு ஆரோக்கியமான போக்காக இருக்காது. இவ்விரண்டு துருவங்களுக்கும் இடையில் பல்வேறுபட்ட போக்குகளும், பல்வேறுபட்ட தளத்திலான பிரச்சினைகளும் உள்ளன. ஆகவே ஒவ்வொரு தேசியவாதத்தையும் அந்தந்த தேசியவாதத்திற்கு இருக்கக் கூடிய குறிப்பான அரசியல், சமூக வரலாற்றுடன் பொருத்திப் பார்க்க வேண்டும். உதாரணமாக பலஸ்தீன மக்களிடம் போய் சொல்ல முடியாது. 'பலஸ்தீன மக்களே, தேசியவாதம் ஒரு ஆபத்தான விடயம், உங்கள் தேசியவாதத்தைக் கைவிடுங்கள்' என்று. ஒடுக்கப்படும் மக்களின் தேசியவாதம் என்பதற்காக அத்தேசியவாதங்களை நிபந்தனையற்று நாம் ஆதரிக்கவோ, ஏற்றுக் கொள்ளவோ முடியாது. அடையாளம், இருப்பு ஆகியவற்றோடு தொடர்புற்றுள்ளது என்ற வகையில் ஒடுக்கப்படும் மக்களிடையே மேலெழும் தேசியவாதத்திற்கு ஒரு பங்கு இருக்கிறது. ஆனால் இத்தேசியவாதம் பன்முகப்பாங்கையும், மற்றையவர்களுடைய இருப்பு, அடையாளங்கள் என்பனவற்றுக்கு எதிராகப் பேரினவாதமாக மாறக்கூடிய அபாயங்களும் எப்போதும் உள்ளன. இதனைமிட்டு நாம் விழிப்பாக இருக்க வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுடைய தேசியவாதத்தை பாம்பு செட்டை கழற்றி விட்டது போல வீசி விட மாட்டார்கள். அத்தேசியவாதத்தின் சிக்கல்களையும், ஆபத்துக்களையும், சாதக, பாதகங்களையும் அவர்கள் வாழ்ந்து கடக்க வேண்டியிருக்கிறது. இதன் விளைவாகப் பொறுமையும், பன்மைத் தன்மையும், தேடலும், ஆரோக்கியமும் மிக்க அடையாளத்திற்கும் தேசியவாதத்திற்கும் அவர்கள் வர முடியுமானால் பிரச்சினைகள் இல்லை. அப்படி வரமுடியாமல் இருந்தால் பேரினவாதமாகத் தேங்கி விடுகிற அபாயம்தான் உள்ளது.



தமிழ் தேசியவாதத்தை எடுத்துக் கொண்டால் 48க்குப் பிறகு தமிழரசுக் கட்சி, பிற்பாடு தமிழர் விடுதலைக் கூட்டணி என வெளிப்பட்ட ஒரு தேசியவாதம் வெறும் இனத்துவம், மொழி சார்ந்த தேசியவாதமாகவே இருந்துள்ளது. அந்த தேசியவாதத்திற்கு வர்க்கம், பெண்ணியம், சாதி போன்றவை குறித்த பிரக்ஞை இருக்கவில்லை. அது அந்தக் காலகட்டத்தையும் பொறுத்தது. ஆனால் 79க்குப் பிறகு தேசியவாதம் என்பது தேசிய விடுதலைப் போராட்டம் என்றவாறு முன்வைக்கப்படுகிறது. தேசிய விடுதலைப் போராட்டம் என்ற கருத்தை முன்வைக்கும் போது ஒடுக்கப்படுகின்ற மக்கள் ஒடுக்குகின்ற சக்திகளுக்கெதிராக போராடுகின்ற ஒரு முற்போக்கு கருத்து வருகிறது. அதில் விடுதலை என்ற கருத்து பரந்த, ஆழமான அம்சத்தில் பாவிக்கப்படுகிறது. இனத்துவ, வர்க்க, பெண்ணிய விடுதலையுடனும் அது சம்பந்தப்பட்டுள்ளது.

EPRLF, EROS தொடக்கம் புலிகள் வரை இதைத்தான் சொன்னார்கள். ஆனால் 85க்குப் பிற்பாடு தமது சிறப்பான 'இயக்க விதி'யின் பயனாக எல்லா இயக்கங்களையும் புலிகள் பலாத்காரமாக ஒழித்து மேலாதிக்கத்திற்கு வந்தபின் தேசிய விடுதலைப் போராட்டம் என்ற கருத்து பின்னுக்குப் போய் தேசவிடுதலை, இன விடுதலை என்று வருகிறது. அதில் வெறும் இனத்துவமும், தமிழர் அடையாளமும் மட்டும்தான் சம்பந்தப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கின்ற போது ஒரு உன்னதமான, நியாயமான லட்சியங்களில் இருந்து இப்போது ஒரு வகையான பின்னடைவு இன்னும் உரத்துச் சொல்வதானால் சீரழிவே நடந்திருக்கிறது.

தமிழ் தேசியவாதம் ஒரு காலத்தில் முஸ்லிம், சிங்கள, மலையக மக்களைப் பற்றி பேசி இருக்கிறது. அவற்றை எல்லாம் விட்டுவிட்டு வெறும் தமிழன் என்ற உணர்ச்சியைத்தான் இப்போது மேலாட்சி பெற்றிருக்கிற தேசியவாதம் பேசுகிறது. அந்தத் தேசியவாதம்தான் யார் தமிழன் (ஆண்பால்) என்பதை தீர்மானிக்கிறது. வெளியில் இருந்து யார் வந்தாலும் தள்ளிவிடும். இது தேசியவாதமில்லை. நான் முன்பே சொல்லியது போல இது ஒரு வகையான பேரினவாதமும் ஆபத்தானதும் கூட. இது ஆரோக்கியமானதல்ல. இவ்வகையான தேசியவாதத்திற்கும் எனக்குமிடையே ஒரு வகையான உறவும் கிடையாது.

**நேற்றைய வாழ்வை பொற்காலமாகவும் தற்கால வாழ்வை சீரழிவாகவும் பார்ப்பது அபத்தமா?**

நேற்றைய வாழ்வை ஒரு பொற்காலமாக நினைத்து அந்தக் காலத்திலேயே நின்று கொண்டு, அக்காலத்தைப் பற்றியே பேசிக் கொண்டும் இருப்பது தேசியவாதத்தின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆபத்தான கூறுதான். அதுதான் இப்போது பலம்பெற்று வருகிறது என்று தெரிகிறது.

விடுதலைப் புலிகளின் கருத்தியலும், புலம்பெயர்ந்த தமிழர்களினால் வெளியிடப்படுகின்ற பத்திரிகைகளிலும் அவர்களுடைய விழாக்களிலும் இந்த அம்சம் தூக்கலாக இருக்கிறது. 'தமிழன்' என்ற அடையாளத்தையும், இருப்பையும் வலிமையாக்க சங்ககாலமும் சோழர் காலமும் திராவிடச் சமூகத்தின் பிற்போக்கான அம்சங்களும் தாராளமாக பயன்படுத்தப்படுகின்றன. 90களில் புலிகள் யாழ்பாணத்தில் அறிமுகப்படுத்த முயன்ற 'தனித்தமிழ்' முயற்சியையும் இப்பின்னணியிலே நாம் பார்க்க வேண்டும். கண்மூடித்தனமான பழைய பொற்காலத்திற்கு திரும்புவது என்பது தேசியவாதிகளின் ஆபத்தான ஒரு அம்சம். சேர்பியத் தேசியவாதமும் சரி, ஸியோனிசமும் சரி தமிழ்த் தேசியவாதமும் சரி, இத்தகைய போக்கை வெளிப்படுத்துகின்றன. தமிழ் தேசியவாதச் சூழலில் சுவையான சில உதாரணங்களைத் தரலாம். புலிகளில் CDல் இருந்து ஒரு பாடல் இப்படி வருகிறது.

ஆழக்கடல் எங்கும் சோழ மகாராஜன்
ஆட்சி புரிந்தானே அன்று - இந்த
ஈழக் கடல் எங்கும் எங்கள் கரிகாலன்
ஆட்சி புரிகிறான் இன்று

காலை விடிந்தது என்று பாடு - சங்க காலம்
புலர்ந்தது என்று ஆடு!

கிளிநொச்சிக்கு தாக்குதலை பற்றிய செய்தியும் இப்படி தலைப்பாக வெளிவந்தது.

"சோழர் வாங்கிய அடிக்குப் பிறகு கிடைத்த பெரிய அடி."

இவை ஒன்று இரண்டு உதாரணங்கள் என்று மட்டுமே சொல்லிவிட முடியாது. தொடர்ச்சியாக இந்தக் கருத்தியல் வெளிப்படுத்தப்படுவது மட்டுமன்றி தமிழ் நாட்டில் இப்போது மேலெழுந்து வருகிற 'தமிழ், தமிழர்' என்ற கருத்தியலுடனும் இது இசைவாக இருக்கிறது. பொற்காலத்திற்குத் திரும்புவது பற்றிய எனது இன்னொரு விமர்சனத்தை நீங்கள் 'வீரர்கள் துயிலும் நிலம்' கவிதையிலும் காணமுடியும்.

தேசியவாதங்களின் வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பெரிய பாடம் ஒன்று உள்ளது. இன்றைக்கு ஒடுக்கப்படுபவர்களாக, படுகொலைகளையும், அவலத்தையும் அனுபவிக்கின்ற ஒரு தேசிய இனம் நாளைக்கு அவர்கள் ஆட்சிக்கு வருகிற போது மற்றைய தேசிய இனங்களை புரிந்துணர்வுடனும் ஜனநாயக ரீதியாகவும் நடாத்துவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை . யூதர்களையும் அவர்களுடைய 'தாயகமான' இஸ்ரேலைப் பாருங்கள் இந்த நூற்றாண்டில் மிகப் பெரிய இனப்படுகொலையை (8 மில்லியன் மக்கள்) சந்தித்தவர்கள் இப்போது பலஸ்தீன மக்களுக்கு என்ன செய்கிறார்கள். இதே கேள்வியைத்தான் புலிகளுக்கூடாக வெளிப்படுகிற ஒரு மேலாட்சி பெற்ற தமிழ்த் தேசியவாதத்தையும் முஸ்லிம் மக்கள் தொடர்பாக நாம் கேட்க வேண்டியிருக்கிறது அல்லவா?

சில மாதங்களுக்கு முன்பு குமார் பொன்னம்பலம் கனடா சென்றிருந்த போது அவரைக் கௌரவிக்கும் முகமாக கனடாவின் தமிழ்ச் சங்கம் ஒரு விருந்துபசாரத்தை ஒழுங்கு செய்திருந்தது. அதில் பலஸ்தீன இயக்க பிரதிநிதிகளுட்பட கனடிய அரசியல்வாதிகளும் கலந்து கொண்டிருந்தனர். இந்நிகழ்ச்சியை வழிநடத்திய தங்கவேலு எனும் மூத்த 'தமிழர்' ஒரு சந்தர்ப்பத்தில் உணர்ச்சிவசப்பட்டு யூதர்கள் இஸ்ரேல் அமைத்ததைப் போல நாமும் தமிழ் ஈழமும் அமைத்தே தீருவோம் என்று பலத்த கைதட்டலுக்கு மத்தியில் சொன்னார். அவருக்குப் பிற்பாடு பேசிய பலஸ்தீன விடுதலை இயக்க உறுப்பினர் மிகுந்த நாகரீகமாக இஸ்ரேலின் உருவாக்கம் லட்சக்கணக்கான பலஸ்தீனியரின் வெளியேற்றத்திலேயே நடந்தது என்றும் அதிலுள்ள பேரினவாதத்தையும் சுட்டிக்காட்ட நேர்ந்தது. இத்தகைய அபத்தங்கள் தமிழ் தேசியவாதத்தின் முகத்தில் அம்மைத் தழும்புகளாக படிந்து நிற்கின்றன.

இரண்டு தினங்களுக்கு முன்பு காலி நகரில் நீதிக்கும், நியாயத்திற்குமான நிறுவனம் (Foundation for Justice and Fairness) ஒழுங்கு செய்திருந்த ஒரு கூட்டத்தில் பேச முடிந்தது. முழுவதுமே சிங்கள மக்கள் நூற்றுக் கணக்கில் கலந்து கொண்ட கூட்டத்தில் 25 பேர் உரையாற்றிய பிற்பாடு ஒரு முதியவர் நீர் மல்கிய கண்களுடன் வந்து என்னுடன் உரையாடினார். யாழ்ப்பாணக் கச்சேரிக்கு முன்பாகவிருந்த லீலா பேக் ஹவுஸ் உரிமையாளர் அவர். 84இன் பிற்பாடு வெளியேறி விட்டார். எவ்வித தங்குதடங்கலுமில்லாத இயல்பான தமிழில், 'நாங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்த காலம்தான் எனக்கு சந்தோசமான காலம். இப்போ இங்கு எனக்கு என்ன வாழ்க்கை இருக்கிறது என்றே தெரியவில்லை. ஏதோ சாப்பிட்டு உயிர் பிழைத்துக் கொண்டிருக்கிறோம். எப்போதாவது திரும்பிப் போக முடியுமா?' என்றார்.

அவருடைய பொற்காலம் யாழ்ப்பாணத்தில் இருக்கிறது. அவரைப் போன்றவர்களையும் முஸ்லிம் மக்களையும் தனக்குள் இணைத்துக் கொள்ள முடியாத அரசியல் அறமற்றது. ஜெயபாலன் ஒரு முறை எழுதினார். எப்போது வடக்கு கிழக்கில் உள்ள முஸ்லிமும் சிங்களவர்களும் ஈழம்தான் எங்களது நாடு என்று சொல்கிறார்களோ அப்போதுதான் எமக்கு வெற்றி என்று, வாசித்திருப்பீர்கள்.

**பெண்ணியம் தொடர்பாக தமிழ் சூழலில் அதிக பிரக்ஞையுடன் செயலாற்றி வருபவர் நீங்கள்! ஆனால் உங்களுடைய கவிதைகளிலும் கூட ஆங்காங்கே ஆண் சிந்தனை வெளிப்படுவது குறித்து.....**

என்னுடைய ஆரம்ப காலக் கவிதைகளில் ஆண் நிலைப்பட்ட படிமங்களும் 'ஆண்மை' சார்ந்த மொழிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரயோகமும் இடம்பெற்றிருக்கின்றன என்பது உண்மை. எனினும் அதிலிருந்து நான் விடுபட்டு விட்டேன். 87க்குப் பிற்பாடு வெளியான கவிதைகளில் இந்த மாற்றத்தை நீங்கள் உணர முடியும். ஆரம்பத்திலிருந்த எனது வாழ்வு அனுபவங்களும் எனது சூழலும் ஆணாதிக்கம் மேலோங்கிய பரப்பிலேயே இடம்பெற்றது. மெல்ல மெல்ல 'ஆண்மை', 'பெண்மை' கருத்தாக்கங்களையும், கட்டமைப்புகளையும் நான் உதறிவிட்டேன். நளினமும், மென்மையும் பால் பொது இயல்புகள்தானே! எனது வாழ்விலும் சிந்தனையிலும் கவிதையிலும் பெண்ணியம் ஏற்படுத்தியுள்ள தாக்கமும் மாற்றமும் முக்கியமானது. பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுகின்ற 80களில் கவிதைகளில் ஏற்பட்ட குணாம்சமாற்றம் எந்தளவுக்கு முக்கியமோ அந்தளவிற்கு இதுவும் முக்கியமானது.

கவிதையில் நீங்கள் பின் விளைவுகளைப்பற்றி சிந்திக்காமல் தீவிரமாக இயங்குகின்றீர்கள் என்று சுந்தரராமசாமி குறிப்பிடுகின்றார். அவரது பார்வை பற்றி...

எனது கவிதை மாறியிருக்கிறது. எண்பதுகளிலே நிலவிய முறையிலும் வடிவிலும் இப்போதும் நாம் எழுதுவது சாத்தியமில்லை. அப்படி எழுதுவது படைப்பின் இயங்கியலையும் மறுப்பதாகும். எனது கவிதைகளில் ஏற்பட்டிருக்கும் இந்தப் பரிணாமத்தையும் பரிமாணத்தையும் சு.ரா. சரியாகவே இனங்கண்டு கொண்டுள்ளார். இது குறித்து எனக்கு மகிழ்வு.


உங்களுடைய நம்பிக்கைகள்தான் என்ன?

நான் சிறுவனாக இருந்த போது எழுத்தாளர்கள், கலைஞர்கள், சிந்தனையாளர்களை சந்திக்கிற போது அவர்களிடம் கையெழுத்து அல்லது சிறு குறிப்பு ஒன்று எழுதி வாங்குவதற்காக ஒரு அழகிய கையடக்கமான "ஓட்டோ கிராப்" புத்தகம் ஒன்றை அப்பா வாங்கித் தந்திருந்தார். அதனுடைய முதலாவது பக்கத்தை தன்னுடைய அழகிய கையெழுத்தில் முகப்பு வரிகளாக ஒரு சிறுகவிதை எழுதித் தந்திருந்தார்.

நாடு பெரிதை;
நடவாப் புது வழிகள்
தேடு; சலிக்காது செல்.

என்பதுதான் அச்சிறு கவிதையின் வரிகள். இப்போதும் எனது நம்பிக்கைகள் இவைதான்.

## ஒரு சோடி நரம்பு



பனிசொட்டும் மழைக்கால
துப்பாக்கியிரவில்
கதவைப் பூட்டி
சிறுநீர் கழிக்காமல்
வெளியே மூச்சு விடாமல்
எப்படியிருப்பேன்?

இன்னேரம் -
நாய்கள் கூடத் தெருவில்
மலங்கழித்து, மூத்திரம் பெய்து
சொறி நாய்களோடு சண்டை பிடித்து
நிம்மதியாய் உறங்கும்.

சந்திகளிலும் கடைகளிலும்
இறைச்சித் துண்டுக்காய்
மோந்து மோந்து நக்கித்திரியும்.

நான் -
மனித ஜீவியத்தில்
வெளியே மூச்சு விடாமல்
இருட்டில் கதவைப் பூட்டி
புழுத்துப் புழுத்து இருப்பதைவிட
நாயாய்ப் பிறந்திருக்கலாம்.

ஒரு சோடி நரம்புகளை வாயில் கௌவி
மண்டை ஓட்டு ஊனத்தைக் குடித்து
ருசித்திருக்கலாம்.

எப்படி? நான் -
மனிதனாய்ப் பிறந்து
மனித நேயத்தை மீறி...
உணர்வுகளைத் தாண்டிப் போவேன்
நாயாய்.

இன்னேரம் நாய்கள் கூட
தெரு நாய்களோடு சண்டை பிடித்து
மூச்சுவிட்டு, சிறுநீர் கழித்து
நிம்மதியாய் உறங்கும்.

இங்கு நான்! எப்படி?....

............. ............... .............



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# காமம் ஆற்றலாக, அதிகாரமாக

**ஆட்ரே லோர்ட் - தமிழில் : நிறப்பிரிகை**

ஆட்ரே லோர்ட் (1934 - 1992) - உணர்ச்சி வேகமும் சொற்செறிவுமிக்க கவிஞர். கருப்பர், பெண்ணியப் போராளி, கவிதைகளாகவும், உரைநடையாகவும் இவர் எழுதிய பதின்மூன்று தொகுப்புகள் வெளிவந்துள்ளன. இவரது From a land where other people live என்னும் நூலுக்கு தேசிய நூற்பரிசு வழங்கப்பட்டது. பாலியல், அரசியல், இனவியல் மற்றும் பொருளியல் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் "லெஸ்பியன்" மற்றும் "கே" உரிமைகளுக்காகவும் வாழ்நாளெல்லாம் போராடியவர். உலகெங்கிலும் சுற்றித்திரிந்து முழங்கியவர். நியூயோர்க் நகரிலுள்ள ஹன்டர் கல்லூரி உட்பட ஏராளமான சிறந்த கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பேராசிரியராகப் பணியாற்றியவர்.

சீனப் பெண்களின் காலை இறுக்கிய கட்டுகளைப் போல பெண்களின் சிந்தனையை இறுக்கும் அரசியல் / பாலியல் புனித விதிகளைத் தொடர்ந்து ஆய்வுக்குட்படுத்தி தூக்கி எறிந்து வந்த ஆட்ரே லோர்டின் முக்கிய கட்டுரை இது.

சமூகத்தால் மறுக்கப்பட்டும் பெண்களால் புறக்கணிக்கப்பட்டும் வந்துள்ள ஆற்றல் வளமாகிய - காமத்தை (EROTICA)-ப் பகுத்தாய்வு செய்கின்ற ஒரு பாலியல் பிரகடனம் இது. அவரது கவிதைகள் நமது எதிர்பார்ப்புகளைக் கவிழ்ப்பது போலவே இந்தக் கட்டுரை "காமம்" என்கிற சொல்லின் சாத்தியங்களையும் அர்த்தங்களையும் விரிவாக்குகிறது. காமம் என்பதின் பொருள்குறித்த தமது நம்பிக்கைகளையும் இது சிதறடிக்கிறது.

இக்கட்டுரை Marita Golden தொகுத்துள்ள Wild Women Don't Wears No Blues : Black Women writers on Love, Men and Sex என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

அதிகாரத்தில் பல வகைகள் உண்டு. பயன்படுத்தப் பட்டவை, அங்கீகரிக்கப்பட்டவை, அங்கீகரிக்கப்படாதவை - இப்படி பெண்மை சார்ந்த, உணர்வு சார்ந்த, ஆழமான தளத்தில் நம் ஒவ்வொருவருக்குள்ளும் நிறைந்துள்ள ஒரு ஆற்றல் காமம். நமது வெளிப்படுத்தப்படாத அல்லது அங்கீகரிக்கப்படாத உணர்வின் ஆற்றலில் அது வேரோடியிருக்கிறது. எந்த ஒரு ஒடுக்கு முறைக்கும் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்காக செய்கின்ற வேலைகளில் ஒன்று தான் ஒடுக்கி வைத்துள்ள பண்பாட்டில் மாற்றத்தை விளைவிக்கக்கூடிய வீரியமுள்ள ஆற்றல்களைச் சிதைத்து அழிப்பது. பெண்களைப் பொறுத்தமட்டில் இவ்வாறு நசுக்கப்படுகிற முக்கிய ஆற்றலாகக் காமம் விளங்குகிறது.

மேலைச் சமூகத்தில் மிகவும் கேவலப்படுத்தப் பட்டதாகவும் இழித்துரைக்கப்பட்டாததகவும், கொடூரமாக உருவகிக்கப்பட்டுள்ளதாகவுமுள்ள இந்த ஆற்றல் வளத்தை காமம் சந்தேகத்திற்குரிய ஒன்றாக நோக்குமாறு நமக்கு கற்பிக்கப் பட்டுள்ளது. ஒரு பக்கம் ஆண்மையைக் காட்டிலும் பெண்மை இரண்டாம் பட்சமானது என்பதைக் காட்டும் வகையில் மேலோட்டமான பாலுணர்வு என்பது பெண்களின் அடையாளமாக ஊக்குவிக்கப்படுகிறது. இன்னொரு பக்கம் காம உணர்வின் இருப்பிற்காகவே பெண்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். வெறுப்புக்கும் அய்யத்திற்கும் உரியவர்களாக ஆக்கப்படுகிறார்கள்.

இந்தக் கருத்தின் அடுத்த கட்டமாக நமது வாழ்விலும் பிரக்ஞையிலும் காம உணர்வை ஒடுக்குவதுதான் பெண்கள் உண்மையிலேயே வலிமை பெறுவதற்கான வழி என நாம் நம்ப வைக்கப்பட்டிருக்கின்றோம். ஆனால் இந்த வலிமை ஒரு ஆண நிலைசார்ந்த அதிகார மாதிரிக்குள் கட்டமைக்கப்படுகின்ற ஒன்று.

மிகவும் ஆழமானதும் தர்க்கத்திற்கும் அப்பாற்பட்டதுமான நமது இந்த (காம) ஆற்றலை, ஒரு பெண் என்கிற முறையில், அய்யப்பட்டு வந்துள்ளோம். இதுகுறித்து ஆணுலகு நம் வாழ்நாளெல்லாம் நம்மை எச்சரித்து வந்திருக்கிறது. நம்முடைய இந்த ஆழமான உணர்வை தமது சேவைக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என ஆணுலகு கருதி வந்திருக்கிறது. ஆனால் அதன் சாத்தியங்களை ஆய்வு செய்வதற்கு இந்த ஆழமே அச்சத்திற்குரிய ஒன்றாக அதற்கு இருந்து வந்துள்ளது. பழச்சாறை உறுஞ்சி வைத்துக் கொள்ளும் பச்சை ஈக்களை அடிமைப்படுத்தி வைத்திருக்குமாமே எறும்புகள், அது போலப் பெண்களாகிய நம்மை, தேவைப்படும் போது உளவியல் ரீதியாகக் கறந்து கொள்ளும் நோக்கில் கீழ்ப்படிந்த ஒரு நிலையில் சற்றுத் தூரத்தில் வைத்திருந்தார்கள்.

ஆனால் மேலோட்டமான உணர்வே போதுமென்ற நம்பிக்கைக்குப் பலியாகாத பெண்களுக்கும், காம உணர்வை வெளிக்காட்டிக் கொள்ளத் தயங்காத பெண்களுக்கும் புத்துணர்ச்சியையும் புதுத் தூண்டலையும் அள்ளித்தரும் ஊற்றாகக் காமம் விளங்குகிறது.

காமம் என்பதைத் தவறான அர்த்தத்திற்குள்ளாக்கி பெண்களுக்கு எதிரான ஆயுதமாக ஆண்கள் அதனைப் பாவிக்கிறார்கள். காமம் என்பது ஒரு குழப்பமான, அற்பமான, மனப்பிறழ்வுகளுக்குரிய, நெகிழ்ச்சியான உணர்வாகக் காட்டப்பட்டது. எனவே நாமும் காமத்தை ஆற்றலுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அறிவுக்குமான மூலவளமாகக் கருதாமல் அதனை அதன் நேரெதிரான போர்னோ கிராபியுடன் போட்டுக் குழப்பிக் கொண்டோம். ஆனால் உண்மையில் போர்னோ என்பது காமத்தின் ஆற்றலை நேரடியாக மறுக்கக்கூடிய ஒன்று. ஏனெனில் உண்மையான உணர்வுகளின் ஒடுக்கத்தையே போர்னோ குறிக்கிறது. உணர்வுகளுக்கு (Feeings) புறம்பான மேலோட்டமான புலனுணர்வுகளுக்கே (Sensations) போர்னோ அழுத்தம் கொடுக்கிறது.

> **மற்றவர்களோடு இணைந்து நமது காமத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நம்முள்ளிருந்தே அணுகுவதிலிருந்து விலகி வெளி ஆண்களின் வழியாக அணுகுவதே மரபு வழிப்பார்வை. இதன் மூலம் நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களை நமது திருப்திக்கான பொருளாகப் பார்ப்பதற்கு மட்டுமே கற்றுக் கொடுக்கப் பட்டிருக்கிறோம். திருப்தியுறுதலின் இன்பத்தை நாம் மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டதில்லை. நமது ஒற்றுமைகள் மற்றும் வித்தியாசங்களோடு நாம் இணைவதில்லை.**

நமது வலிமையான உணர்வுகளின் கட்டற்ற நிலையோடு ஒப்பிடும் போது நமது சுயம் (Self) குறித்த உணர்தல் தொடங்குவதன் அளவையே காமம் என்கிறோம். ஒரு முறை அனுபவித்துணர்ந்த பின்பு எந்த ஒரு அகநிலையான திருப்தியுணர்வுக்கு ஆசைப்படுகின்றோமோ அதுதான் காமம். இந்த ஆழமான உள்ளுணர்வை முழுமையாக அனுபவித்து அதன் ஆற்றலைப் புரிந்து கொண்ட கையோடு பெருமையிலும் சுயமரியாதையிலும் நமக்குக் குறைவான எதையும் நாம் ஏற்க முடியாதவர்களாகி விடுகிறோம்.

நம்முள்ளிருந்து, நமது வாழ்வுகளிலிருந்து, நமது பணிகளிலிருந்து இவை ஒவ்வொன்றின் உச்சத்தையும் கோருவதென்பது எளிதான காரியமல்ல. நமது சமூகம் ஊக்குவித்து முன்னிலைப்படுத்துவது ஒரு வகையான சராசரித் தன்மையைத்தான். ஆனால் இந்த சராசரித்தனத்தைத் தாண்டிச் செல்ல வேண்டும். உன்னதத்தையும் ஒவ்வொன்றிலும் அதன் உச்சத்தையும் (Excellence) நோக்கி ஊக்குவிக்க வேண்டும். உணர்வுகள் பற்றிய அச்சத்திற்கு வழிவிடுவதும் சராசரியாகச் செயல்படுவதும் விருப்பற்றவர்களுக்கு மட்டுமே சாத்தியமாகும் சுகபோகம். தமது விதியைத் தாமே நிர்ணயித்துக் கொள்ள ஆசைப்படாதவர்களையே "விருப்பற்றவர்கள்" என்கிறோம்.

இந்த உன்னதத்தை நோக்கிய உந்துதலை நாம் காமத்திலிருந்து கற்றுக் கொள்கிறோம். தனக்குள்ளிருந்தும் பிறரிடமிருந்தும் சாத்தியமற்றதைக் கோருகிற நடவடிக்கையாக இதைத் தவறாக புரிந்து கொள்ள வேண்டாம். அப்படிக் கோரினால் அது யாரையும் முடக்கிவிடக் கூடியதுதான். காமம் என்பது நாம் என்ன செய்கிறோம் என்பதை மட்டும் பொறுத்த பிரச்சினை அல்ல. மாறாக செயல்பாட்டில் நாம் எந்த அளவிற்கு ஆழமாகவும் முழுமையாகவும் உணர்கிறோம் என்பதைப் பொறுத்த பிரச்சினை அது. நிறைவையும், முழுமையையும், திருப்தியையும் அடைகிற அந்த உணர்வை நாம் எந்த அளவிற்கு உணரச் சாத்தியம் என அறிந்து கொண்டவுடன் நமது வாழ்வியற் செயற்பாடுகளில் எது இந்த முழுமைக்கு நெருக்கமாக இருக்கிறது என்பதைக் கவனிக்கலாம்.

நமது வாழ்வையும் நமது குழந்தைகளின் வாழ்வையும் அதிக சாத்தியங்களும் வளங்கலுமுள்ளதாக ஆக்குவதே நமது செயற்பாடுகள் ஒவ்வொன்றின் குறிக்கோளுமாகும். நமது எல்லா செயற்பாடுகளிலும் காமத்தைக் கொண்டாடும் போது எனது பணி (work) என்பது என்மீது திணிக்கப்பட்ட ஒன்றாக இல்லாமல் எனது விருப்பபூர்வமான முடிவாகிறது. நான் விரும்பிய செயற்களமாகிறது. நன்றியோடு அதற்குள் நுழைந்து ஆற்றலோடு அதிலிருந்து எழுதுகின்றேன்.

இவ்வாறு ஆற்றலுள்ள அதிகாரம் பெற்ற பெண்கள் ஆபத்தானவர்கள் என்பது உண்மைதான். எனவேதான் காமம் குறித்த நமது விருப்பை உடலுறவோட நிறுத்திக்கொள்ள வேண்டுமெனவும் நமது வாழ்வின் பிற தளங்களிலிருந்து அதைப் பிரித்தொதுக்க வேண்டுமெனவும் நாம் கற்பிக்கப்பட்டிருக்கிறோம். நமது பணிகளுக்குரிய காம வேர்கள் பற்றிய நமது கரிசனமின்மையும் நமது பணிகளின் முழுமையை எட்டுவதில் ஆர்வமின்மையும்தான் நமது பணிகள் வெறுக்கத்தக்கதாக மாறுவதன் காரணம். நமது பணிகளை நாம் எப்போதாவது விரும்பிச் செய்திருக்கிறோமா என யோசித்துப் பாருங்கள்.

மனிதனுக்குத் தேவையா என்பதை விடுத்து வெறும் லாபத்தின் அடிப்படையில் எது நல்லது என்பதை வரையறுக்கிற ஒரு அமைப்பின் பயங்கரத் தன்மை எதில் அடங்கியுள்ளதெனில் அது நமது பணியின் காம முக்கியத்துவத்தை, காம மதிப்பை, காமத்தின் வழியிலான ஆற்றலை, வாழ்வின் ஆர்வத்தை, வாழ்வின் திருப்தியை எட்டுவதை நமது பணியிலிருந்து நீக்கி ஒதுக்குவதுதான். மனிதத் தேவை என்பதை வரையறுக்கும் போது அதன் உள மற்றும் உணர்வு அடிப்படையிலான தேவைகளை ஒதுக்கி வரையறுப்பவர்களும்கூட காமத்தின் வழியிலான ஆற்றலை மறுப்பவர்கள்தான். இத்தகைய கட்டமைப்பு நமது பணி என்பதை வெறும் தேவைகளின் போலியாகச் சுருக்குகிறது. நமக்கும், நமக்கு நெருக்கமானவர்களுக்கும் உணவையும் ஒழியுமிடத்தையும் சம்பாதிப்பதற்கான கடமையாக எளிமைப்படுத்துகிறது. இது ஒரு ஓவியரை அவரது கண்களைப் பிடுங்கிவிட்டு இன்னும் நன்றாக வரை என ஆணையிட்டு வேடிக்கை பார்ப்பதற்கு ஒப்பல்லவா? அது சாத்தியமில்லை என்பது இருக்கட்டும், ரொம்பவும் மோசமான கொடுமையல்லவா?

நமது உலகம் இப்போதுள்ளவாறில்லாமல் வித்தியாசமாக இருக்க வேண்டிய வழிமுறைகளைப் பெண்கள் என்கிற வகையில் நாம் ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். நமது வாழ்வு மற்றும் பணிகளில் அடங்கியுள்ள அனைத்து அம்சங்களின் அடிப்படையான பண்பையே மறு மதிப்பீடு செய்ய வேண்டியதன் அவசியத்தைப்பற்றி நான் இப்போது பேசிக்கொண்டிருக்கின்றேன்.

காமம் (Eritic) என்கிற இச்சொல் Eros என்கிற கிரேக்கச் சொல்லினடியாக உருவாகிறது. Eros என்பது அன்பை அதன் எல்லா அம்சங்களிலும் உருவப்படுத்துகிறது. ஒழுங்கமைப்பில் பிறந்து படைப்பாற்றலையும் ஒத்திசைவையும் உருவப்படுத்துகிறது. எனவே நான் காமத்தைப் பற்றிப் பேசும் போது பெண்களின் வாழ்வு ஆற்றலை உறுதி செய்வது பற்றிப் பேசுகிறேன். நமது மொழி, வரலாறு, கலை, காதல், பணி, வாழ்வு எல்லாவற்றிலும் காமத்தின் அறிவு மற்றும் பயன்பாடு குறித்த மீள் உரிமையை நாம் கோரி நிற்கிறோம்.

பாலியலின் இரு நேரெதிரான பயன்பாடுகளாகிய போர்னோ (காம இச்சையை வணிகமாக்குதல்) வையும் காமத்தையும் சமமாகக் காட்டுவதற்கு அடிக்கடி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய முயற்சிகளின் விளைவாக உளவியல் மற்றும் உணர்வியல் அம்சங்களை அரசியலிலிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரித்து ஒதுக்குவதும் அவற்றை ஒன்றுக்கொன்று முரணானவைகளாகக் காட்டுவதும் வாடிக்கையாகிவிட்டது. அதே போன்று உளவியல் மற்றும் உணர்வியல் சார்ந்த ஆற்றலையும் (Spiritual என்கிற சொல்லை Physhic and emotional என்கிற பொருளில் ஆட்ரே லோர்ட் பயன்படுத்துகிறார். Physhic and emotional என்ற சொற்களை அடைப்புக்குறிக்குள் பயன்படுத்துகிறார். Spiritual என்பதை ஆன்மீகம் என மொழி ஆக்கினால் நமது சூழலில் வேறு பொருள் கொள்ள வாய்ப்புள்ளதால் உளவியல் மற்றும் உணர்வியல் சார்ந்த எனப்பயன்படுத்தப்படுகிறது. -நி.பி) காமத்தையும் பிரித்து ஒன்றுக்கொன்று முரணாக்க நாம் முயற்சித்திருக்கின்றோம். இதன் மூலம் உளவியல் மற்றும் உணர்வியல் சார்ந்த ஆற்றலைத் தடையாக்கி அதனை தெய்வீகத்தோடு இணைத்து (ஆன்ம ஆற்றல் என்றாக்கி) இன்மையை நோக்கிய நாட்டமாகச் சுருக்கி இருக்கின்றோம். ஆனால் எதுவும் உண்மைக்கு அப்பாற்பட்டதல்ல. ஏனெனில் தெய்வீகம் என்பது அச்சத்தின் உச்சம், மிகவும் அழிவுக்குரிய செயலின்மை. முழுமையான துறவு என்பதே தெய்வீகத்தில் முதன்மைப்படுத்தப்படுகிறது. இந்தத் துறவு என்பது சுய கட்டுப்பாட்டின் வெளிப்பாடல்ல, மாறாக அது சுய மறுப்பின் வெளிப்பாடு.

உளம் மற்றும் உணர்வு சார்ந்தவைக்கும் அரசியலுக்குமிடையிலான பிளவும் கூடத் தவறானதுதான். காமம் குறித்த அறிவு பற்றிய நமது அரைகுறை ஆர்வத்தின் விளைவுதான் இது. ஏனெனில் உடல், உள்ளம் மற்றும் உணர்வு சார்ந்த வற்றை அரசியலோடு இணைக்கும் பாலம் காமத்தால் - புலனுணர்வால் - நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிற வலிமையான, ஆழமான, வளமான உடல்/ உள்ளம்/ உணர்வு சார்ந்த வெளிப்பாடுகளால் கட்டப்பட்டுள்ளது. அது நம் ஒவ்வொருவருக் குள்ளும் இருப்பதும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளுவதுமான காதலின் உச்ச வெளிப்பாடு - அதன் ஆழமான பொருளில்.

நாம் ஆர்வத்தோடு சொல்கிற "அது எனக்குச் சரின்னு படுது" என்கிற சொற்றொடர் காமத்தின் வலிமையை ஒரு உண்மையான அறிவு என்ற வகையில் அங்கீகரிக்கிறது. ஏனெனில் இது எதை அர்த்தப்படுத்துகிறதோ, உணர்த்துகிறதோ அதுதான் எந்தப் புரிதலுக்கும் முதற்படியாக அமைகிறது. ஆழமான அறிவின் பிறப்பிற்கு உதவும் மருத்துவிச்சியாக இந்த புரிதல் அமைகிறது. காமம்தான் நமது ஆழமான அறிவுக்குப் பாதுகாவலி, செவிலித்தாய் எல்லாம்.

என்னைப் பொறுத்தமட்டில் காமம் பல வழிகளில் செயற்படுகிறது. எந்த ஒரு ஆர்வத்தையும் மற்றவருடன் ஆழமாகப் பகிர்ந்து கொள்வதால் பெறுகிற ஆற்றல் இவற்றில் முதன்மையானது. இன்பத்தில் பகிர்வு - அது உடல் சார்ந்ததோ, உளம் சார்ந்ததோ, அறிவு சார்ந்ததோ - பகிர்ந்து கொள்பவர்களுக்கிடையே பாலமாக அமைகிறது. அவர்களுக்கிடையில் பகிர்ந்து கொள்ளப்படாத இதர அம்சங்களின் புரிதலுக்கு அடிப்படையாக அமைகிறது, அவர்களுக்கிடையேயான வேறுபாடுகளின் அடிப்படையில் உருவான அச்சத்தைக் குறைக்கிறது.

இன்பத்தை, மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கான எனது தகுதியையும், திறமையையும் அடிக்கோடிட்டுக்குக் காட்டுவதென்பது காமத்தின் அடுத்த முக்கியமான பணி. ஒலிக்கும், இசைக்கும் என் உடல் நெளிந்து திறந்து கொள்வது போல, இசையின் ஆழமான லயத்தில் நான் இறங்குவது போல நான் உணர்வு கொள்கிற ஒவ்வொரு தாளமும் காமவயப்பட்டு திருப்தியுறும் அனுபவத்தை நோக்கித் திறந்து கொள்கிறது. நடனமாடுவது, கவிதை எழுதுவது, ஒரு புத்தக அலுமாரியைக் கோர்ப்பது, ஒரு கருத்தை ஆராய்வது... என எல்லாவற்றிக்கும் இது பொருந்தும்.

நான் பகிர்ந்த கொண்ட சுயம் நான் எவ்வளவு அனுபவிக்க முடியும் எனத் தெரிந்துள்ளேனோ அந்த இன்பத்தை அளக்கும் கருவியாகிறது. எனது உணர்வுத் திறன் பற்றிய நினைவூட்டியாக அது அமைகிறது. எனது இன்பத்திறன் குறித்த ஆழமான மாற்றிக்கொள்ள முடியாத புரிதலை அது ஏற்படுத்துகிறது. எனது மொத்த வாழ்க்கையையும் நோக்கி இந்தப் புரிதல் ஒரு கோரிக்கையை வைக்கிறது. இந்தப் புரிதலுக்குள் அதனை வாழ்ந்து தீர்க்க வேண்டும் என்பதுதான் அக்கோரிக்கை. திருமணம், கடவுள், மறுவாழ்க்கை என்பதற்கெல்லாம் அப்பாற்பட்டு அது நடைபெற வேண்டும்.

காமம் பற்றிய அச்சத்தின் காரணங்களில் இது ஒன்று. படுக்கை அறை மட்டுமே இதனை அங்கீகரிக்கும் நிலை ஏற்பட்டதற்கும் காரணம் இதுதான். நமது வாழ்வின் அனைத்து அம்சங்கள் பற்றியும் நாம் ஆழமாக உணரத் தலைப்பட்டவுடன் நம்மிடமிருந்தும் நம்முடைய வாழ்க்கையின் தேடல்களிலிருந்தும் நாம் ஒன்றைக் கோருகின்றோம். நாம் எத்தகைய இன்பத்திற்குச் சாத்தியமானவர்களாக இருக்கிறோமோ அதற்குத்தக அந்தத் தேடல்களும் வாழ்க்கைகளும் அமைய வேண்டும் என்பதே அக்கோரிக்கை. காம அறிவு நம்மை அதிகாரமுடையவர்களாக ஆக்குகிறது. நமது இருப்பின் எல்லா அம்சங்களையும் ஆய்வு செய்யக்கூடிய உருப்பெருக்கி கண்ணாடியாக அது பயன்படுகிறது. அந்த அம்சங்களை நமது வாழ்வுக்குள் அவை பெறும் அர்த்தங்களின் அடிப்படையில் நேர்மையாக மதிப்பீடு செய்வதற்கு நம்மை அது உந்துகிறது. நமக்கு இது ஒரு பெரும் பொறுப்பாக அமைந்து விடுகிறது. நம் ஒவ்வொருவருக் குள்ளிருந்தும் முன்னிலைப் படுத்தப்படும் இப் பொறுப்பு எந்தப் பிரச்சினையு மில்லாத அற்ப சுகத்திலிருந்தும் இழிந்த பாதுகாப்பிலிருந்தும் நம்மை மீட்கிறது.



இரண்டாம் உலகப்போரின் போது இறுக மூடப்பட்ட பிளாஸ்டிக் பைகளில் விற்கும் செயற்கை வெண்ணையை நாம் வாங்கி வருவோம். வெள்ளை நிறத்தில் அது இருக்கும். அத்தோடு மஞ்சள் வண்ணம் ஏற்படுத்துவதற்கான ஒரு பசை துணுக்கை வைத்திருப்பார்கள். மஞ்சள் வைரக் கல்லைப் போல அது மின்னும். செயற்கை வெண்ணையைக் கொஞ்ச நேரம் அப்படியே வைத்திருந்தால் மென்மையாகிவிடும். பின்னர் வெளியிலிருந்து அந்த மஞ்சள் பசையைக் கொஞ்சம் அழுத்தினீர்களானால் அது பைக்குள்ளேயே உடையும். அதன் அழுத்தமான மஞ்சள் நிறம் அந்த வெறுத்த வெண்ணெய்க்குள் பரவத்தொடங்கும். பின்பு அந்தப் பிளாஸ்டிக் பையை முன்னும் பின்னும் மேலும் கீழும் இலேசாகப் பிசைந்து கொண்டே இருந்தோமானால் பையில் இருக்கும் ஒரு பவுண்டு வெண்ணையும் மஞ்சளாகிவிடும்.

பிளாஸ்டிக் பையில் மஞ்சள் வண்ணத்துண்டு வைக்கப்பட்டிருப்பது போல எனக்குள் காமம் வைக்கப்பட்டுள்ளது என நான் கருதுகிறேன். அழுத்தி வைக்கப்பட்டுள்ள அந்தச் சிறு துணுக்கிலிருந்து அது வெளியே வந்தவுடன் அது எனக்குள் பாய்ந்து என் வாழ்வை வண்ணமயமாக்குகிறது. எனது எல்லா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அனுபவங்களையும் உயர்த்தி, நுண்ணியமாக்கி வலிமையூட்டும் ஆற்றலை அது வாரி வழங்குகிறது.

கட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்ட நமது எதிர்பார்ப்புக்களிலிருந்து எழும் உந்துதல்கள் நம்மைச் செயலுகுள் தள்ளுகின்றன. நமது தேவைகளுக்கும், வேட்கைகளுக்கும், அறிதல்களுக்கும் தக நமது வாழ்வை உயர்த்திக்கொள்ள அச்செயல்கள் உதவுகின்றன. ஆனால் நமது ஆழமான ஆசைகள் ஆபத்தானவை என நமக்குள் ஊட்டப்பட்டுள்ள அச்சமோ நம்மைப் பணிவுள்ளவர்களாக, விசுவாசமானவர்களாக, அடங்கிப் போகிறவர்களாக வைத்திருக்கிறது. ஒரு பெண் என்கிற அடிப்படையில் நம்மீது மேற்கொள்ளப்படுகின்ற ஒடுக்குமுறையின் பல்வேறு அம்சங்களையும் ஏற்று அடங்கிப் போகும் நிலைக்கு நம்மை இட்டுச் செல்கிறது.

நாம் நமக்கு வெளியே வாழ்கின்ற போது - அதாவது நமது தேவைகள், உள் அறிதல்கள், நம்பிக்கைக்குள்ளிருந்து நம்மை வழி நடத்தும் காம வழிகாட்டிகள் ஆகியவற்றை ஒதுக்கிவிட்டு புற ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்கிற போது நமது வாழ்வு நமக்கு அந்நியமான புற வடிவங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. மானுடத் தேவைகளுக்கு அல்லாமல் இந்த அமைப்பின் தேவைகளுக்குத் தகுந்த மாதிரி நாம் தகவமைக்கப்படுகிறோம். மானுடத் தேவைகளே புறக்கணிக்கப் படும் போது தமது தனிமனிதத் தேவைகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் நமக்குள்ளிருக்கும் காமத்தின் ஆற்றலோடு இணைந்து நமக்குள்ளிருந்து வெளிப்பேந்து நாம் வாழத் தொடங்கும் போதும் இந்தக் (காம) ஆற்றல் நம்மைச் சுற்றியுள்ள உலகின் மீதான நமது செயற்பாடுகளை வழிநடத்தி ஒளியூட்டும் போதும் நமக்கு நாம் பொறுப்பானவர்களாகத் தொடங்குகிறோம். பொறுப்பானவர்களாக ஆவது என்பதை அதன் ஆழமான பொருளில் சொல்கிறேன். ஏனெனில் நாம் நமது ஆழமான உணர்வுகளைப் புரிந்து ஏற்கத் தொடங்கும் போது சுயமறுப்பிலும் துயரங்களிலும் திருப்தியுறும் மனநிலையையும் இந்தச் சமூகத்துக்குள் நமக்கு வழங்கப்பட்டுள்ள ஒரே மாற்றாக விளங்கும் உணர்ச்சியற்ற மரத்துப்போன மனநிலையையும் நாம் தூக்கி எறிய வேண்டியவர்களாகி விடுகிறோம். ஒடுக்கு முறைக்கு எதிரான செயற்பாடுகள் என்பது நமது சுயத்தோடு பின்னிப்பிணைந்திருக்கிறது. உள்ளிருந்து ஆற்றலையும் உத்வேத்தையும் பெறுகிறது.

காமத்தோடு இணைந்து நிற்பதன் வழியாக அதிகாரமற்ற, ஆற்றலற்ற பலவீனமான நிலையை ஏற்றுக் கொள்ளும் மனநிலை மீதான விருப்பை நான் விடத்தொடங்கினேன். என்மீது திணிக்கப்பட்ட எனக்குரியதல்லாத பண்புகளாகிய விரக்தி, தோற்றுப் போதல், சுயமறுப்பு, சோர்வு சுய அடையாள அழிப்பு ஆகியவற்றின் மீதான விருப்புகள் குறையத் தொடங்கின.

உலகில் சில ஏற்றத்தாழ்வுகளை ஏற்றுக்கொண்டாக வேண்டுமென்றே வைத்துக் கொள்வோம். சுவருக்கு வண்ணம் தீட்டுவதற்கும் கவிதை எழுதுவதற்குமிடையில் வேறுபாடு இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இந்த வேறுபாடுகள் வெறும் அளவு அடிப்படையிலானவைதான். என்னைப் பொறுத்தமட்டில் ஒரு நல்ல கவிதை எழுதுவதற்கு நான் விரும்பும் ஒரு பெண்ணின் உடலை நோக்கி சூரிய ஒளிக்குள் நகர்த்துவதற்கும் எந்த வேறுபாடும் இல்லை.

காமம் குறித்த இறுதிக் கருத்துக்கு இது என்னை இட்டுச் செல்கிறது. ஒருவர் மற்றவரது உணர்வின் ஆற்றலைப் பகிர்ந்து கொள்வதென்பது மற்றவரது உணர்வுகளைப் பயன்படுத்திக் கொள்வதிலிருந்து வேறுபட்டது. இந்த நோக்கிலிருந்து பார்த்தோமானால் காமம் சார்ந்ததோ இல்லை. வேறுவகையான அனுபவங்களோ எதுவாயினும் நம்மோடு அந்த அனுபவங்களில் பங்கு பெறுபவர்களின் உணர்வுகளை நாம் இதுவரை பயன்படுத்திக் கொண்டுதான் வந்திருக்கிறோமொழிய பகிர்ந்து கொண்டதில்லை என்பது விளங்கும். பயன்படுத்தப் பட்டவர்களின் சம்மதமில்லாமல் பயன்படுத்தப்படுவதென்பது அவர்களைத் தவறாகப் பயன்படுத்துவதுதான்.

காம உணர்வுகளைப் பயன்படுத்துவதற்கு முதற்படியாக அதனை நாம் அங்கீகரிக்க வேண்டும். ஆழ்ந்த உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வது என்பது மனிதனின் அடிப்படையான தேவை. ஆனால் இந்தத் தேவை என்பது நமது பாரம்பரியத்தால் தடுக்கப்பட்டிருந்த காம உணர்வுகளின் இணைவில்தான் பூர்த்தியாகிறது. ஆனால் இந்த இணைவுகள் மதம், நோய், கும்பல், வன்முறை என வேறு ஏதோ பெயரிடப்பட்டு கண்டு கொள்ளப்படாமல் புறக்கணிக்கப்படுகின்றன. இவ்வாறு இந்தத் தேவைகளையும் செயற்பாடுகளையும் தவறாகப் பெயரிட்டு அழைப்பதென்பது உணர்வுகளைத் தவறாகப்பயன்படுத்துகின்ற 'போர்னோ கிராபி' 'ஆபாசம்' இவற்றுக்கு இட்டுச் செல்கிறது.

நமது ஆற்றல்/ அதிகாரம் ஆகியவற்றை உருவாக்குவது மற்றும் தக்கவைப்பது என்பதில் காமத்தின் முக்கியத்துவத்தை மறுப்பதுதான் மரபு வழிப்பார்வை. அதாவது மற்றவர்களோடு இணைந்து நமது காமத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நம்முள்ளிருந்தே அணுகுவதிலிருந்து விலகி வெளி ஆண்களின் வழியாக அணுகுவதே மரபு வழிப்பார்வை. இதன் மூலம் நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களை நமது திருப்திக்கான பொருளாகப் பார்ப்பதற்கு மட்டுமே கற்றுக் கொடுக்கப் பட்டிருக்கிறோம். திருப்தியுறுதலின் இன்பத்தை நாம் மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டதில்லை. நமது ஒற்றுமைகள் மற்றும் வித்தியாசங்களோடு நாம் இணைவதில்லை. எந்த ஒரு கனத்திலும் நாம் என்ன உணர்கிறோம் என்பது பற்றிய பிரக்ஞையை மறப்பது - அது எவ்வளவு சுகமாகத் தோன்றிய போதிலும் - அனுபவத்தின் பெரும் பகுதியை மறுப்பதாகும். நம்மை நாமே ஆபாசப்படுத்திக் கொள்வதற்கு போர்னோ கிராபியாகச் சுருக்கிக் கொள்வதற்கு, அபத்தமாக்கிக் கொள்வதற்கு இது சமம்.

ஆனால் முற்றிலும் நமது ஆணாதிக்கப் பாரம்பரியத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய பெண்களுக்குக் காமஆற்றலைப் பகிர்ந்து கொள்வது அவ்வளவு எளிதல்ல. இத்தகைய வாழ்க்கை முறைக்கும் உணர்தல் முறைக்கும் நான் எனது பிரக்ஞையைத் தகவமைத்துக் கொள்ள முயற்சித்த போது இத்தகைய பகிரும் பண்பு வற்றிப் போவதை நான் புரிந்து கொண்டேன்.

காமத்தின் படைப்புத் திறனைப் புறக்கணிக்காமலும் சிதைக்காமலும் அதன் அர்த்தமான மின் ஆற்றலைப் பகிர்ந்து கொண்டு உண்மையிலேயே ஒரு பெண்ணாக அடையாளம் காணும் பெண்களை இத்தகைய ஆபத்தை எதிர்கொள்ளும் தைரியமிக்க பெண்களை இப்போது அதிகமாகக் காணமுடிகிறது. நமது வாழ்வில் காமத்தின் ஆற்றலை அங்கீகரித்து ஏற்பதென்பது இந்த உலகில் ஒரு உண்மையான மாற்றத்தை நோக்கி இயங்கும் ஆற்றலை நமக்கு அளிக்கும். இல்லாவிட்டால் இதே போன்ற சுவையற்ற அறுவையான நாடகத்திற்குள் வெறுமனே பாத்திரங்களை மாற்றிக் கொள்வதோடு நிற்க நேரிடும்.

வற்றாத படைப்பு ஆற்றலை அள்ளித்தருகிற ஆற்றல் வளத்தை நாம் அடைவது என்பது மட்டுமன்றி இந்தத் தந்தை வழியிலான, இனவெறி நிறைந்த, காமத்தை மறுக்கிற சமூகத்தின் முன் நம்மைச் சுய உறுதி செய்து கொள்வதற்கும் (உண்மையான) பெண்மைக்குரியவற்றைச் செய்வதற்குமான வழி இதுவே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





22 வயது;
கவிதை என்று நினைத்து எழுதாதவன்.
ஆனால் தனது மன உணர்வுகளை
எழுத்தில் வடித்து வைத்தவன்.

"மரணம்" உள்ளுணர்வை அரித்து தின்டு
தன்னை நெருங்கி
கொண்டிருப்பதைக் கண்டவன் -
சாக்கீர் ஹூசைன்; அதற்கான
சாட்சியாக, அவனது வாக்கு மூலமாக
அவனது எழுத்தில்....

அக்கரைப்பற்றை பிறப்பிடமாகக் கொண்டவன்
சம்மாந்துறை தொழில்நுட்ப கல்லூரி மாணவன்.
தனது நண்பர்களுடன்
கடலில் நீராடிக் கொண்டிருக்கும் போது
காலதேவன் - இவனை கரை சேர்த்தான்;
உயிரை எடுத்துக் கொண்டு -
வெறும் உடலாக......

99 மார்ச் 01இல் இது நடந்தது -
மிகைப்படுத்தி சொல்வதற்கு ஒன்றுமில்லை
அவனது கவிதைகள்
உங்கள் நெஞ்சில் நீர் வார்க்கும்...

- அம்ரிதா -

# மரணம்

*நரம்புகள் ஒவ்வொன்றும் நாணுகின்ற*
*காலத்தில் தேய்ந்த லாடத்துடன்*
*பொதி சுமக்கச் சொல்கிறான் என்னை*
*ஒரு எஜமான்*
*எட்டி வைக்கும் ஒவ்வொரு எட்டிற்கும்*
*சதைகள் குலுங்கும் சத்தம்*
*வெட்டி வீசிய சாட்டையில் பறந்தது*
*முதுமை பாய்ந்த கால்கள்.*
*கேட்கும் சத்தங்கள் ஒவ்வொன்றும் சாவுமணியென*
*எதிரொலிக்கிறது அறிந்தும்;*
*எஜமானே*
*வரைகிறான் பல நவீனஓவியங்கள்*
*என்முதுக்ல்.*
*பாயும் பாய்ச்சல் ஒவ்வொன்றிற்கும்*
*பாதைகள் முடிகின்றன.*
*அநியாயமாக என் உயிரை*
*பசிக்கு உணவும், அழகுக்கு வண்டியும்*
*தரும் எஜமானுக்கு*
*என்னுயிருக்குப் பாதகாப்புத்தர தோணவில்லையா?*
*இனியும் வரும் உயிர்களுக்கு*
*வேண்டாம் இந்தப் பரிதாபம் அதற்காய்*
*இழக்கிறேன் என் உயிரை*
*எனவேதான் பாய்ந்து செல்கிறேன்*
*என் உயிரின் முடிவிற்காக......*

# சோகராகம்

*வறுமையே என் வாழ்க்கையின் வட்டாரம்*
*கவலையே என் கனவின் முடிவு*
*கண்ணீர் சிந்தும் மனக்கண்கள்*
*என் வாழ்க்கையின் நிலை மாறாதா?*
*ஒளி வராதா?*
*இருள் மறையாதா?*
*துன்ப நண்பனே போமாட்டாயா?*
*இன்ப எதிரியே வரமாட்டாயா?*

*பிறர் சிரிக்க வைத்தது அறிவு*
*உடைந்தது யாரின் மனம்.*
*உருகியது யாரின் மனம்*
*உள்ளம் உருகி கண்கள் கலங்கி*
*துன்பம் தழுவி*
*இன்பம் விலகி*
*கலங்கியவன் நான்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நினைவின் ஆறுதல் நெருப்பு



விரல்களை உருட்டிய நீர்த்துளி ஒன்றில்
இறுகப் பெத்திய நரம்புகளையே
ரவை உருட்டி விட்டாய்

கொடியில் ஆடிய சிலையின் ஊசியாய்
இன்னும் மினுக்குகிறாய்
அந்த மேசையின் நிழலை ஒழித்தாய்
நகத்துள் இடுக்கிய ஊத்தையின் வடிவாய்
வெட்டியும் நினைவாகிறாய்
புல்லில் படுத்து சுணைக்கும் சுணையாய்
இன்னும் குளிக்க வைக்கிறாய்

எங்கேயோ உடலில் முள்பியக்கிறது
இடையில் முறிந்த கனவில்
கெண்டமுடியவில்லை
இரவுக்குப் பொறுக்காத
நிலவையும் தேய்ந்த விட்டது.
சூரியனை அடித்து விரட்டு
இன்னும் கெண்டிப்பார்க்கனும்

கதிரைகள் கறல் பிடிக்கிறது
கறையானின் வாசி
நினைவின் ஆறுதல் நெருப்பு
பல்லிளித்து பூக்கொத்தியது
இடையில் அழியுமோ
ஈர்க்கைப் புனைந்து
ஓலை தைக்க விரல் நீளும் சேர்க்கை.

கட்டிய கனவின் கண்ணாடியாய்
காய்ந்த புல்லும் கசந்து பீய்கிறது
உச்சி வெயில் இன்னமும் உரசி
வெரசி வருகிறது முதுகு வலிக்க

திண்ணையில் ஒதுங்கிய உடம்பெங்கும்
ஊர்ந்த கட்டெறும்பைப் பிடிக்க
நீளும் மனசு ஏனோ சௌத்துக்கிடக்கு

அந்த நட்சத்திரத்தை கூட்டிவா
ஒரேயொரு தடவை மல்லாக்கப்படுத்து
மரணித்துப் போகிறேன்.

ஆகஸ்ட் 1997.

பதப்படாத மரமொன்று அது
என்றும் கதையாய்த்தான் நிற்கிறது.
நாட்கள் கரைகிறது
உணர்வுகள் அடங்கவில்லை
இன்னும் காலம் காத்திருக்காது
ஓடும் ரயிலின் வேகமும் அல்ல
நழுவும் நாக்குழுப் புழுமாதிரியா?
அப்படியுமல்ல, இப்படியுமல்ல
உணர்வுகள் துடிக்கிறது என்னவோ தெரியாது.
குடிக்கும் மருந்துகூட உட்செல்ல அனுமதியில்லை.
கதைக்க கடிதம் வரைய உறக்கமில்லாதிருக்க
பல நாட்கள் கட்டிலில் காட்டுறக்கம் கொள்ள
ஏனோ இன்னும் வருவதும் இல்லை
செல்வதும் இல்லை
துளிவேர்வையும் சாட்சி
செருப்பு மிதுதி அழுகிறது.
பலமுறை நாவினால் உரசி பற்கடித்து
பார்வையைத் தொலைத்து
உணர்வுகள் படுத்த நாட்களை விட
உதடுகள் கடித்தது அதிகம்
இனியும் தொலைக்க ஒன்றே உண்டு உயிர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





*மாலை நேரத்துக் கொட்டுமழை*
*தடுமல் பிடித்துவிடுமென்று பயந்து*
*எழுத்தாளர் நூதனசாலைக்குள் விரைந்தார்.*
*இறந்த விலங்கொன்றைச்சூழ பிள்ளைகள் இருந்தனர்.*
*புதுமணச் சோடிக்கு முகங்காட்டும் நிர்வாண அழகியொருத்தி*
*குளியல் முடித்து சேலையை எடுக்கக் கைநீட்டிய படி.*
*மெல்லியதொரு தொடுகை, அந்தப் பெண் திரும்பிப் பார்த்தாள்.*
*அவளது மார்பகங்கள் விம்மின.*
*நேற்றைய கதையை நினைவு படுத்தியபடி*
*அவள் கணவன் பின்னால் நின்றிருந்தான்*
*அவளது கண்கள் பிரகாசமாய் ஒளிர்ந்தன*
*மேனி பதறியது*
*தங்களை யாரோ பார்ப்பதாக அவளுணர்ந்தாள்*
*அவள், அவனை அப்பால் இழந்து விட்டாள்.*
*தொலைந்து போன கதைகளின் படிமங்கள்*
*அந்தக் கனத்தின் அந்த அசைவின் படிமமாயிற்று.*
*பையனும் பெண்ணும் அந்த எழுத்தாளருமே*
*நூதனசாலையுள்.*
*வெளியே மழை பெய்தது.*
*அந்த நெரிபடும் சனத்திரளில்*
*தொலைந்து போனார்கள் ராமரும் சீதையும்*
*அவர்களுக்காகக் காத்திருந்த அந்த மனிதன்*
*வயோதிகனானான்.*
*மூலையொன்றில் தாயொருத்தி குழந்தைக்கு ஊட்டிக் கொண்டிருந்தாள்.*
*யாரோ தள்ளிவிட*
*தட்டுத்தடுமாறி அடுத்தறையுள் போனார் எழுத்தாளர்*
*பார்த்தார்*
*உள்ளங்கையில் நாடியைத் தாங்கி*
*அழகிய பெண்ணொருத்தி காத்திருந்தாள்*
*எதிர்பார்க்கையின் படிமம் அவள்.*
*அவள் இருந்தாள், காத்திருந்தாள், அகலிகையைப் போல.*
*பலர் வந்தனர். ஆனால் எங்கே ராமன்?*
*எழுத்தாளருக்கு அது தெரியாது.*
*கதை எவ்வாறு முடியப்போகின்றதென்றும் அவருக்குத் தெரியாது*
*ஆனால் ஆங்காங்கே தரிப்புகள் வந்து போகும்.*


**கன்னட மூலத்தில் : எச்.எஸ். வெங்கடேசமூர்த்தி**
**டி.ஏ. சங்கரின் ஆங்கில மொழி பெயர்ப்பிலிருந்து**
**தமிழில் : சி. ஜெயசங்கர்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மு. தளையசிங்கம்

## ஏன் இந்த 25 வருட மௌனம்?

எம். பௌசர்

**மு. தளையசிங்கம் பற்றி நடாத்தப்பட்ட கருந்தரங்கில் வாசித்த கட்டுரையின் சுருக்கமிது!**

**ஊ**ர்கூடி நிதி சேகரித்து மு. தளையசிங்கத்திற்கு இன்னும் சிலை வைக்கவில்லை, அது நிம்மதியான செய்தி, அது தேவையானதுமில்லை! கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் மு. தளையசிங்கத்தின் சிந்தனைத் தளமும் படைப்புலகமும் பன்முக விமர்சன நோக்கு என்ற தலைப்பில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் மு.த.வின் உருவப் படத்தை வைத்து அன்னாருக்கு மலர்மாலை சாத்தி அவரின் எழுபதுகளில் எடுக்கப்பட்ட வெறும் நிழல் படத்திற்கு அஞ்சலி செலுத்தும் காரியத்தை யாருமே செய்யவுமில்லை. அந்த வகையில் மு.த.வின் உயிரும் நாங்களும் சந்தோசமடைகிறோம். மு.தளையசிங்கம் இதற்காக வாழ்ந்தவனுமில்லை, இதனை எதிர்பார்த்தவனுமில்லை.

மு. தளையசிங்கம் போலி வார்த்தைகளால் இட்டு நிரப்ப முடியாத உண்மை மனிதனின் பிரதிநிதி! 70களின் பின் உருவான இளம் தலைமுறைகள் யாரும் மு.த.வுடனான நேரடித் தொடர்பை கொண்டிருக்கவில்லை. மரணம் இந்த வாய்ப்பை பெரும்பாலானோருக்கு வழங்கவில்லை. ஆனாலும் காலத்தால் அழிக்க முடியாத ஒரு கலைஞனின், ஒரு மனிதனின் பதிவுகளை மு.த. விட்டுச் சென்றதன் விளைவாய் 70க்குப் பின் வந்த இளம் தலைமுறையினரிடம் மு.த. பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறான். அவர்களின் சிந்தனைகளின் தளங்களில் பெரும் உலுப்பை ஏற்படுத்திய ஒருவராகிறான். இது உண்மையெனில் ஒரு கேள்வி இங்கு பிரதானமாகிறது.

1957களிலிருந்து 1973 தனது மரணம்வரை - மு.தளையசிங்கம் தமிழ்ச் சூழலில் எம்முடனேயே வாழ்ந்து இருக்கின்றான். படைப்பு, விமர்சனம், அரசியல், தத்துவம் போன்ற சிந்தனைத் தளங்களில் ஒளியின் வேகத்தைவிட அவன் பாய்ச்சல் நடத்தி இருக்கிறான். மனங்கள் அதிர்ந்து போகக்கூடிய அளவுக்கு எழுத்தும் சிந்தனையும் அவனுக்குக் கைவந்திருக்கிறது.

சுமார் 17 வருடங்கள் தனது மரணத்தின் இறுதி மூச்சுவரை படைப்பாளன், சிந்தனைவாதி என்ற வகையில் வெறும் கனவுகளில் நூல் கோர்த்து மனவெளிகளில் பட்டம் விட்டுக் கொண்டிருந்தவனல்ல, மு.தளையசிங்கம். ஆகவே அக்காலப்பகுதியில் மு.த. நமது தமிழ்ச் சூழலில் ஏற்படுத்திய அதிர்வு, தாக்கம்பற்றி ஏன் இதுவரை பேசப்படவில்லை என்ற கேள்வி இங்கு மிகவும் முக்கியமாகிறது.

எழுத்துத் துறைக்கு வந்து 25, 50, 60 வருடங்கள் என மணிவிழா, பொன்விழா, பவளவிழா கொண்டாடும் எழுத்தாளர்கள் மாலை சூட்டிகளாக வாழும் நமது தமிழ்ச் சூழலில் - எழுதி, விமர்சித்து, மனிதனை, அவனது அசிங்கங்களுக்கு அப்பால்; சேற்றுக் குழியிலிருந்து அவனை வெளியே எடுப்பதற்காக நமது அரசியல் தொடக்கம் ஆன்ம விடுதலை வரை உழைத்து போராடி அதிலேயே மரணித்துப் போன மு. தளையசிங்கத்திற்கு அவனைத் திரும்பிப்பார்க்க, அவனது சிந்தனைத் தளத்தை மறுகண்டுபிடிப்புச் செய்ய, 25 வருடங்களை வெகு அலட்சியமாக நாம் கழித்துவிட்டு, மண்ணோடு மண்ணாக இற்று அழிந்துவிட்ட அவனது எலும்புக் கூடுகளைப் போல் அவனது படைப்புகளும் அவனது சிந்தனைகளும் சுவடுகள் தெரியாத ஆழத்தில் புதைக்கப்பட்டு விட்டது என்று நாம் வாழாதிருந்தோமா? தூக்கத்தில் கிடப்பது போல் பாசாங்கு செய்து கிடந்தோமா? ஏன் இந்த 25 வருட மௌனம்?

ஈழத்து தமிழ்ச் சூழலில் மிகத் தீவிரமான சிந்தனையும் மிகத் தீவிரமான செயற்பாடும் கொண்டவனாக வாழ்ந்து மரணித்துப் போனவன்தான் மு.தளையசிங்கம். எழுத்தும் வாழ்க்கையும் வேறானது என எழுதியது போல் வாழ முடியாத அவலம் நிறைந்த நமது சூழலில் எழுதியது போல் வாழ முடியும் என வாழ்ந்து காட்டியவன் அவன். தனது வாழ் அனுபவத்திலிருந்தும் தனது சிந்தனைத் தளத்திலிருந்தும் தீர்க்கமாக இயங்கிய அவன், தனது அற்ப ஆயுசான 38 வயதிலேயே எழுத்தை மெய்ப்பிப்பதற்கான போராட்டத்தில் தனது வாழ்வை முடித்துக் கொண்டான்.

மு. தளையசிங்கத்தின் இழப்பு நமது தமிழ்ச் சூழலுக்கு ஏற்பட்ட மிகப் பெரும் துயரம் தரும் அவலமாகும்! 1973இல் மு. தளையசிங்கத்தின் மரணம் நிகழ்ந்தவுடன் அவனது முக்கியத்துவம்பற்றி ஈழத்துச் சூழலில் யாருமே பெரிது படுத்திக் கொண்டதாகத் தெரியவில்லை என்ற செய்தி அவனை, அவனது சிந்தனையை மீள திரும்பிப்பார்க்கும் ஒரு இளம் படைப்பாளிக்கு பெரும் அதிர்ச்சியையே தருகிறது.

ஈழத்தில் மிகவும் இருட்டடிப்புக்கு உட்பட்ட அவலத்தின உச்சம்தான் மு.தளையசிங்கம். 60, 70களில் இங்கு போலி புரட்சி முழங்கிக் கொண்டு நமது படைப்புத்தளம் தொடக்கம், நமது இடதுசாரி அரசியல்வரை கூடாரமடித்து புகை எழுப்பிக் கொண்டு, ஈரக் கொள்ளிகளால் புரட்சித்தீ வளர்த்த போலி புரட்சிவாதிகளுக்கு அன்று தேவையாகவிருந்தது தங்களது இருப்பை காப்பாற்றிக் கொள்ளும் தந்திர குயயுக்தி மாத்திரமே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால் - வரலாறு - இன்று இந்தப் போலி புரட்சிவாதிகளை குப்பைக் கூடைக்குள் வீசி, இருட்டடிப்புச் செய்யப்பட்டு, புறந்தள்ளப்பட்டு மரணம் கபளீகரம் செய்த மு.தளையசிங்கத்தை - காலத்தால் அழிக்க முடியாத வாழ்வே நித்தியமான சிந்தனைவாதியாக ஒரு கால்நூற்றாண்டுக்குப் பின் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது, "சூரியனை கைகளினால் மறைக்க முடியாது" என்பது இதுதான் போலும்.

ஒரு சத்திய எழுத்தாளனுக்கு வாய்க்கப்பெறும் எதிர்காலத்தை கட்டியங் கூறுவதற்கான தூர திருஷ்டி நிறையவே மு. தளையசிங்கத்திற்கு கைவரப் பெற்றிருக்கிறது. 1960களில் இவரால் எழுதப்பட்ட "ஒரு தனி வீடு" நாவல் ஈழத்து தமிழர் அரசியலில் மிகத் தீர்க்க தரிசனமான படைப்பாகும். தமிழ்த் தேசியவாத அரசியலின், சிந்தனைத்தள முன்னோடியாக நிலை நிறுத்தப்பட வேண்டியவர் - மு. தளையசிங்கம், அன்றைய ஒரு தனி வீடு இன்று ஒரு தனி நாடாக நிகழ்காலத்தில் உருக்கொண்டு நிற்கிறது.

கொழும்பில் சமஷ்டிக் கட்சியாகவும், யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியாகவும் இரு வேறுமுகம் காட்டி அரசியல் பிழைப்பு நடாத்திய அரசியல் சக்திகளுக்கெதிராகவும் - இடதுசாரிகள் என்ற போர்வையில் சிங்கள, பௌத்த தேசியவாதத்திற்கு சாமரம் வீசிக் கொண்டிருந்த முற்போக்கு போலிகளுக்கெதிராகவும் தீவிரமாகப் போராடியவன் மு. தளையசிங்கம். தாழ்த்தப்பட்ட, அடக்கப்பட்ட மக்களின் பக்கமே தனது எழுத்தும், வாழ்வும், சிந்தனையும் என்ற நிலைப்பாட்டிற்கும் மேல் - மரணமும் அவர்களுக்கான போராட்டத்திலேயேதான் என்பதை மெய்ப்பித்தவன் என்ற உயர்ந்த ஸ்தானத்திற்குரியவனாகிறான் - மு.தளையசிங்கம்.

"இருபதாம் நூற்றாண்டில் வாழ்வதற்கான சாயல் இவரைப் போல் முழு வீச்சோடு வெளிப்படுத்திய ஆளுமைகள் நம்மிடையே வேறு உள்ளனவா? இந்த நூற்றாண்டின் முதற் பாதியில் இரண்டு பெயர்கள் கிடைக்கின்றன. ஒருவர் பாரதி, மற்றொருவர் புதுமைப் பித்தன், பாரதி தாழ்ந்து போனமைக்கு துக்கித்து, மேலான ஒன்றை எழுப்ப முயன்றார். புதுமைப்பித்தன் தாழ்ந்து போனமையை வெட்ட வெளிச்சமாக்கினார். இந்த வரிசையில் மூன்றாவதாக வருபவர் தளையசிங்கம். பாரதியின் கருத்துலகத்தை விடவும் தளையசிங்கத்தின் கருத்துலகம் முழுமையானது. மற்றொரு விதத்தில் சொன்னால் பாரதியின் சிந்தனையை இவர் நம் காலத்திற்கு கொண்டு வந்து இடைக்கால சரித்திரத்திற்கும் எதிர்வினை தந்து இடைவெளிகளை அடைத்து முழுமைப்படுத்த முயன்றார் என்று சொல்லலாம்" என்ற சுந்தர ராமசாமியின் கருத்து எந்த விதத்திலும் தளையசிங்கம் தொடர்பான மிகையான கூற்றல்ல!

நமது ஈழத்து தமிழ்ச் சூழலில் படைப்பு, விமர்சனம், சிந்தனை என்பனவற்றுடன் ஒரு தத்துவத்தளத்தையும் உருவாக்கிய யாரும் மு. தளையசிங்கத்திற்கு முன்போ, தளையசிங்கத்திற்குப் பிறகோ இன்னும் வெளிவரவில்லை என்ற உண்மையை யாரும் நிராகரிக்க முடியுமா?

---

# பிசாசு பிடித்தவனின் கவிதை

*மூச்சினுள் ஜலமேறி நான் திணறப் பொறுத்து~*
*ஏழாவது கடலின் அடியாழத்திற்கும் அப்பால் கொண்டு*
*அமிழ்த்தி,*
*பெயர்த்து இமயத்தைப்*
*பாரமேற்றிக் கையெடுக்க,*
*அழுத்தின கைகளை முந்தி*
*மேலெழுந்தது.*
*மிகைக்க முனைந்த*
*வஸ்துக்கள் அனைத்தையும் மேவிக்*
*கேலிக்கு ஆளாக்கி*
*ஈர்ப்பையும் தாண்டியின்னும் மேலே*
*மேலேயெழுந்தது.*
*அகிலமே அதிரக்*
*கெக்காளம் கொட்டிக் சிரித்தது போதாது*
*பளித்தது பல்லிளித்தே.*

*இறுகிக் கல்லாகிக் கட்டியான என்*
*வானமெங்கும்*
*அது மட்டும் இஸ்டப்படி திரிந்தது, அலைந்தது.*
*ஏழரைச் சனியன் பிடித்துச்*
*சத்தையெல்லாம் உறுஞ்சித் துப்ப,*
*நடக்கவுந் திரணியற்று*
*நாலொருத்தன் நடைமறந்து கிடந்துழல*
*அதுவோ ~*
*வா, வந்தென் கூடப்பற நீயுமெனத் தூக்கி*
*விண்ணில் எறிந்தது.*

*தலையெடுக்கவொண்ணா அலுவல்களில் முறிகையிலும்,*
*ஓதி, நெஞ்சில் ஊதி*
*மன்றாடி~*
*கடவுளிடம் கார்மானம் வேண்டிய உறக்கத்திலும்*
*அங்கிங்கெனாது எங்கிலும் நீக்கமற நிறைந்த அதுவே*
*மறைப்பில் சொறிவது மாதிரிச் சுகத்தையும்,*
*பிற்பாடு*
*நீர் படத் தாங்கொணா எரிவையும் போலத் தந்தது.*

*ஊறித் திழைத்த நுரையுண்ட காதலின்*
*ஆற்றுந் தழுவல்களும், மென் முத்தங்களும் தோற்றனதான்*
*என்பதைவிட*
*வேறும் எவ்விதம் சொல்வேன் கொடிய அது பற்றி*
*அதுதான் ~*
*என்மீது பார்வைகொண்ட பேய் ~*
*என் ஆசைகளைப் பற்றி.*

**- றஷ்மி -**
**19991216இரவு11.17மணி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



'அப்பா குப்பை கொண்டு போய் போடோணும்.'

குசினிக்குள் இருந்தபடி இவள்தான் சொல்கிறாள். இவளுக்கு இன்னமும் வேலை முடியவில்லை. பாத்திரங்களை அடுக்கி வைப்பது, நாளைய சமையலுக்கான பொருட்களை தயார்படுத்தி வைப்பது, கட்டிலில் தட்டி விரிக்கப்படாமலே குறுக்கும் நெடுக்குமாகப் படுத்திருக்கும் குழந்தைகளைத் தூக்கி கட்டிலை ஒழுங்காக்கிப் படுக்க வைப்பது, அவர்களுக்காக ஒரு நுளம்பு திரியை ஏற்றி வைப்பது..... அதன் பிறகு, அடுப்படிப் பின்கதவையும், ஜன்னலையும் சாத்திவிட்டு முகத்தைக் கழுவி உடுப்பை மாற்றிக் கொண்டு படுக்கைக்குப் போக வேணும்.... கவனமாக மணிக்கூட்டில் நாலு மணிக்கு அலாம் செற்பண்ணி வைக்க வேண்டும்...,

மேலே தொங்கிக் கொண்டிருக்கும் மணிக்கூட்டைப் பார்த்தேன். பதினொரு மணிக்கு பத்து நிமிடங்கள் இருந்தன. எனது வேலைகள் எல்லாம் முடிந்து விட்டன என்ற திருப்தியுடன்தான் வந்து இந்த மேசையருகில் உட்கார்ந்தேன். நீண்ட நாட்களாக எழுதப்படுவதற்காக எனது மனதுள் கிடந்து அரித்துக் கொண்டிருந்த கதையிது. எழுதி முடிக்கப்படாததால் அது ஒரு சுமை போல நெஞ்சுக்குள் கனத்துக் கொண்டே இருக்கிறது. ஆனால் எழுதத்தான் நேரம் வாய்க்கவில்லை. ஒவ்வொரு நாளும் வந்து உட்கார்ந்து எழுத வேண்டும் என்று நினைத்தால், ஏதாவது வேலை காத்துக் கொண்டிருக்கும். ஒன்றை முடித்தால் இன்னொன்று. இதற்கிடையில் தனது வேலைகளில் நான் பங்கெடுத்துக் கொள்வதில்லையென்ற இவளது குறைபாடு வேறு. தான் வெறும் சமையல்காரியைப்போல வேலையால் வந்த நேரம் முதல் இந்த அடுப்படிக்குள் கிடந்து மாய வேண்டியிருக்கிறதே என்ற ஓயாத இவளது எரிச்சலுக்கும் முணுமுணுப்புக்கும் பயந்து அல்லது இவள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறதுதான் என்று நினைத்து உதவப் போய் நேரம் பிய்த்துக் கொண்டு போய் விடுகிறது... எழுதுவதற்கு நேரம் கிடைக்காமலேயே போய் விடுகிறது. கதையை எப்படித் தொடங்குவது, எப்படி வளர்த்தெடுப்பது, எப்படி முடிப்பது என்பதெல்லாம் தெளிவான படமாக மனதுக்குள்ளே வந்து




விட்டது. பேப்பரையும், பேனாவையும் எடுத்துக் கொண்டு உட்கார வேண்டியது, எழுதுவதற்கான தெம்பை ஏற்படுத்திக் கொண்டு எழுதத் தொடங்குவது இரண்டும்தான் தேவை. ஆனால், அதற்குத்தான் நேரமில்லாமல் எப்போதெடுத்தாலும் ஏதாவது ஒரு வேலையென்று......

'என்னப்பா இருந்திட்டியளே.... இந்தக் குப்பையைக் கொண்டு கொட்டிப்போட்டு வந்திட்டால் வேலை முடிஞ்சிடும் என்டு பார்த்தால் நீங்கள் போய் இருந்திட்டியள்....'

திரும்பவும் இவள்தான் சொன்னாள். குரலில் கொஞ்சம் சூடேறியிருந்தது. இன்றைய வேலையை முடிந்தளவு சீக்கிரம் செய்து முடித்து விட வேண்டும் என்பதுதான் அவளது இலக்கு. எனக்கு எரிச்சலாக வந்தது. நானொருத்தன் இந்தக் கதையை எழுதி முடித்து விட வேண்டும் என்பதற்காக எவ்வளவு அந்தரப்படுகிறன் என்ற அக்கறை இவளுக்குக் கொஞ்சம் கூட இல்லையே என்ற ஆதங்கத்தில் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

'கொஞ்சம் பொறனப்பா, குப்பை எப்பவும் போடலாம்தானே...' எனது குரல் சற்று அழுத்தமாகத்தான் ஒலித்தது.

நான் எழுதத் தொடங்கினேன்.

மனதை ஒருமுகப்படுத்தி எழுதத் தொடங்க வேண்டும். மனதில் இருக்கும் காட்சிகளுக்கு சரியான வடிவத்தைத் தருவதாக அது அமைய வேண்டும். ஒரு தவம் போல, இந்த உலகத்தை மறந்து ஒரு யாகம் செய்யும் நிலையில் கதையின் களத்திலே நான் முழுமையாகச் சஞ்சரிக்க வேண்டும். புறக்குழப்பங்கள் அற்ற நிலையில் அந்த உலகிலே புகுந்து கொண்ட பின் தேவைப்படுவதெல்லாம் முதலாம் வரியை எழுதுவதுதான். அதன்பின் மற்ற வரிகள் வேகமாக ஓடியோடி வரும். பேனா மூச்சில்லாமல் நகர்ந்து கொண்டிருக்க கதை வளர்ந்து வரும்...

'இந்த வீட்டிலை எனக்கொருத்திக்குத்தான் அவசரம்... அவையவையளுக்கு தங்கட தங்கட வேலையள்...'

இவளது முணுமுணுப்பால் என்னுடைய தவம் குழப்பப்பட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விட்டது. விசுவாமித்திரக் கோலத்துடன் பேனையை மேசையில் வீசிவிட்டு எழுகிறேன். எழுந்த வேகத்தில் எனது கதிரை பின்புறமாகச் சரிந்து தடால் என்று விழுகிறது. அறைக்குள் தூங்கிக்கொண்டிருந்த சின்னவள் இந்தச் சத்தத்தில் எழுந்து அழத் தொடங்குகிறாள். இவள் அடுப் படியிலிருந்து படுக்கையறைக்குள் ஓடுகிறாள். எழுந்து அடுப்படிப் பக்கம் போகிறேன். குப்பை இரண்டு "ஷொப்பிங் பேக்"கில் கட்டப்பட்டு நடுக்குசினிக்குள் இருக்கிறது. பேசாமல் எடுத்துக் கொண்டு நடக்கிறேன். நேற்றும் குப்பை கொட்டப்படவில்லை. அதுதான் இரண்டு பைகளாகிவிட்டது. போதாததற்கு நேற்று வெட்டிய மீன் செதில்களும் வேறு இருந்திருக்க வேண்டும். புளித்த தேங்காய்ப்பூவும் மீன் செதில் நாற்றமுமாக பையைத் தூக்கும் போதே மணம் அருவருப்பை ஏற்படுத்தியது. இவளது அவசரத்துக்கும் காரணம் இருக்கிறதுதான் என்று தோன்றியது. மனதில் எழுந்திருந்த கோபமும் எரிச்சலும் சற்று வேகந்தணிந்திருந்தன.

கேற்றைத் திறந்து வீதியில் நடந்தேன். வீட்டிலிருந்து ஒரு 100 அல்லது 150 மீற்றர் தூரம் நடக்க வேண்டும். முனிசிபல் குப்பைத் தொட்டி இருக்கும் இடத்துக்கு வெளியே குளிரான காற்று வீசியது. வீட்டுக்குள் மின் விசிறிக் காற்றில் இருந்து விட்டு வந்த எனது உடலுக்கு இது இதமாக இருந்தது. வானம் பளிச்சென்று நீலமாகவிருந்தது. நிலவு வெளிச்சம் தெரு வெளிச்சத் தையும் மீறி ஒளி வெள்ளத்தைப் பரப்பி விட்டிருந்தது. வீதி வெறிச்சிட்டு அமைதியாகவிருந்தது. தெரு அடங்கி நீண்ட நேரமாகி விட்டிருக்க வேண்டும். தூரத்தே விடிய விடியத் திறந்திருக்கும் முஸ்லிம் கொத்துரொட்டிக் கடையைத் தவிர முழுப் பிரதேசமுமே அமைதியாய் அடங்கிப் போயிருந்தது. கடையின் முன்னால் யாரோ இரண்டு பேர் நின்று சிகரட் குடித்துக் கொணடிருந்தார்கள். குப்பைத் தொட்டிகளை நோக்கி பைகளை வீசினேன். தொப்பென்று பைகள் விழுந்த இடத்திலிருந்து இரண்டு பூனைகள் திடுக்கிட்டு பாய்ந்து ஓடின. பைகள் தொட்டிக்குள் விழவில்லை. வெளியேதான் விழுந்தன. இவ்வளவு தூரம் நடந்து வந்து பைகளை தொட்டிக்கு வெளியே விட்டெறிந்த எனது செயலை நினைக்க எனக்கே சிரிப்பாக இருந்தது. திருப்பி எடுத்துப் போடுவோமா என்று நினைத்தேன். ஆனால், பைகள் பிய்ந்து உள்ளே இருந்தவை ஏற்கனவே சிதறி இருந்தன. நவிரவும் அந்தப் பையை எடுக்க அருகே போவது என்பதை நினைத்துப் பார்க்க முடியாதளவுக்கு குப்பைத் தொட்டியைச் சுற்றிலும் ஒரே கழிவுக் குப்பைகள். எல்லோரும் என்னைப் போலத்தான் தூரத்தே இருந்து வீசிவிட்டுப் போவார்கள போலும்.....

திரும்பி நடக்கும் போது சற்று முன் நடந்த சம்பவம் நினைவுக்கு வந்தது. சின்னவள் அழுது கொண்டிருப்பாள்..... அவள் அழத் தொடங்கினால் இலகுவில் அழுகையை நிற்பாட்டுகிற ரகம் இல்லை. இவளுக்குத்தான் கரைச்சல். இன்னமும் கொஞ்ச நேரம் கண்விழித்திருக்க வேண்டிவரும்... அவளை நித்திரையாக்கி விட்டுத் தனது வேலையை முடிக்க எவ்வளவு நேரம் எடுக்குமோ? நான் இவள் சொன்னவுடனேயே குப்பை பேக்கைத் தூக்கிக் கொண்டு வந்திருந்தால் ஒன்றும் நடந்திருக்காது, கதிரையும் விழுந்திருக்காது, பிள்ளையும் எழும்பியிருக்காது, இவளுக்கும் ஏறியிருக்காது.... ஆனால், ஆனால் இவள் மட்டும் என்ன? எப்போதும் தான் செய்கிற வேலை மட்டும்தான் பெரிது என்று நினைக்கிறது சரியா? மற்றவர்களது வேலைக்கும் ஒரு பெறுமதி கிடையாதா? நான் மேசையில் வந்திருந்து எழுதுவதை கொஞ்சம் அக்கறையோடு பார்த்தால் என்ன? எழுத விடாமல், என்ன அப்படி அவசரமோ? இதைப் போட்டிட்டு வந்து எழுதுங்கோவன் என்று கேட்டால் என்ன? இவளைப் பொறுத்தவரை எனது இந்த மாதிரி வேலையெல்லாம் ஒரு வேலையற்ற வேலை. அல்லது முக்கியமான எவ்வளவோ வேலைகள் இருக்க அதை விட்டிட்டுச் செய்யிற அளவுக்கு அவசரமான வேலையல்ல.... ஆனால், அப்படியும் முழுமையாகச் சொல்லிவிட முடியாது. எனது கதைகளை இவள் விரும்பிப் படிப்பவள்..... நல்லாய் எழுதியிருக்கிறீங்கள் என்றும் இவள் சொன்னதுண்டு.... ஒருவேளை இந்த மாதிரி வேலைகளை எல்லாம் வெறெங்காவது போயிருந்து, முடிந்தால் ஒப்பீசில வைத்துச் செய்தால் என்ன என்று நினைக்கிறாளோ என்னவோ... ஒன்று மட்டும் தெரியுது. இவளுக்கு நான் போய் மேசையிலை இருந்தது பிடிக்கேல்லை... தான் கிடந்து அடுப்படிக்கிள்ளை முறிய இவர் போயிருந்து எழுதிப் பேரெடுக்கவோ என்று எரிச்சல் படுகிறாளோ என்னவோ? நான் அடுப்படிக்குள்ளை போயிருந்தால் மட்டும என்ன, ஆகா வாருங்கோ வாருங்கோ என்று வரவேற்கவோ போகிறாள்...... அதற்கு எத்தினை குத்தல் கதை வரும்....

பாதையின் இடது புறமாக இருந்த வீட்டில் மட்டும் லைட் எரிந்து கொண்டிருப்பது இப்போதுதான் தெரிந்தது. போகும் போது நான் இதை எப்படிக் கவனிக்காமல் விட்டேன் என்று ஆச்சரியமாக இருந்தது. இந்த தொடர் மாடி வீடுகளில் இருந்து தனித்து நிற்கிற தனி வீடு அது. சிறிய ஆனால் நேர்த்தியான வீடு. சுற்றிவர வேலியோ மதிலோ கிடையாது. முன்பொரு காலத்தில் வேலி இருந்திருக்கிறது என்பதற்கு அடையாளமாக ஆங்காங்கே இரண்டொரு மரங்கள் மட்டும் நிற்கின்றன. இந்த வீட்டில் யார் இருக்கிறார்கள் என்று எனக்கு இன்றுவரை தெரியாது. இந்தத் தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் நான் குடியிருக்க வந்த கடந்த மூன்று ஆண்டுகளில் ஒரு நாள் கூட இந்த வீட்டில் யாரையும் பார்த்ததில்லை. ஒரு வயதான கிழவி மட்டும் மாலை நேரத்தில் வீட்டிலுள்ள முன் குந்தில் குந்தியிருப்பதைக் கண்டிருக்கிறேன். நான் மாலை நேரத்தில் வேலையால் வரும் போதெல்லாம், ஆழ்ந்த ஏதோ ஒரு துயரத்துடன் யாரோ ஒருவரின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யாரை எதிர்பார்த்துக் காத்திருக்கிற சோகத்துடன் கூடிய முகத்துடன் இருக்கும் அவளைக் கடந்து போயிருக்கிறேன். மௌனமாக எதையோ வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருப்பாள் அவள். இராணுவத்திலிருந்து ஒரு மகன் செத்துப் போனதாக மட்டும் யாரோ சொன்னதாக ஞாபகம். அவளைத் தவிர அந்த வீட்டில் யாரும் இருப்பதை நான் கண்டதில்லை..... இருள் சூழ்ந்து சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த வீடு முற்றாக இருண்டு விடும். இந்தக் கிழவி தட்டத்தனிய இந்த வீட்டில் இருக்கிறாளோ என்று நான் நினைப்பதுண்டு. ஆனால், யாரிடமும் விசாரித்ததில்லை. ஆனால் இன்று.....

அவளது வீட்டைக் கடந்து போகும்போது நன்றாகத் திரும்பிப் பார்த்தேன். வீட்டில் பலர் கூட்டமாக நிற்பது தெரிந்தது. அவர்கள் ஏதோ மும்முரமாக வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். ஏதாவது விசேசமாக இருக்கலாம் என்று தோன்றியது. எங்காவது வெளிநாடு போயிருந்த இவளது இன்னொரு மகன் திரும்பி வந்திருக்கக்கூடும்... அவனுக்குத் திருமணம் செய்ய அவள் நிச்சயித்திருக்கக்கூடும்.... வீட்டில் ஆட்கள் நடமாடுவது தெரிந்ததே ஒழிய என்னவாக இருக்கும் என்று ஊகிக்க முடியவில்லை... எனது கண்கள் அந்தக் கிழவியைத் தேடின. ஆனால், அவளை அங்கே காணவில்லை. வீட்டில் இவள் ஒரு சண்டைக்கு தயாராக இருப்பாள் என்ற எண்ணத்துடன் படியேறி வீட்டுக்குள் நுழைந்தேன். குழந்தையை எழுப்பி விட்டுப் போனது இவளுக்குக் கோபத்தை கிண்டிவிட்டிருக்கலாம்... குழந்தை எழும்பியதால் இவள் படுக்கைக்குப் போகும் நேரம் குறையப் போகிறது. இது இவளது தூக்க நேரத்தைக் குறைக்கப் போகிறது. விடிய நாலு மணிக்கு எழும்பித் திரும்பச் சமைக்கத் தொடங்க வேணும் என்ற பயம் இவளது கோபத்தை மேலும் ஏத்திவிட்டிருக்கும்... நான் மௌனமாக பாத்ரூமை நோக்கி நடந்தேன். கைகால்களை அலம்பிவிட்டு வந்த நான் மீண்டும் மேசைக்குப் போய் எழுதத் தொடங்குவதா என்று யோசித்தேன். மேசையருகே வந்த போது இவள் இன்னமும் அடிப்படிக்குள் ஏதோ வேலையாய் இருக்கிறாள் என்பது உறைத்தது. இவள் மௌனமாக இருப்பது எனது வாயையும் கட்டிவிட்டிருந்தது. எனது மௌனம் இவளுக்கு மேலும் எரிச்சலை ஊட்டியிருக்கும் என்று தோன்றியது. அடுப்படி வேலைகள் இன்னும் முடிந்தபாடாய்த் தெரியவில்லை. போய்ப் பாத்திரங்களைக் கழுவிக் கொடுப்போமா என்ற எனது நினைப்புக்குப் பதிலாக ஒரு பாத்திரம் விழுந்து உருண்டது. நல்லவேளையாக குழந்தை இப்போது எழுந்திருக்கவில்லை. பாத்திரம் தானாக விழுந்ததா? அல்லது இவள்தான் அதனை வேண்டுமென்றே போட்டாளா என்று புரியாமலும் எழுதுவதா? போய்க் கழுவுவதா? என்று முடிவெடுக்க முடியாமலும், தடுமாறியபடி அடுப்படிப் பக்கமாக நடந்தேன். நான் அடுப்படிப் பக்கமாக நடந்து வருவதை உணர்ந்த இவள் இன்னும் தீவிரமாகவும், வேகமாகவும் தனது வேலையில் ஈடுபடுவதாகக் காட்டிக் கொள்கிறாள் போல இருந்தது. என்ன செய்வது, என்ன பேசுவது என்று தெரியாமல் திரி கொளுத்தி வைச்சதே பிள்ளையளுக்கு' என்று கேட்டேன். எனது குரலே எனக்கு அன்னியமாய், எனது கேள்வியிலே ஒரு குற்ற உணர்வு இருப்பதாகத் தோன்றியது. அடுப்படிக்குள் இவளது வேலை இப்போதைக்கு முடியப் போவதில்லை என்பது தெரிந்தது. இவளுக்கு இந்தக் கேள்வி எரிச்சலூட்டியிருக்கும். அவள் பதில் பேசவில்லை. திரி கொளுத்தியாச்சா எண்டு போய்ப் பார்க்க வேண்டியது தானே... என்ன கேள்வி வேண்டிக்கிடக்கு' என்று சொன்னது போல இருந்தது இவளது மௌனம். படுக்கையறையைப் போய் எட்டிப்பார்த்தேன். சின்னவள் விசும்பி விசும்பி உறங்கிக் கொண்டிருந்தாள். பார்க்கப் பாவமாக இருந்தது. அறைக்குள் புகுந்தவுடனேயே நுளம்புத்திரி மணம் குப்பென்று அடித்தது. கட்டிலின் கீழ் குனிந்து பார்க்கத் தேவையிருக்கவில்லை. திரும்பி அடுப்படிப் பக்கமாகப் போனேன். 'நான் கழுவி வைக்கிறன், நீ போய்ப்படன்' என்று சொல்ல வாயெடுத்து பின் அடக்கிக் கொண்டு ஒரு பாத்திரத்தை எடுத்துக் கழுவத் தொடங்கினேன். எஞ்சிய கறித்துணிக் கைகளை வழித்துக் கீழே குப்பை வாளிக்குள் போட்டுவிட்டுக் கழுவத் தொடங்கினேன்.

'ஏன் நீங்கள் கழுவுறியள். நீங்கள் போய் உங்கட வேலையைப் பாருங்கோ... அதுதானே அவசரம்'

எதிர்பார்த்த தாக்குதல்தான் என்றாலும் இந்தக் குத்தல் என்னைத் தடுமாறத்தான் செய்து விட்டது. எரிச்சலும் கோபமும் பொத்துக் கொண்டு வந்தது.நான் இப்படி அடுப்படிக்குள் வந்து ஏதாவது செய்வம் என்று தொட்டாலே இப்படி ஏதாவது குத்தல் கதை சொல்லாமல் இருக்க முடியாது இவளுக்கு. ஏதோ நான் ஒரு வேலையும் செய்யாமல் காலாட்டிக் கொண்டிருந்திட்டு வந்து நிற்கிறேன் என்பது போல... இந்தக்குத்தலை சகிக்க முடியவில்லை.

'என்ன கதைக்கிறாய்? நானென்ன விளையாடிக் கொண்டா இருக்கிறேன்...'

'ஆர் சொன்னதிப்ப விளையாடினதெண்டு. உங்கட வேலையைப் போய்ச் செய்யுங்கோ எண்டல்லோ சொன்னனான்.'

இந்த எகத்தாளமான பதிலுக்குப் பிறகு எனக்கு அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. கையைக் கழுவிவிட்டு வந்து கதிரையில் இருந்தேன். ஆனால் எழுதுகிற மூட் போய்விட்டது. எழுந்து போய்க் கட்டிலில் விழுந்தேன். தூக்கம் வரவில்லை. மனது நிறைய சுமையாக அழுத்திக் கொண்டிருந்தது. ஏன் இப்படியொரு தேவையற்ற குற்ற உணர்வுடன் நான் தவிக்க வேண்டும். ஏன் தான் இவள் இப்படி மாறிப்போனாள்...? மாறிப்போனாளா அல்லது இவள் எப்பவுமே இப்படித்தான் இருந்து, நான்தான் கவனிக்காமல் இருந்தேனா? எப்படித்தான் இந்த ஐந்து வருட காலத்தையும் நான் ஓட்டிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டு வந்திருக்கிறேனோ என்று நினைக்க என்னையிட்டே ஒரு பச்சாதாப உணர்வு தோன்றியது... இந்த அரியண்ட நிலை இப்ப கொஞ்ச நாட்களாக சனியன் பிடிச்சது போல தொடர்ந்து கொண்டிருக்கிறதே... ஏன்... என்னதான் நடந்திட்டுது?

திடீரென்று ஏதோ அம்மாவின் நினைவு வந்தது. அம்மாவும் கோபக்காரிதான். கொஞ்சம் என்ன முதலே அவளுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்துவிடும்தான். ஆனால், அப்பாவுடன் அவள் இப்படி எரிந்து விழுந்ததாக ஞாபகம் இல்லை. அம்மா விடிஞ்சால் பொழுது படும்வரை வேலை வேலை என்று முறிஞ்சு கொண்டு தான் இருப்பாள். ஒரு அவசரத்துக்கு தேத்தண்ணி வைக்கக்கூட அப்பா அடுப்படிப் பக்கம் போயிருக்க மாட்டார். அப்பாவுடன் அம்மா சண்டை பிடித்திருக்கிறாள். அழுது கொண்டு சாப்பிடாமல் பட்டினி கிடந்து பிடிவாதம் பிடித்திருக்கிறாள். ஆனால், இப்படி ஒரு குத்தல் கதை கதைத்ததாக ஞாபகம் இல்லை. அப்பாவின் வேலையில் மதிப்பு இருந்தது. அவரது வேலையைக் குழப்பக்கூடாது என்ற அக்கறை இருந்தது... ஆனால்... அப்பா மட்டும் என்ன, அவரும் அம்மாவின் வேலைக்கு உரிய மதிப்பைக் கொடுக்கத் தவறியதே இல்லை. அவள் பாவம் எவ்வளவு வேலை என்று முறிகிறாள் என்று அப்பா சொல்வதை நானே கேட்டிருக்கிறேன்... அப்பா இப்படி யாருடனாவது பேசும் போது சொன்னால் அம்மாவின் முகத்தைப் பார்க்க வேணுமே... மகிழ்ச்சியால் பூத்துப் போய் இருக்கும்... 'ம்.... அதுக்கு மட்டும் குறைவில்லை.' என்று முணுமுணுப்பாள்.. அவர்கள்தான் எவ்வளவு சந்தோசமாக இருந்தார்கள்... ஏன் எனக்கு மட்டும்... இப்படி ஒரு நிலை வந்தது.... என்னை அறியாமலே ஒரு பெருமூச்சு வந்தது.

இவள் வந்து லைட்டை அணைத்துவிட்டுப் படுத்தாள். போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். அதே மௌனம். நேரம் கிட்டத்தட்ட பன்னிரண்டு மணியாயிருக்கும் என்று நினைத்துக் கொண்டு தூங்க முயற்சித்தேன். நினைவுகள் ஓய்ந்ததாகத் தெரியவில்லை. இவள் வந்து மௌனமாக அருகில் (வெகு ஜாக்கிரதையாக என்மீது முட்டாமல்) படுத்துக் கொண்டது இன்னமும் எனக்கு எரிச்சலை ஊட்டியது. ஏன்தான் இவள் இப்படி நடந்து கொள்கிறாளோ என்று மனது அடித்தது.

நேற்றும் இப்படித்தான். நீண்ட நாட்களாக போக வேண்டும் போக வேண்டும் என்றிருந்த பயணம். நண்பன் ஒருவனது வீட்டிற்கு. நேரம் கிடைக்காததால் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தது. கடைசியாக ஒரு நாள் அவன் 'எங்கடை வீட்டுக்கு நீங்கள் வரவே மாட்டியளோ?' என்று கேட்டே விட்டான் என்பதால் இவளையும் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு போயிருந்தேன். போய்விட்டு வீட்டுக்கு வந்து படியேறியதுமே அடித்துப் போட்டது போல களைப்பாக இருந்தது. கதிரையில் தொப்பென்று உட்கார்ந்து விட்டேன்.

திடீரென்று என்ன ஞாபகம் வந்ததோ ரீவியின் சுவிட்சைப் போட்டேன். ஏதோ ஒரு ஆங்கிலப் படத்தின் காட்சி தோன்றியது. எப்போதாவது ஒரு தடவை அதிர்ஷ்டவசமாக ரீவியில் வரும் நல்ல படங்களில் ஒன்றாக அது இருந்திருக்க வேண்டும். அப்படியே அதில் லயித்துப் போனேன். படம் முடிந்த போதுதான் உடுப்பே மாற்றாமல் இருந்தது ஞாபகத்திற்கு வந்தது. எழுந்து போய் உடுப்பை மாற்றிய போதுதான் பார்த்தேன். பிள்ளைகள் இருவரும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் எப்போது உடுப்பு மாற்றினார்கள், எப்போது சாப்பிட்டார்கள், எப்போது தூங்கினார்கள் என்பது எனக்குத் தெரியாமலே இருந்திருக்கிறது. அவ்வளவுக்கு அந்தப் படத்தில் ஒன்றிப்போய்விட்டேன். என்ன படம் என்றே தெரியாத ஒரு படத்தில் அப்படியே ஒன்றிப் போய்விட்டதை நினைக்க ஆச்சரியமாக இருந்தது.

இவள் அடுப்படியில் வேலையாக இருந்தாள்.

'என்னப்பா செய்கிறாய்... நான் அப்படியே படத்திலேயே மூழ்கிப் போய் இருந்திட்டன்' என்றேன்.

'உங்களுக்கென்ன... வந்து இருந்து படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தியள்... எங்களுக்கு அப்படி ஏலுமா? எங்களுக்குத்தானே வேலை...'

இந்தப் பதில் எனக்குப் பிடிக்கவில்லை. வழமையான குத்தல்... போதாததற்கு 'எங்களுக்கு' என்று பன்மைப்படுத்தி வேலை செய்கிறாள்... இதற்கு என்ன அர்த்தம்... நான் என்ன வேண்டுமென்றே வேலையை இவளில் பொறித்துவிட்டா இருந்தேன்...?

ஏன் என்னைக் கூப்பிட்டிருக்கலாம்தானே என்று கேட்டேன் நான். பார்த்த படம் பற்றி இவளுக்கும்சொல்ல வேணும் என்ற ஆரம்பத்திலிருந்த சந்தோசமான மூட் பறந்து விட்டது. பதிலாக, என்னை நியாயப்படுத்துகிற அவசியம் எனக்கு.

'ஏன் கூப்பிடோணும்... நீங்கள் படம் பார்த்துக் கொண்டிருக்கிறியள்.... எங்கடை வேலை எங்களுக்கு... அதை நான் செய்தன்.'

திரும்பவும் 'எங்கட வேலை' என்று பன்மையில். எனக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. பெண் விடுதலை, பெண் சமத்துவம் பற்றி பேசுகிறவன் நான் என்பதால் எனக்கு அடிப்பதற்காக இவள் இப்படிக் குத்துகிறாள்... இல்லாவிட்டால் இப்படி பன்மைப்படுத்தத் தேவையில்லையே...

'ஏன் உப்படிக் கதைக்கிறாய்... ஏதாவது வேலையிருந்தால் எனக்குச் சொல்லியிருக்கலாம் தானே... நான் வந்திருப்பன்தானே....'

பதிலுக்கு இவள் சிரித்தாள். இது என்ன நக்கல் சிரிப்பா சும்மா சிரிப்பா என்று புரியவில்லை. கேட்டேன்.

'என்ன சிரிக்கிறாய்?'

'சிரிக்காமல் பின்னை என்ன?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாங்கள் இரண்டு பேருமாத்தானே பிள்ளையளோடை வந்தனாங்கள். பிள்ளையள் சாட்பிடேல்லை எண்டு உங்களுக்குத் தெரியும்தானே. லேற்றா வேறை போச்சுது அவையளுக்குச் சாப்பாடு குடுக்கோணும்., படுக்க வைக்கோணும்... வீட்டிலை என்ன சாப்பாடு இருக்குது... காணுமோ இல்லாட்டி சமைக்கோணுமோ எண்டு ஒரு யோசனை உங்களுக்கு வரேலைத்தானே!'

கேள்வி சாதாரணமாகத்தான் வந்தது. ஆனாலும், நெஞ்சைக் குத்திக் கிழிக்கிற கேள்வி. என்னை ஒரு கணத்தில் குற்றவாளியாக்கி விடுகிற கேள்வி. நான் என்னைப் பாதுகாக்க முடியாமல் தடுமாறினேன்...

'நான் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்ததிலை இருந்திட்டன்...' என்ற எனது இழுப்புக்கு அவளது பதில் சட்டென்று வந்தது. 'நானும் பார்த்துக் கொண்டிருந்தா தெரிஞ்சிருக்கும் என்ன நடந்திருக்குமெண்டு.'

எனக்குப் பேச முடியவில்லை. நான் மௌனமானேன். பிறகு இருவருமாகச் சாப்பிட்டு விட்டுபடுக்கும் வரை எனக்கு எதுவும் பேச முடியவில்லை. என்ன இருந்தாலும் இவள் இப்படி என்னைக் குத்தியிருக்கக் கூடாது என்று மனம் அங்கலாய்த்தது. மௌனமாகப் படுத்திருந்தேன்.

'என்ன.... ஏறிட்டுதோ' என்று கேட்டாள் இவள்.

'இல்லை... பின்னை என்ன... என்னைக் கூப்பிட்டிருக்கலாம் தானே... கூப்பிடாமல் இருந்திட்டு இப்ப குறைபிடிச்சால் பின்னை ஏறாதா என்ன?

'நான் வேண்டாம் என்றுதான் விட்டனான். பாவம் ஆசையாய்ப் பார்க்கிறியள். பார்க்கட்டன் எண்டிட்டு நான் வேலையளைச் செய்தன்... ஆனால் நீங்கள் ஒருக்கா என்னைக் கூப்பிட்டு இஞ்சை இந்தப் படத்தைப் பார் எண்டு கேட்கேல்லைத்தானே?'

'நான் இந்த உலகத்திலை இல்லை. அவ்வளவு நல்ல படம்...'

'தெரியும். அதுதான் நான் பேசாமல் இருந்தனான்... ஆனால் இப்படி ஒவ்வொரு நாளும் வீட்டுவேலை அதுவும் சமைக்கிறது மாதிரி வேலையளை நானே செய்யிறதை எனக்கு சகிக்க முடியேல்லை. அப்படிச் செய்யேக்கை உங்களிலைதான் எனக்குக் கோபம் வருது. நானும் படிச்சனான்தானே. வேலையும் பார்க்கிறன். ஏன் நான் மட்டும் இந்த வேலையளை தனியா முறிபோணும்... எனக்கும் உங்களைப்



போல படம் பார்க்க வேணுமெண்டு ஆசையில்லையா...'

எனக்கு இவள் சொல்லுவது புரிந்தது. அதிலுள்ள நியாயங்களும் புரிந்தன. ஆனால்... ஆனால்... ஏனோ அதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாதது போல ஒரு நெருடல்... ஏன்... ஏன் எனக்கு அப்படித் தோன்றுகிறது...? ஒரு வேளை இவள் என்னை ஒரு வேற்று ஆளை விமர்சிப்பது போல விமர்சிப்பதுதான் இதற்குக் காரணமாக இருக்குமா? எனது மனதில் இந்த எரிச்சல் உணர்வு எழுவதற்குக் காரணம் என்ன...? உண்மை, எனக்கு இவளைப் போல வீட்டு விசயங்களில், வேலைகளில் இயல்பாகவே ஈடுபடும் உணர்வு அல்லது யோசனை வருவதில்லைதான். அது எனது பழக்க தோஷமாகவும் இருக்கலாம்.... நானும் முடிந்தளவு முயன்று முயன்று பார்க்கின்றேன். ஆனால் நான் எவ்வளவுதான் செய்தாலும், நான் இவள் இல்லையே, இவளைப் போலவே சிந்திக்கவும், செயற்படவும்... இது ஏன் இவளுக்குப் புரியமாட்டேன் என்கிறது? என்னுடன் ஏன் இவளால் இப்படிப் பேசிச் செய்ய முடியாமல் இருக்கிறது? எதற்காக ஒரு எதிராளியை விமர்சிப்பது போல் கூரான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து என்னைக் குத்தவேண்டும்?

'ஆனால் நான் மற்றவங்கள் போலையா? எவ்வளவு உதவி செய்யிறன் உனக்கு...'

அவள் எனது வசனத்தையே தனக்கு வாய்ப்பாகப் பிடித்துக் கொண்டாள். 'ஓமோம் செய்யிறனீங்கள்தான். ஆனால் உதவிதானே. நீங்களே சொல்லிறியள் உதவி எண்டு. ஆனால் வேலை என்றதானே... இந்த வேலையள் என்ர வேலையாக இருக்கிறதுதான் எனக்குப் பிடிக்கேல்லை... உங்களுக்கு உதவி செய்யிற சந்தோசம் பெருமை எல்லாம் இருக்கு... விரும்பினால், அல்லது நான் கேட்டால் செய்யலாம். செய்யாமல் விட்டால் ஒன்டுமில்லை. ஏனென்டால், அது உங்கடை வேலை இல்லை.'

திரும்பவும் முகத்திலடிக்கப் பட்ட உணர்வு. எதையுமே பேச முடியாமல் எனது நாக்கைக் கட்டிப் போட்டுவிட்ட வார்த்தைகள். சாதாரணமாக, மிகச் சாதாரணமாக அவளது வாயிலிருந்து பறந்து வந்து என்னைத் தாக்கின. மிகவும் இயல்பாக எந்தவிதமான சலனமுமின்றி அவள் இவற்றைச் சொன்ன வேகத்தில் நான் என்னைத் திடீரென சிறுத்துப் போனவனாக உணர்ந்தேன். அவள் கம்பீரமாக என்னை நோக்கிப் பார்ப்பது போலவும், நான் குற்ற உணர்வு காரணமாக ஒடுங்கி என் ஆளுமையை இழந்து குறுகிப் போனதாகவும் உணர்ந்தேன். அடுத்து நான் என்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரே வழிதான் இருந்தது. எனது சமூக அதிகாரத்தை அல்லது மாமிசப் பலத்தை கூட்டுக்கு அழைத்துக்கொண்டு 'பொத்துவாய்... தலைக்கு மேலை ஏறாதை... நான் இப்படித்தான் இருப்பன்...' என்று இப்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதையாவது சொல்லி இவளை அடக்கிவிட்டு நான் வென்று விட்டதாகப் பெருமிதப்படலாம்... ஆனால்... ஆனால்... அது உண்மையாக... நியாயமாக இருக்குமா? எனது மனச்சாட்சிக்கு என்னால் பதில் சொல்ல முடியுமா... ஒரு அடிபட்ட நாய் போல எனது மனது அழுதது. நான் மௌனமானேன்.

இதற்குப் பிறகு நான் பேசவில்லை. மௌனமாகப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டேன். அவள் என் அருகே நகர்ந்து ஒட்டிக் கொண்டாள்.

அவளது உடலினதும் கூந்தலினதும் மெல்லிய மணம் என் நாசித்துவாரத்தினூடு சென்று மனமெங்கும் வியாபித்தது. கனத்த மனது மெல்லக் கரைவது போன்ற ஓர் உணர்வு. கையை எடுத்து அணைத்துக் கொண்டேன். ஆயினும் மனதில் ஒரு மூலையில் அந்தக் கேள்வி திரும்பவும் எழுந்தது. 'ஏன்.. ஏன்? இவ்வளவு தெரிகிற இவளுக்கு ஏன் என்னைப் பற்றிப் புரிந்துகொள்ள முடியவில்லை...? என்னை வேலை செய்து தரும்படி கேட்டால் என்ன குறைந்து விடப்போகிறது இவளுக்கு? ஏன் இப்படி ஓர் அன்னியனுடன் நடந்து கொள்வதைப் போல என்னிடமும் எதையும் கேட்காமலே, தானே செய்ய வேண்டும்... இது ஒருவகை குரூரமான பழிவாங்கும் உணர்வில்லையா? சும்மாவே இவளுக்கு என்மீது எரிச்சல் வருகிறதோ..? என்னைப் பார்த்தாலே நான் எதையும் செய்யாத ஒரு சோம்பேறி என்று இவளுக்குத் தோன்றுகின்றதோ என்னவோ? நான் எந்த வேலையை இந்த வீட்டில் செய்யவில்லை. உடுப்புத் தோய்க்கவில்லையா? இவளுடன் வேலைகளில் நானும் பங்கெடுத்துக் கொள்வதில்லையா... இதெல்லாம் ஏன் இவளுக்குத் தெரியவில்லை. குடும்பத்திற்கான எனது உழைப்பு இப்படி அங்கீகரிக்கப்படாமல் போவது ஏன்? எனது செயல்கள் குறித்து இவளிடம் ஒரு இளக்கரமான உணர்வு ஏற்பட்டிருக்கிறதா? அப்படியென்றால் அதற்குக் காரணம் என்ன? ஒருவேளை என்னைப் பிடிக்காமல் போய்விட்டதா? இல்லையென்றால் அடிக்கடி என்மீது எரிந்து விழுவதற்குக் காரணம் என்ன...

எப்போது தூங்கினேன் என்று ஞாபகம் இல்லை. ஏதோ களேபரமாக இருப்பது போன்ற உணர்வில் திடுக்கிட்டு கண்விழித்து எழுந்த போது முற்றாக விடிந்துவிட்டிருந்தது. இவள் பாத்ரூமில் குளித்துக் கொண்டிருந்தாள். குழந்தைகள் குளித்துவிட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். பிள்ளைகளின் சாப்பாடு, எனது சாப்பாடு, மதியச் சாப்பாட்டுப் பார்சல், இவளது சாப்பாட்டுப் பார்சல் எல்லாமே தயாராக இருந்தன.

நாலு மணிக்கே எழுந்து எல்லாம் நடந்திருக்கு. என்னை எழுப்பவில்லை. பெருந்தன்மையோடு எழுப்பாமல் விட்டது போல விட்டிட்டு எல்லாம் செய்திருக்கிறாள். அப்பதான் குறைபிடிக்கலாம். என்ன அழுத்தம் இவளுக்கு. எரிச்சல் எரிச்சலாக வந்தது மீண்டும். மௌனமாக எழுந்து குளியலறையை நோக்கி நடந்தேன்.

குளித்து விட்டு வந்து உடுப்பு மாற்றும் போது இவளிடம் கேட்டேன்.

'என்னை எழுப்பியிருக்கலாம் தானே.'

சும்மா போங்கோ.. ஆம்பிளையளே இப்படித்தான். எல்லாம் பேச்சுக்குத்தான்.... ஏன் நான் எழுப்போணும்? எவ்வளவு நேரமாக அலாம் அடிச்சுது. நீங்கள் எழும்பேல்லையே...'

பேசிக் கொண்டே அவள் வேலைக்குப் புறப்படத் தயாரானாள். குரலில் அவ்வளவு கோபம் இல்லை. ஒரு வகை அசட்டைதான் இருந்தது. கோபத்தைக் கூடச் சகிக்கலாம். இந்த அசட்டைதான் இன்னும் அதிகமாக என்னைத் தாக்கியது. இது என்னை அவமதித்தது. சீ.... என்ன நரகம் இது.... எந்த நேரமும் ஒரு வகை ஆற்றாமைக் குமுறல் மனதுக்குள் புகைந்தது. ஒவ்வொரு கணமும், இந்த மாதிரி விடயங்களை இவளிடம் பேச நினைக்கின்ற ஒவ்வொரு கணமும், ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டது போன்ற உணர்வுடன் மனதைக் குறுக்கிக் கொண்டு... சகஜமாகவும், இயல்பாகவும் பழக முடியாமல்... அவஸ்த்தைப் படுகிறதாய்.. நெஞ்சு முட்டி விடுகிற மாதிரி நெஞ்சில் அழுத்தம் பாய...

இந்த நரக வாழ்க்கை எத்தனை நாளைக்குத் தொடரப் போகிறது.. இப்படி எனது மனச்சாட்சியைக் குத்திக் குத்தி ரணமாக்கியபடியே வாழ்க்கையை எவ்வளவு காலத்துக்குத்தான் ஓட்ட முடியும்.. மற்றவர்கள் எல்லாம் எவ்வளவு சந்தோசமாகவும், இயல்பாகவும் இருக்கிறார்கள்... இத்தனைக்கும் அவர்கள் குசினிப்பக்கமே போயிருக்க மாட்டார்கள்...

என்னை அறியாமலேயே ஒரு நீண்ட பெருமூச்சு வந்தது.

இவள் திடுக்கிட்டு எழுந்தவள் போல எழுந்தாள்... 'என்னப்பா இன்னும் நீங்கள் நித்திரை கொள்ள யில்லையே...'

நான் ஒரு பதிலும் சொல்லவில்லை. எழுந்து லைட்டைப் போட்டாள். 'அலாம் வைக்க மறந்திட்டன்' என்றபடி மணிக்கூட்டை எடுத்து செற் பண்ணினாள். நேரத்தைப் பார்த்தேன். 12 மணி ஆகிவிட்டது. அவள் மணிக்கூட்டை வைன்ட் குடுத்து செற்பண்ணினாள்.

'எத்தனை மணிக்கு வைக்கிறாய்?'

'நாலரைக்கு'

'நாலரைக்கோ... இப்பவே பன்னிரண்டு மணி.. எவ்வளவு நேரம் படுக்கப் போறாய்...'

'என்ன செய்ய அப்ப'

'வேண்டாம். அலாமை நிப்பாட்டு. நாளைக்கு கடையில சாப்பாடு எடுப்பம்'

இவள் சிரித்துக் கொண்டே மணிக்கூட்டை தலைமாட்டில் வைத்தாள். எட்டி லைட்டை அணைத்துவிட்டு சரிந்து படுத்துக் கொண்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'என்ன நான் சொல்லுறன். நீ சிரிக்கிறாய்....'

எனது குரலில் சற்று சூடேறியிருந்தது.

'எத்தனை நாளைக்கு கடையில எடுக்கப் போறியள்'

'நாளைக்கு மட்டும்'

'நாளையன்டைக்கு'

'சமைப்பம்... வேளைக்குப் படுத்திட்டு எழும்பி....'

'ஆர்?'

'நாங்கள்தான் ரண்டு பேருமா?'

'படுங்கோ எனக்கு நித்திரை வருது....' உரையாடலை இந்த அளவில் முடித்துவிட்டு திரும்பப் படுத்துக் கொண்டாள் இவள்.

அதேவிதமான பதில் திரும்பவும்... எனக்குப் பற்றிக் கொண்டு வருவது போல நெஞ்சில் கொதிப்பு எழுந்தது. என்ன அலட்சியம்.. என்னைப்பற்றி தான் வைத்திருக்கும் அபிப்பிராயத்தை முகத்தில் அடித்தால் போல் சொல்லிவிட்டு படுத்து விட்டாள். அந்த அபிப்பிராயம்தான் எவ்வளவு மோசமானது...? ஒரு குடிகாரன் குடிக்க மாட்டேன் என்று சத்தியம் செய்யும் போது அவனைப் பார்த்து அருவருக்கிறோமே அப்படி ஒரு அருவருப்பான அபிப்பிராயம் அல்லவா இது... நீயாவது செய்கிறதாவது என்ற இகழ்வான நினைப்பின் விளைவான அலட்சியமும், திரும்பிப் படுத்தலும் எனது ஆன்மாவின் உண்மைத் தன்மையை கொச்சைப் படுத்துவதாக... இழிவுபடுத்துவதாக... உடம்பு கொதிப்பேறி விட்டது போல, அரியண்டமாக இருந்தது. மேலே மின்விசிறி சுழன்று கொண்டிருந்த போதும் காற்று அடைக்கப்பட்ட அறைக்குள் இருந்து மூச்சுத் திணறுவது போல...

புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தேன். தூக்கம் பிடிப்பதாக இல்லை. சுற்றிச் சுற்றி... அதே நினைவுகள்... அதே கழிவிரக்கப்படும் மனாவஸ்த்தை. எழுந்து லைட்டைப் போட்டேன். இவள் ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். இவளால் எப்படி இவ்வளவு நிம்மதியாக, எந்த மனாவஸ்த்தையும் இன்றித் தூங்க முடிகிறது என்று நினைக்கையில், எரிச்சலாகவும் பொறாமையாகவும் இருந்தது. ஒரு சிகரட்டை எடுத்து பற்றவைத்துக் கொண்டு லைற்றை அணைத்துவிட்டு வெளியே வந்தேன். வானத்தில் பால்நிலா இன்னமும் பளிச்சென எரிந்து கொண்டிருந்தது. புகையை ஆழமாக இழுத்து நெஞ்சின் ஓரங்களில் அரித்துக் கொண்டிருக்கும் சுமையுடன் மோதவிடுவது போல அதை அடக்கி வைத்திருந்தேன். நிலவு ஒளி வீதியெங்கும் தவழ்ந்து வழிந்து ஓடுவது போல... எந்தவித பேதா பேதமற்று யாருடைய விருப்புக்கோ, வெறுப்புக்கோ செவிசாய்க்காமல், சமமாக அது ஒளியைப் பெய்து கொண்டிருந்தது... இந்த நிலவுக்குத்தான் புறக்கணிக்கப் படுகிறேன், அவமதிக்கப்படுகிறேன், தனது ஆத்மார்த்தமான உதவி புரிந்து கொள்ளப்படவில்லை என்று என்றாவது தோன்றியிருக்குமா...? அல்லது அல்லது அது அதையெல்லாம் பற்றி அக்கறைப்படாததாக இருக்கிறதா...?

வீதியில் சும்மா கால் போன போக்கில் நடந்தேன். மெல்லிய குளிர் காற்று உடம்புக்கு இதமாக இருந்தது. மனசை மெல்லத்தேற்றுவது போலத் தழுவியது... இவளது மனதில் என்ன உணர்வுகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன... ஆணும், பெண்ணும் சமம் என்றால், அதை ஏற்றுக் கொள்வதென்றால் ஏன் ஒரு பெண்ணைப் போல என்னால் சிந்திக்க முடியவில்லை என்று இவள் நினைக்கிறாள். இது எவ்வளவுக்குச் சாத்தியம்... வீட்டு வேலைகள் ஒரு சுமையாக இருப்பதால் இவளது இந்தக் கேள்வியில் நியாயம் இருக்கிறதுதான்... ஆனால்... ஆனால் ஒரு பெண்ணைப் போலவே ஆணால் சிந்திக்க முடியுமா..? ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் எந்த வேலைப்பாகுபாடுகளும் இல்லாமல் வந்தாலும் கூட இது சாத்தியமா? அப்படியான ஒரு சூழலில் குடும்பம் என்று ஒன்று இருக்குமா...? குடும்பம் என்ற மாதிரி இல்லாமல் ஒரு கூட்டு வாழ்வு இருக்குமா... இப்போது நான் வாழ்வதை குடும்பம் என்று சொல்லலாமா? மனம் விட்டுப் பேசி ஒரு வாரத்திற்கு மேலாகிறது... வெறும் காமச் சுகம் மட்டும்தான் எப்பவாவது எம்மை இணைக்கும் ஒரு பாலமாக இருக்கிறதா? மற்றெல்லா வேலைகளிலும் நான் இவளைப் பற்றியும் இவள் என்னைப் பற்றியும் ஒரு அன்னியப் பிறவியைப் போல் பார்த்துக் கொண்டு... ஒருவரை ஒருவர் விமர்சித்துக் கொண்டு... அல்லது எரிச்சல் பட்டுக் கொண்டு... குடும்பம் என்பதே ஒரு பொய்யான கருத்துருவம் தானா...

எனது நடை தடைப்பட்டது. அந்தக் கிழவியின் வீட்டின் முன்னால் இப்போது பலர் கூடியிருந்தார்கள். வெள்ளையாக ஒரு பனர் கூட கட்டப்பட்டிருந்தது... ஓ... சாவீடு... யாராக இருக்கும்... அவளாக அந்தக் கிழவியாக இருக்குமோ... ஒரு கணம் மனதில் திகில் எழுந்தது போல ஒரு உணர்வு. திரும்பி வீட்டிற்குப் போனேன். இவள் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தாள். தட்டி எழுப்பினேன்.

'என்னப்பா'

'இஞ்சை... அந்த தொங்கல் வீட்டிலை ஆரோ செத்துப் போச்சினம்...'

'ஓ... தெரியும்... அந்தக் கிழவிதான் செத்துப் போச்சுது... படுங்கோ, இதுக்கே எழுப்பினனிங்கள்'

'உனக்கு முதலே தெரியுமே'

திரும்பவும் கண்களை மூடியவளை உலுப்பிக் கேட்டேன்.

'ஓமப்பா.... படுங்கோ... கிழவி இரண்டு நாளா வருத்தமா இருந்ததாம் செத்துப் போச்சுது...' இவள் வாய் குழறியது. திரும்பவும் உறங்கி விட்டாள்.

ஏனோ எனக்கு அந்தக் கிழவியின் முகம் கண்முன் வந்து நின்றது... அவள் யார்... அவளுக்கு யார் யார் இருக்கிறார்கள்... என்ன வருத்தமாக இருக்கும்... தனியாகவா அந்த வீட்டில் இருந்தாள்... இராணுவத்தில் இருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு மகனைத் தவிர அவளுக்கு வேறு யாரும் இல்லையா?

திடீரென்று அந்தக் கிழவியின் முகத்தின் சுருக்கங்கள் நிமிர்ந்து இளமைத் தோற்றம் வந்தது போலவும் அவள் வீட்டுக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடப்பது போலவும் தெரிந்தது. மகனைப் பள்ளிக்கு அனுப்ப ஓடி ஓடி அலுவல்களைச் செய்வது போலவும்... பிறகு அவனை வேலைக்கு அனுப்ப என்று பறப்பது போலவும் அவள் அசைவுகள் தெரிந்தன. தலையை வாரக்கூட நேரமில்லாமல் முடியை அள்ளி முடிந்தபடி அவள் அவசர அவசரமாக உடுப்புத் துவைப்பதாகத் தெரிந்தது... இராணுவ சீருடையுடன் மகன் வடக்குக்குப் போவதற்காக வாகனத்தில் ஏறுவதை இவள் பார்த்துக் கொண்டு இருந்துவிட்டு அழுதபடி வீட்டுக்குள் போவதாகத் தெரிந்தது... அவளது முகத்தின் இடுக்கினுள்ளே தெரிந்த கண்களின் ஏக்கமும் துடிப்பும் இவளது கண்களைப் போல... இவளது கண்களாய்... ஓ... அவை இவளது கண்கள்தானா... ஏன் அவை இவ்வளவு பலஹீனமாகத் துடிக்கின்றன. ஏக்கமும், துயரமும் ரேகைகளாக எப்போது அங்கே படிந்தன... ஓ... இந்த முகம் இதுயார்... இது இவளா... கிழவியா? கண் துடிக்கிறதே... இறந்து போன கிழவியின் கண்கள் துடிக்க முடியுமா? படுத்திருக்கும் கிழவியின் கண்களை நெருங்கிப் பார்க்க முயல்கிறேன். அவை திடீரென்று என்னைக் குத்திட்டு வெறித்துப் நோக்குவதாய்... ஓ... இது இவள் கண்கள் தான்...

ஏனோ உடம்பெல்லாம் நடுங்குவது போல இருந்தது. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன்...

உடல் வியர்த்திருந்தது. வெளியே ஹோலில் லைட் எரிந்தது. கட்டிலை விட்டு எழுந்து வந்தேன். வெளியே எல்லாம் வழமைப்படி நடந்திருந்தன. மனைவி வேலைக்குப் போக தயாராகிக் கொண்டிருப்பது தெரிந்தது. எனது கனவுத் தாக்கத்தில் இருந்து நான் இன்னமும் முற்றாக விடுபடாமல் இருந்தேன். கிழ்வி பற்றி அறிய மனம் துடித்தது. இவளிடமே கேட்டேன்...

'அந்தக் கிழவிக்கு ஆர் இருக்கினம்'

'ஒருதரும் இல்லை... ஆமியிலை இருந்த ஒரேயொரு மகன் மட்டும்தான். அவனும் மூண்டு வருசத்துக்கு முதலே செத்துப் போனானாம்.'

'பாவம்' என்றேன் நான்.

'பாவம்தான்' சொல்லியபடியே இவள் கண்ணாடி முன் நின்றபடி தனது தலைமுடியை வாரத் தொடங்கினாள்.

'அவ்வளவுதானா?' என்று இருந்தது எனக்கு. ஆக, அந்தக் கிழவியின் வாழ்க்கை முடிந்து விட்டது. அவள் எப்படி எதைத்தான் ஒவ்வொரு மாலையும் வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருப்பாள்? அவளது நினைவுகளை யாருக்காவது சொல்லியிருப்பாளா? அல்லது அவையும் அவளுடனேயே அடக்கமாகி விட்டனவா? ஆக, இத்தனைகால வாழ்க்கைப் போராட்டம் ஏக்கம் எல்லாவற்றினதும், முடிவுதான் என்ன? அவள் வாழ்ந்தாளா? அவளது வாழ்வுக்கான அர்த்தத்தை அறிய முயன்று தோற்றுத்தான் போனாளா?

நான் குளித்துவிட்டு புறப்படத் தயாரான போது இவள் கேட்டாள்.

'எத்தனை மணிக்கு வருவியள்'

கிழவியின் நினைவுகளில் இருந்து இந்தக் கேள்வி என்னை இந்த உலகுக்கு இழுத்து வந்தது.

'ஐஞ்சரை ஆகும்... ஏன்?'

'இல்லை வீட்டுச் சாமானெல்லாம் முடிஞ்சுது... ஒருக்கா ரவுண் கடைக்குப் போகோணும்.'

'சரி'

'பெரியவளுக்கு ஒரு சோடி ஸ்கூலுக்குப் போடுகிற சப்பாத்தும் வாங்கோணும்...'

'சரி'

'ஹோலுக்கை போட்டிருக்கிற ஜன்னல் கேட்டின்களைப் பாத்தனிங்களே'

'ஏன்'

'எல்லாம் வெளிறிக் கிழிஞ்சு போய்க் கிடக்குது'

'ம்'

'அதுவும் வாங்கோணும்... இண்டைக்கு சம்பளத்தோடை வாங்கினால்தான்.'

'ம்'

'கொஞ்சம் வெள்ளணை வரேலாதே...'

'அதுக்கு முதல் வரேலாது... ஏன் நீ போய் வாங்கன்'

'நான் வாங்கிறதென்டால் ஏன் உங்களைக் கேக்கிறன் அவள் குரலில் சூடேறுகிறது.'

'நீ முதல்ல சொல்லியிருக்கலாம் தானே... இண்டைக்கு எனக்கு வேலை இருக்கிறது... அப்ப நாளையண்டைக்கு வாங்குவம்...'

'எப்ப முதல்லை சொல்லிறது... எப்ப நாங்கள் இருந்து கதைச்சனாங்கள் சொல்ல... நாளைக்கு வீட்டை ஆக்கள் வேறை வருகினம். ஒரு சாமானும் இல்லை...'

'ஆர்'

'ஆர் வேறை உங்கடை ஆக்கள் தான்'

இதற்கு மேல் நான் பேசவில்லை. இவளது பதில் திரும்பவும் என்னைத் தாக்கிவிட்டது. இனிப் பேசினால் காலை நேரத்துப் பொழுதே அரியண்டமாகிவிடும். மௌனமாகப் படியிறங்கி நடந்தேன்.

'என்ன வருவியளோ?'

இவள் தனது முடிவில் உறுதியாகத்தான் இருக்கிறாள் எதைச் செய்ய வேணுமோ அதைச் செய்வதில் – எவ்வளவு மோசமாக நடந்தாலும் சரி – அவள் உறுதிதான். நான் பதில் பேசாமல் நடந்தேன்.

அலுவலகத்தில் இருக்கும் போது காலை உரையாடல் மீண்டும் நினைவுக்கு வந்தது. வீட்டிலே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாமான்கள் இல்லை... எனது உறவினர்கள் வருகிறார்கள். வீட்டு ஹோல் கேட்டின்கள் வெளிறிக் கிழிந்திருக்கின்றன... ஓ... இவையெல்லாம் எனக்குத் தோன்றவே இல்லைதான்...

'ஆம்பிளங்களே உப்பிடித்தான். எல்லாம் கதைக்கத்தான்' என்கிற இவளது வார்த்தைகள் உண்மைதானோ...

நெஞ்சுக்குள் ஏதோ ஒரு குற்ற உணர்வும், இவள் மீதான ஒரு பரிதாப உணர்வும் எழுவது போல... பாவம் இவள் என்று தோன்றியது.

ஒரு 'Short Leave' போர்மை எடுத்து நிரப்பத் தொடங்கினேன்.

வீட்டுக்குப் போய் என்ன நடக்கப் போகுதோ? பின்னேரம் சந்தோசமாகக் கழியுமோ? திரும்பவும் அதே பிரச்சினைகள் எழுமோ... இது எனக்கு மட்டுமேயான ஒரு பிரச்சினையோ அல்லது என்னைப் போன்ற இக்காலத்து நாயகர்கள் எல்லோருக்கும் உள்ள பொதுவான பிரச்சினைதானோ... சாமான் வாங்கப் போகும் இடத்தில் இவள் ஏதாவது சொல்ல, நான் ஏதாவது சொல்ல...

'என்ன ஷோட் லீவ் போமோடை யோசினை? Wife ஓடை ஷொப்பிங் போகப் போறியளோ? பின்னேரம் போற சொப்பிங்கைப் பற்றி இப்பவே கனவு காணுகிறயள் போல'

கிண்டலடித்தான் என்னுடன் வேலை பார்க்கும் இன்னொருவன்.

'ஓமோம்...' சிரித்து மழுப்பியபடி போமில் கையெழுத்திட்டு விட்டு மனேஜரின் அறையை நோக்கி நடக்கிறேன்...

---

'சொற் சுழிக்குள்
உன்படகோட்டம்
எவ்வளவு சுதந்திரமாயிருந்தது.
சிருட்டித்த ஆகாயகங்கையில்
சிலர் முழுக
தலை நனையாமலே
நின்று போன மின்சாரத்திற்குத்
தவமிருக்கிறார் பலர்
பிரேந்திர......
ஆழ்கடலின்
அச்சமிடும் ஒலிகளுக்குள்
படகவிழ்ந்து விட்டேன்
ஏனிந்த
ஊளிப் பெருங்கூந்து?
சிறு துடுப்பின் வலிவு பற்றி
இதோ...... இதோ......
மரணத்தை நேசிக்க
கற்றுத் தந்தவன் நீ!'

**பிரேந்திர சட்டோபாத்யாய**
**[வங்காளக் கவிஞர்]**

**- ஆகர்ஷியா -**

உருப்போட்டு விட்டுப்
பேசினார்கள்
பேச்சுத் தெளிவுற்றதால்
அல்லது
தெளிவுற்றதையே பேசுவதால்
ஒரு எழுப்பம்
ஒரு அலட்சியம் நகைப்பு
எச்சில் துப்பல்போல
காலடியில் காய்கிறது
பேசு பொருள்
கீழ்க்கோடு பிரித்துப்
பாயுஞ் சூரியனும்
அறிவான்
விளிம்பில் நின்று
சூக்காட்டும்
வாழ்வு பள்ளிக் கூத்தாடும்
மரங்களிற்கல்லவே மரணம்
எப்போதும் போல
அப்பாவியாய்ச் செத்துப் போகும்
மேற்றிசையின் சூரியன்.


**- ஆகர்ஷியா -**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## சங்கமித்தல்

மரம் பிளந்து எவர்க்கும் கூடமைத்துக் கொடுக்கும்
எண்ணமில்லை இந்த மரங்கொத்திக்கு

மயிலின் குஞ்சுக்கும் குயிலின் குஞ்சுக்குமாக
அண்டவெளியில் ஆடவும் கூவவுமான
சுதந்திரத்திற்காய் பிரளயிக்கவே பிடிக்கும்

பிரபஞ்சத்தை பெயர்த்தெடுத்து நமது கூட்டுக்குள்
கொணர்ந்துவிடக் கூடுதில்லை ஆதலினால்;
கூட்டைப் பிய்த்து எறிந்துவிட்டு
பிரபஞ்சத்தையே கூடாகக் கொள்ளும்
பேராசையுமுண்டு மரங்கொத்திக்கு

பேடுகள் என்ன கூறுமோ?
என்னோடு கூடவரக் கூடுமோ?
இல்லை கூறு போடக் கோருமோ?

~ பசீர் ~



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போட்டியின் எதிராளியின் சிரம்பளிரல்

ஏ.எல். ஹஸீன்

மூத்தமிட்டுப் பிரியும் போர் வீரனின் காதலியின் துயரமும், புகையிரதத்தில் புறப்பட்ட காதலனின் மலர்ச் செண்டை வாங்க முடியமல் போன காதலியினைக் கொண்டதுமான புகைப்படங்கள் இருந்த மிகப் பிரகாசமான இரண்டு வாடகை வீடுகளை இழந்ததற்கான சோகம் வியாபித்ததை விடவும் இலகுவானதோ? "உயர் வளர்ச்சி பெற்ற ஞானிகளின் தனிவகை ஆற்றல் நிலையம்" சோடை போனது. வாடகை வீடுகளை இழந்த சோகங்களை மேலாடிவிட்ட சோகங்களை உடையதான பச்சைக்கண் பூனையை இழந்த சோகம் பற்றி உபைத் காக்காவைத் தவிர வேறு யாரும் அறிய மாட்டார்கள்.

நலிந்த பாதங்களையும், அழுக்குப் பிடித்த மூக்கையும் உடைய பச்சைக்கண் பூனை உபைத் காக்கா இல்லாத போது அந்த வீட்டைவிட்டு போகாததுதான் ஆச்சரியம். நான் சாப்பிட்டுவிட்டு வரும் போது அதற்கேதாவது கொண்டுவர நினைத்தால் சொற்பமாகப் பூனைக்கு என்று கேட்பதிலுள்ள சங்கடம் காரணமாய் எடுத்து வருவதில்லை. செப்டம்பரில் ஊருக்கு வந்தவர் மிக அரிதாகவே ஊரை விட்டு செல்லும் வாய்ப்பு இருந்தது உபைத் காக்காவுக்கு. அப்போதெல்லாம் பச்சைக் கண் பூனையின் எக்கல் விழுந்த விலா எலும்புகள் மூடப்பட்டு தாடைகள் விரியப் பட்டு தாவி மரத்தில் ஏறுவதற்கு தொந்தியும் சிரமப்பட வைத்துக் கொண்டது.

நான் இனி யாருக்கும் அச்சம் கவிதைபற்றி எழுதப் போவதில்லை என்றிருந்த போதே அச்சப்படுத்தக்கூடிய தனது பச்சைக் கண்களையும், கரிய உரோம மேனியையும் சுமந்து வந்தது. அதன் பின்னங்கால்கள் சோர்ந்திராத போதும் அதன் முன்னங்கால்களை நகர்த்த சோம்பல் பட்டுக் கொண்டிருந்தது. தனித்திருக்கும் போது கேடிப் பெண்ணைப் போல் அல்லது வசீகரமிக்க ஆணின் பார்வை போல் எனது கண்களை பார்த்துக் கொள்ளும்.

சருகு நீந்திவிழும் மதியம் புறப்படும் போது அதன் ஏக்கமும் மெல்லனப் பனியிருக்கும் காலை வரும் போது அதன் மகிழ்ச்சி பற்றியும் மெதுவாகப் பேச ஆரம்பித்தார் உபைத் காக்கா.

பூக்களை கம்புகளால் உடைத்தெறியும் சிறுவர்களை விரட்டும் பக்கத்து வீட்டு பையனின் அமைதியான சூழல் அந்தப் பூனையை விளையாட நாடியபோதெல்லாம் பச்சைக்கண் பூனை மிக எளிதாகவே உதாசீனம் செய்தது.

ஆனால் அது மெலிந்து போகும் காலம் அடுத்த வருடம் மார்ச் மாதம் ஆரம்பமானது. பொருளீட்டம் காரணமாகவும் தனி அலகு கேட்போரின் குதிகால்களை வரிசைப்படுத்துவோரின் தோள்களை இணைப்பதற்காகவும், நூற்றாண்டுகளுக்கு முன் ஊரிலிருந்த மர வள்ளிச்சேனைகளையும் வெள்ளைமணல தெருக்களையும் அதில் குந்தியிருந்து அளவலாவும் மனிதர்களை பேசக்கூடிய கலை நன்பணைத் தேடியும், தனது சமூகத்தில் வாழ்க்கை முறைபற்றி உள்வாங்கிய இதயத்திலிருந்து பிரச்சினைகளை முன்வைக்கின்றதன் மூலம் இன்னோர் இதயத்தை அதிரச் செய்பவர், பிரபஞ்ச ஞானமும் அனுபவங்களும் வாழ்வின் சீர்மையில் பீறிட்டு வழிகிறவர் வாழ்க்கைக்கும் கொள்கைக்கு மிடையிலான போராட்டத்தில் வெற்றியீட்டிய பலரின் உழைப்பிற்குப் பின்னாலுள்ள பலதரப்பட்ட தீட்சண்யங்களை சகல சிறப்புகளுடன் அணிவகுத்து, மரணம் சூழ்ந்த வாழ்வின் உணர்வுகள் சாகடிக்கப்படாமல் உரிமைகளுக்காக நகர்ந்து கொண்டிருக்கும் தலைவனைத்தேடிப் புறப்பட்டதால் பூனை உணவுக்கு சிரமப்பட்டது. சோம்பியிருந்து உணவு தேடாமல் மெலிந்தே போயிற்று. பக்கத்து வீட்டுச் சிறுவன் சற்று அன்னமிடக் கூடியவனாக இருந்த போதும் ஈன இரக்கமற்ற தூசிப்புழுதி படிந்த கணித மூளையை உடைய அவன் தந்தை அதற்கு விட்டதில்லை. தந்தைக்குத் தெரியாமல் சிறுவன் அன்னமிட்டுக் கொண்டிருந்த ஒரு வெள்ளிக்கிழமை மதியம்

"காற்றில் கரையப் பாடுகிறேன்
உயிர் அலையையும் தாண்டி
பற்றுக்கள் கைவிரிக்கும்
பாசங்கள் ஏமாற்றும்
புதையுண்ட இவ்வாழ்வில்
காற்றில் கரையப்பாடுகிறேன்
உயிர் அலையையும் தாண்டி
என் உள்ளும் வெளியும்
ஒளிரும் நேர்வைத் தேடி
காற்றின் ஓரம்

அருளோ ஞானத்தில் பாதி
பல்திசை ஒரு கூர்மை
நோக்கிச் செல்லல் மீதிக்குப் போதும்"

என்று மோட்சம் பற்றி பாடிப் புலம்பியபடி வந்த தடித்த புருவங்களை உடைய மூதாட்டி பூனையைக் கண்டதும் அதிர்ந்து போனாள். "காதகப் பார்வை உடைய உயிர்கள்பற்றி அறிந்த பின்னும் இக்கருவுடலை விட்டு வைத்ததும், பல்லனின் சூழ்ச்சியில் ஞானி என்று சிக்குண்டு கிடப்பதும் குற்றம்." என்றாள்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மீண்டும் பூனையின் பச்சைக்கண்களை பார்த்துக் கொண்டு என் கைரேகையை வருடிக் கொண்டு சிறிது தொலைவில் பனி மூட்டத்தில் பிரகாசிக்கும் வாழ்வு பற்றி ஆருடம் பாடினாள். புறப்பட்டாள். அத்தர் வாடையும், துர்நாற்றமும் கலந்த



அவள் மேனி இருந்த இடைவெளி அவள் நினைவுகளை இதழ் விரித்தது. பூனையின் பச்சைக் கண் பார்வைகளோ ஆத்மாவில் அவளுக்கிருக்கும் இடைவெளிகளை திரும்பத் திரும்ப வெளிப்படுத்தியது.

புறப்படுவதற்கான தருணம் வருவது பற்றி நாமறிவதற்கு முன்னே பூனை புறப்பட்டது பற்றி உபைத் காக்கா மிக வருத்தம் தோய்ந்த தொனியில்

"உன்
மெல்லிய சீரான காலடி ஓசைகள்
கழற்றி வைத்த ஞாபகங்களை
அதிரச் செய்கிறது
அப்பாவித் தனத்தோடு விடப்பட்ட
அவ்விடைவெளிகள்
மௌனத்தைச் சிதைக்கும்
அன்பைத் தட்டியெழுப்பும்"

என்று கூறினார்.

மின் கம்பத்தில் சலசலத்து வடியும் நீரோட்டம் உள்ள ஒரு பகுதி மாத்திரமே எங்கிருந்தோ வந்த வெளிச்சத்தில் ஜன்னலூடே தெரியும் அவ்விரவில்; வீட்டிலிருந்த சமான்களெல்லாம் மூட்டை கட்டி அனுப்பப் பட்டது. கட்டில் இருந்த உள்வீட்டு மூலையை பார்த்ததும் தேனீர்ச் சாலையிலிருந்து உறக்கத்தில் கேட்கும் மிக அதிகாலை இஸ்லாமிய கீதம் வாழ்வில் தொலைந்து போன ஒரு நிகழ்வானது.

எஞ்சிய காகிதங்களை விரித்தமர்ந்து ஊர் பஜனைப் பாடல்களுக்கு சிறந்த மெட்டுப் பாடல்கள் எதுவென்று அலசிப் பாடிக் கொண்டிருந்தார்கள். பாடலின் நிறுத்தம் ஒன்றில் கொதிபிடித்த தோழர் "இந்த இடம் எழுதப்பட வேண்டியது" என்று சொல்லி தனது நரை தெளித்த நெற்றி மயிரை கோதிக்கொண்டார். மூதாட்டியின பல்லன் சொண்டை நீட்டி ஆமோதித்துக் கொண்டார்.

நான் பூனை பற்றி யாருமே எழுதப் போவதில்லை என்று துடிதுடித்துப் போனேன். எழும்பிய போது நான் உட்கார்ந்திருந்த காகிதம் ஒதுங்கிய மூலையில் ஒரு கரித்துண்டைக்கண்டேன். எரியும் விழிகளில் நடுங்கும் ஆழத்தில் பூனையின் இடை சரியும் முகநடன வழியில் காற்றில் பூத்த சொற்களை மெல்லிய பிரகாசத்தில் வீட்டின் பின் சுவரில் கரித்துண்டால் எழுதலானேன்.

நான் பிரிவதற்கு முன்னாலே
நீ பிரிந்தது
குரூரமான மகிழ்ச்சியை உண்டாக்கிற்று.

இரண்டு மௌனங்களுக்கிடையில்
சிறிது புழுதி இருந்தாலும்
முகத்தை அழுத்துக் கொள்ளலாம்
போலில்லையா?

தொடர்ந்திருந்தோம்
எல்லாமெதற்காக.....?

எதற்காக உன்னை பழி சொல்ல வேண்டும்..?
உள்ளுக்கு பூத்துக்குலுங்கி கிடந்த
தெல்லாம் நான்தானே.....

நிலவில் துவட்டிய
பனியின் வாசமிகு
தொனியில் கேட்கிறேன்
.....எல்லாவற்றிற்கும் காரணம்
நான்தானே?

எட்டாத வரிகளை மனசால் போட்டு நிரப்பும் காற்றில் கலந்து வந்த இனிக்கும் மெட்டின் லயமாகவேனும் அதன் முள்முனை விழிச்சிறகு பற்றி சில உயிரோட்டமான வரிகளை கூரிய துளிகளாய் பதித்துச் செல்வது மழை கழுவிய அந்த ஈரச்சுவரில் இனிமையானது.

**1999 ஜனவரி**

## ஊமைக் காவியம்

மௌன மயானத்தில்
உணர்வு புதைக்கப்பட்ட
நேரம்..
தோல்வி
தோள் குலுக்கிக்கொண்டது!

யௌவனம் தளர்ந்து
சுட்ட நீராய்
ஒரு துளி..
இமையினைப் பொத்துக்
கொண்டு,
பூமியைத் தொட்டது!

கிளிசலாகிக் கிடக்கிற
ஆத்மாவை -
குரூரமாய் தைக்கும்
என் -
ரத்த பந்தங்களின்
பிடிவாதப் பிடியில்
அவதிப்பட்டும்...
சுயநலமாய்
தகனமிடப்பட்ட - என்
நெடுங்காலச்
சொப்பனத்தில்
உஷ்ண சூட்டினால்
உருகி... உருகி...
மனசு உயிர் வாழ்கிறது!

என் - உலகமே
துயர்களைத் தாங்கிய
பாலைவனம்....!
வாழத் துடிக்கும் நானோ -
விடியலை விழுங்கிய
மலட்டு இரவு போல்
மௌனமாய்
மல்லுக்கட்டுகிறேன்...!

- அனார் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கோழி முந்தியா? முட்டை முந்தியா?


கவிஞர் ஏ.இக்பால்

உலகம்
இரண்டு கோஷங்கள் எழுப்பிய காலத்தில்
இருபிரிவாய் நின்றது தெரியும்!

'வீட்டோ' ரத்ததிகாரம்
வினைமிகு திறமையால் ஓங்கி
வலது சாரிகள் பணபலம்
இடதுசாரிகள் பணபலம்
உலகமெங்கும் உலவித்திரிந்தன!
இரண்டு துாண்டில்களில்
தொங்கிய இரைகளை
திரண்ட கொத்திக் கொழுத்தன நாடுகள்
திரண்டு நாடுகள் மூன்றாம் உலகமாய்
மாறின: முகிழ்ந்தன:
இரைகள் உன்போர் இதில் கொதித்தனர்!
இரண்டு பக்கம் இரைதேட
இதுதான் வசதி!

இடதுசாரி உலகம்
இருந்த இடம் தெரியவில்லை!
வலதுசாரி உலகம்
வலை பின்னலில் இன்றுமுளது!
இரண்டுலகமும் சேர்ந்து பின்னிய
கருவில் விளைந்ததே
பயங்கர வாதம்!
இனமதப் பிரிவுகள்!

யுத்தம் இன்னோர் சாரார்க்கு
யுக்தியான வருவாய் கொடுத்தது!
அகதிகள் பிரச்சினை
பாலியல் வல்லுறவு
இனச்சங்காரம்
பேரின எழுச்சி இப்
பின்னணி இலக்கியம்
அரச சார்பற்ற
ஒழுங்கமைப்புகளுக்கு
வாய்க்கரிசி போட்டன!
கோழி முந்தியா? முட்டை முந்தியா?
சிக்கெடுங்கள் பார்ப்போம்!



## அவன் கொன்ற மனிதன்

ஆனால்-
அவனும் நானும் எங்காவது
ஒரு பழைய மதுக் கடையில் சந்தித்திருந்தால்
நாம் இருவருமாக அமர்ந்து
பல தடவை தொண்டையை நனைக்க
மது அருந்தியிருப்போம்.

ஆனால் நாமோ-
ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து முறைத்த போது
காலாட் படையினராகக் போர்க்களத்தில்
இருந்தோம்!
அவன் என்னை நோக்கிச் சுட்டது போலவே
நான் அவனைச் சுட்டேன்.
அவனைச் சுட்டு அவ்விடத்திலேயே கொன்றேன்.

நான் அவனைச் சுட்டுச் சாகடித்தேன்
ஏனெனில் அவன் என் எதிரி
ஆமாம் அப்படித்தான்.
அவன் என் எதிரி, ஓமோம், நிச்சயமாக
அவன் என் எதிரிதான்
தெளிவெனக்(கு) உண்டதில், தாராளமாக.

ஏதோ சந்தர்ப்ப விளைவாய்
என்னைப் போலவே அவனும்
வேலையின்மையின் விளிம்பில்
இருந்த உடைமைகளை விற்ற நிலையில்
படையில் சேரத் தன் பெயரைக் கொடுத்தான்
வேறு காரணம் இதற்கு இருந்ததாய் இல்லை.

அர்த்தமற்றது இந்த யுத்தம்!
யுத்தக் களத்தில் கொல்லும் ஒருவனை
எங்காவது ஒரு மதுக்கடையில் சந்தித்திருந்தால்
ஒரு சிறு செலவில் அவனை
மது அருந்த அழைத்து
உபசரித்திருப்பேன்!

தோமஸ் ஹாடி
தமிழில் : மு.பொன்னம்பலம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






இதழ் 05 பார்க்கக் கிடைத்தது. மகிழ்ச்சி. முதல், இரண்டாவது இதழ்கள் கிடைத்தால் மிக உதவியும் நன்றும். தவிர, இங்கே பலரும் கிடைக்கும் இதழ்களை ஆர்வமுடன் படிப்பதால் அது மிக்க பயனையும் அறிமுகத்தையும் தருகிறது. இந்தப் பிரதேசத்தில் "மூன்றாவது மனிதன்" குறித்த ஒரு ஆய்வை, மதிப்பீட்டை மேற்கொள்ளவும் இது உதவும். முடிந்தால் ஆரம்ப இதழ்களையும் சிரமத்தை ஏற்று அனுப்பி உதவுங்கள். தவிர, இதழ் 05ன் அமைப்பும் விடயங்களின் தேர்வும் தொகுப்பும் பொருத்தமாகவும் சிறப்பாகவும் அமைந்திருக் கின்றன. எனினும் நேர்காணல்களில் யாழ்ப்பாணத்துப் படைப்பாளர்கள் - விமர்சகர்களையே தொடர்ந்தும் தேர்வு செய்கிறீர்கள். பலரும் யாழ்ப்பாணம் அல்லது வடபுலத்துப் படைப்பாளிகள், விமர்சகர்களின் நேர்காணலையே செய்வது ஒரு வித ஏமாற்றத்தையும் பல கேள்விகளையும் தருகின்றன.

தமிழகம், புலம்பெயர்ந்த நாடுகள், கொழும்பு மற்றும் கிழக்கின் இதழ்கள் எல்லாவற்றிலும் இந்த யாழ்ப்பாண முதன்மைப் பாட்டையே கைக்கொள்கின்றன. இது எதற்காக? வடபுலத்தவர்களைவிட கிழக்கின் படைப்பாளிகள், விமர்சகர்கள் பலரும் சமரசங்களுக்கு உட்படாமல் தமது படைப்பு மற்றும் படைப்பியல் கோட்பாடு, நடைமுறை, வாழ்க்கை என்பவற்றை இதுவரையில் கடைப்பிடித்து வந்துள்ளார்கள். தொடர்ந்தும் அவர்களின் வீழ்ச்சியடையாத பண்புப்பராமரிப்பு நடந்தே வருகிறது. இவை ஒரு வகையில் வியப்பையும் மனநிறைவையும் தருவன. வட புலத்தவர்கள் மிக இலகுவில் தமக்கான இடங்களைப் பெறுவதற்காக அரசியல் வியாபாரம், படைப்பு வியாபாரம், நடைமுறைப் பிறழ்வுகள் என்பனவற்றை நியாயப்படுத்தி, தம்மை நிலைநிறுத்தும் போக்கில் செயற்படுபவர்கள். இதில் சிலர் தவிர, அநேகர் அடக்கம். இதற்கு உதாரணங்கள் பல. முற்போக்கு எழுத்தாளர்கள் முதல் இந்த அணி தவிர்ந்த பிறரும்கூட அப்படித்தான். இவை யாவரும் அறிந்த உண்மை. அவர்கள் ஊடகங்களை தமக்குச் சார்பாகப் பயன்படுத்துவதிலும் கெட்டித்தனமாகவே செயற்படுகிறார்கள். பல இதழ்கள் ஏனோ அவர்களைச் சுற்றியே நிற்பதும் ஒரு வகையில் உண்டு. இவை எல்லாமே ஈழத்துப் படைப்பாளிகளின் தளர்ச்சிக்கும் விமர்சன மந்தைத் தனத்துக்கும் ஏதுவாகின்றன. இதை "மூன்றாவது மனிதன்" கவனிக்க வேண்டும்.

கிழக்கின் மிகவும் கவனிக்கத்தக்க படைப்பாளிகளை உரிய முறையில், வெளியே காலத்தின் முகத்தின் முன்னால், அவர்களின் ஆளுமைகளுடன் முன்னிறுத்தி வெளிப்படுத்த வேண்டியது இதழ்களினதும் இதழியலாளரினதும் கடமை என நினைக்கின்றேன். சந்தர்ப்பவாத, சார்பு நிலைவாதிகள் தம்மை நியாயப்படுத்தும் கருத்து மூலங்களை வெட்கத்தைப் புறக்கணித்து வாசகரின் மூளைக்கும் புலனுணர்வுக்கும் சவால் விடுவது போல தொடர்ந்தும் முன்வைப்பதை இன்னும் அனுமதிக்கப் போகிறீர்களா? சண்முகம் சிவலிங்கம், சோலைக்கிளி, உமா வரதராஜன், எம்.எல்.எம். மன்சூர், ஓட்டமாவடி அறபாத் போன்றவர்களின் ஆளுமை மற்றும் கருத்துகள், படைப்பியல், அனுபவங்கள் போன்றவற்றை அறிய முனையும் வாசகர்கள் ஏன் ஏமாற்றப்பட்டுக் கொண்டே போகிறார்கள்? இந்தக் கேள்வியை ஒரு வாசகன் என்ற ரீதியில் என்னால் எழுப்பப்படுவது தவிர்க்க முடியாததாகிறது. ஒரு இதழுடன் வாசகன் கொள்ளும் உறவு - உரிமை என்பதின் அடிப்படை ஆதாரத்துடன் கேட்கின்றேன். இதைப்பற்றிய ஒரு விரிவான சிந்திப்பும், விவாதமும் முன்வைக்கப்படுவது அவசியம் என்றே நினைக்கின்றேன்.

மேலும், இதழ் 05ல் உமா வரதராஜனின் கவிதை ஒரு சாதாரண கவிதையாக, மனதில் அதிகம் பதியாத- ஈர்ப்புக் கொள்ளாததாகவே போய்விடும் தன்மையுடன் அமைந்து விடுகிறது. நுண்ணுணர்வுகளில் சில கோலங்களை எழுப்ப முயன்று அடங்கிச் சோர்ந்து விடும் தன்மையைக் கொண்டு அமைதியாகிவிட்டது. சோலைக்கிளியின் கவிதை 'இன்னும் ஒரு காலடியில்' பிரசுரமாயிருந்ததாக ஞாபகம். இன்னுமொரு காலடி உடன் கைவசம் இல்லை என்பதால் அதுபற்றிச் சரியாகக் குறிப்பிட முடியவில்லை. ஜெய்சங்கரின் மொழிபெயர்ப்பு முயற்சிகள் பாராட்டவும், ஊக்கப்படுத்தவும் வேண்டியவை. கவிதைத் தேர்வும், படைப்பின் மூலத்தை மொழிபெயர்ப்பினூடாகவும் மிக வெற்றிகரமாக சிதையாமல் கொண்டுவர அவர் செயற்படுவது சிறப்பு. ஜெய்சங்கர் இளம் படைப்பாளி, கலைஞர் என்பதக்கப்பால் கவனிப்பைப் பெறக்கூடியவர் என்ற தன்மையை அடையாளப்படுத்துகிறார்.

சிறுகதை பொழிபெயர்ப்புப் படைப்பாக - தேர்வு செய்யப்பட்ட படைப்பாக - இருந்த போதும் சாதாரண தன்மைக்கு அப்பால் நகர முடியவில்லை. ஆனால், அதன் உள்ளீடு உணர்ந்தும் செய்தி, உணர்வு மிக முக்கியமானது. எளிமையான நகர்வுக்கூடாக அந்தப் பிரச்சினை நம்முன் வைக்கப்படுகிறது. ஒருவித அதிர்ச்சியையும் மன அடியையும் தருகிறது அது. வாழ்வின் இழைகள் எப்படியெல்லாம் அறுந்து போகின்றன என்பதற்கு அதுவும் ஒரு சாட்சி. பெரும்பாலும் முன்னர் மொழிபெயர்ப்புச் செயற்பாடுகள் மேற்கின் படைப்புகளா கவும், சோசலிஷ நாடுகளின் படைப்பு களாகவுமே இருந்தன. ஆனால், இந்தப் போக்கு மாறி இன்றைய இச்செயற் பாடுகள் கீழைத்தேய படைப்புகளையும் தமிழுக்கு அறிமுகப்படுத்துகின்றன. இது பற்றிய ஒரு சரியான கணிப்பும் அவதானிப்பும் அவசியமானது.

ஓட்டமாவடி அறபாத், றஸ்மி ஆகியோரின் கவிதைகள் கால முகத்தைக் காட்டுவன. எளிமையும், நேர்த்தியும், உணர்வுமிக்க சிறந்த கவிதைகளாக அவை அமைந்திருக் கின்றன. போர்ச் சூழலில் நாம் வாழ்வதாலும் போரை அவை பிரதிபலிப்பதாலும் மட்டும் அவை ஈர்ப்பைத்தருவதில்லை. அவற்றுக்குமப்பால், கால உணர்வையும், மனித வாழ்வு கால நிகழ்வுகளில் சந்திக்கும் நெருக்கடிக ளையும் கொண்டிருப்பதனால் அவை பிடிப்புக்குள்ளாகின்றன. மனதில் வாழும் கவிதைகளாக அவை மாறியிருப்பது அவற்றின் சிறப்புத்தான். மறுமலர்ச்சிக் கதைகள் பற்றிய தெ. மதுசூதனின் விரிவான கட்டுரை பல பொய்மைகளி னதும் புனைவுகளினதும் முகமூடிகளைக கிழித்துப் புதிய உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. இது பலருக்கு அதிர்ச்சியையும் முகச் சுழிப்புகளையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தினாலும் தவிர்க்க முடியாததாகிறது.

மு.பொ.வின் நேர்காணல் "காலச்சுவடு" வில் வந்த நேர்காணலைவிட நன்றாக விருந்தது. ஆனால், ஆழமும் விரிவும் கொண்ட உரையாடலாக அது அமையவில்லை என்பது பெருங் குறைதான். மு.பொ. கவனங்கொள்ளப் பட வேண்டிய ஒருவர் என்பதில் எந்தக் கேள்விகளும் மறுப்பும் பிறவார்த்தைகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இல்லாதவரே! ஆனால், மு.பொ. சில காலமாகத் தன்னை சுருட்டி வைத்துவிட்டு இப்போது சந்தர்ப்பம் பார்த்து "சுருணை குலைத்துள்ளாரோ" எனவும் எண்ண வைக்கிறது. அவரின் இன்றைய செயற்பாடுகளும், கருத்துகளும், அவதானிப்புகளும் பல சந்தேகங்களைக் கிளப்புகின்றன. "சரிநிகர்" மற்றும் "ஸ்ரீலங்கா வானொலி" போன்றவற்றில் அவர் இன்றைய ஈழத்துக்கவிதைகள் பற்றி முன்வைத்த மதிப்பீடுகளும் பிறவிடயங்களும் கேள்விகளுக்கும், சந்தேகிப்புகளுக்கும் இடமளிக்கின்றன.

ஈழத்தில் இன்றைய கவிதை பற்றி மட்டுமல்ல, 85க்குப் பின்னர் வந்த ஈழத்தின் எந்தப் படைப்புகள் பற்றியும் எவரும் இப்போது எத்தகைய மதிப்பீட்டையும், ஆய்வையும் முழுமையாகச் செய்ய முடியாது. அரசியல் நெருக்கடியும் போரும் ஏற்படுத்திய - விளைவித்த தடைகளும் இறுக்கங்களும் பிரதேசங்களாகவும் பிரிவுகளாகவும் படைப்புச் செயற்பாட்டை பிரித்து விட்டன. ஒரு பிரதேசத்தின் வெளியீடுகளை மறு பிரதேசத்தவர் பார்க்கவோ, படிக்கவோ முடியாத நிலை 85ன்பிறகு தொடர்ந்தும் இருக்கிறது என்பதை யாரால் மறுக்க முடியும்? 85க்குப் பிறகு வந்த புதிய படைப்பாளிகள் பற்றிய சரியான அறிதல் எந்த இடத்திலும் எவருக்கும் இல்லை. இதை மனம்கொள்ளாமல் தாம் அறிந்ததை மட்டும் வைத்துக் கொண்டு பட்டியலிடுவதையும் விமர்சிப்பதையும் காலம் நகைக்கும். தவிர, இன்று இப்படியான செயலைச் செய்வது ஒரு தவறான அறிதலை வாசகரிடத்திலும் பிற படைப்பாளிகளிடத்திலும் விளைவிக்கும். கைலாசபதியை பல வழிகளிலும் பலரும் இன்று குறை கூறுகிறார்கள். அதே தவறைத் தெரிந்தும் தெரியாமலும் இவர்களும் செய்கிறார்கள். இதை இவர்கள் புரிந்த கொள்வது எதிர்காலத்தில் எல்லோரக்கும் நல்லது.

போராட்டம் நடைபெறும் மையக் களத்தில் படைப்பாளிகள் இரண்டு வகையில் தொழிற்படுகிறார்கள் என்று முருகையன் ஒரு முறை கூறினார். உண்மைதான். களப் போராளிகள் - உட்கவிஞர்கள் களத்துக்கு வெளியேயான கவிஞர்கள், வெளிக் கவிஞர்கள் இப்படி சொக்கனும் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இது கவிஞர்களுக்கு மட்டுமல்ல பிற படைப்பாளிகளுக்கும் பொருந்தும்.

கப்டன் கஸ்தூரி, கப்டன் வானதி, மேஜர் பாரதி கப்டன் மலரவன் என்றான படைப்பாளிகளின் படைப்புகளை முழுமையாகப் படிக்காமலே அவர்களின் பெயரைப் பலரும் குறிப்பிடுவதை பல சந்தர்ப்பங்களிலும் அவதானிக்க முடியும். அவர்கள் படைப்புத் தளத்தில் படைப்பியல் வளர்ச்சியில் தம்மை மேலும் ஈடுபடுத்திக் கொள்ள அவகாசம் அற்றுப் போன நிகழ்வுகள் அவர்களின் ஆரம்பப் படைப்புகளை மட்டுமே நமக்குத் தந்து விட்டன. எனவே இது குறித்த அவதானிப்பும் அவர்களின் படைப்பை அணுகும் போது ஒருவருக்கு இருக்க வேண்டும். பலவகையிலும் மதிப்புக்குரிய மு.பொ.கூட இப்படித் தகவல்களின் அடிப்படையில் கருத்துகளை முன்வைக்க முனைவது கவலையளிக்கிறது.

90களில் பல வெளியீடுகள் (புதிய சஞ்சிகைகள், பத்திரிகைகள், புத்தகங்கள்) வன்னி, யாழ்ப்பாணத்திலும் கொழும்பு, திருக்கோணமலை, மட்டக்களப்பு, கல்முனை, மலையகம், வவுனியா என பல இடங்களிலும் வெளிவந்திருக்கிறது. எல்லா இடத்தின் வெளியீடுகளையும் பெற்றுள்ள படைப்பாளிகள் வாசகர்கள் எத்தனை பேர்? அதற்குரிய வசதியை அரசும் இராணுவமும் அனுமதித்ததா? ஏன் இந்த ஞானம் ஒருவருக்கும் வெளிக்கவில்லை. பலர் இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளிலிருந்து வெளிவரும் கடிதங்களைக்கூட படிக்கவோ, வைத்திருக்கவோ பயப்படுகிறார்கள். பரிசுத்த ஆவிகளாகத் தம்மை அடையாளம் காட்ட வேண்டும் என்ற தவிப்பு அவர்களுக்கு; இந்த நிலையில் எப்படி படைப்புகளையும் வெளியீடுகளையும் துணிந்து அவர்கள் வைத்திருப்பார்கள். ஏற்படும் நெருக்கடிகள் சிரமங்களைப் பொருட்படுத்தாமல் நான் இதனை எழுதவில்லை. இதை உணராமல் செயற்படுவதையே குற்றப் படுத்துகின்றேன். கண்டிக்கின்றேன்.

'மூன்றாவது மனிதன்' செயற்களத்தைப் பல வழிகளிலும் நல்ல பண்புகளுடன் வெளிப்படுத்துவது நம்பிக்கையையும் நிறைவையையும் தருகிறது. அதன் நூல் வெளியீட்டுத் தொடரும் மிகப்பயனுடைய ஒரு நல்ல பணியாகும்.

இங்கிருந்து செம்மணி என்றொரு கவிதைத் தொகுதி 24 கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய தொகுப்பு வெளிவந்துள்ளது.

அன்புடன்,

**சி. விதுல்ஜன்**
**கிளிநொச்சி.**

கடிதம் எழுதியெழுதி சோர்ந்து, இதழுக்கான எதிர்பார்ப்பும் வற்றிய பின்னர் இதழ் 05 கிடைத்தது மிக்க நன்றி. ஏன் இவ்வளவு தாமதம் என்பதை அறிய இயலவில்லை.

பெண்ணியச் சிறப்பிதழ் என்ற போதிலும் இதழ் 05 பல விடயங்களில் இந்தத் தடவை திருப்தி தந்தது.

இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து தமிழ் இலக்கியம் சுயமதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட வேண்டுமென்ற ஆசிரியர் அவர்களின் ஆர்வமிக்க அங்கலாய்ப்பு ஏற்புடையதே.

முன்னர் தென்னிந்தியாவோடு, ஈழத்து இலக்கிய வடிவ நூலுருவாக்கம் குறைவு அதனால் எம் இலக்கியத் தளத்தின் வீரியத்தினை அறிய முடியவில்லை என்று ஒரு பிரிவினர் ஆதங்கப்பட்டனர். பின்னர் ஓரளவுக்கு வெளியீடுகள் அதிகரித்தன. ஆனால் இத்தகைய வெளியீடுகளின் உள்ளீடுகளின் தரம் பற்றிய மதிப்பீட்டை, பற்றிய ஆய்வு இன்றைய தேவை மட்டுமல்ல, இன்னுமொரு நூற்றாண்டுக்குப் பின்னரும் எமது எதிர்கால சந்ததியினரின் நலம் கருதி எனினும் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்திற்கான தங்களின் குறிப்புரை பாராட்டுக்குரியது. நாம் மிக முக்கிய மானதொரு பின்புலத்தில் அல்லது மறுத்துரைத்து தூக்கியெறிந்து விட முடியாத களச்சூழலில் எழுந்து நிற்கின்றோம் என்பது எத்தனை உண்மை என்பதைவிட அதன் அவசியம் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

"அழகுராணிப் போட்டிகள்" பற்றிய சந்தியாவினதும், "சினிமா, பெண், உளவியல்" பற்றிய கொண்ஸ் ஒன்றைணின் கட்டுரைகளின் பரவலாக்கம் சென்றடைய வேண்டியது; மூன்றாவது மனிதன் வாசகர்கள் மட்டுமல்ல என்பதை கட்டுரைகளைத் திரும்பிப் படித்த போது உறுத்திற்று - அக்கட்டுரைகள் பரவலாக்கப்படல் வேண்டும்.

அழகு என்றால் என்ன என்பதற்கான மெய்யியல் ரீதியில் எழும் விளக்கத்தை ஜீரணிப்பதை ஒரு புறம் வைத்துவிட்டு, அழகுராணிப் போட்டியையோ அல்லது அதற்குக் கீழே நீண்டு கிடக்கும் அடிமட்டப் பெண்கள் வரை விஸ்வரூபம் எடுத்து நிற்கும் இந்த அழகு படுத்தலின் அவசியம் என்ன என்பதை ஆராயுமிடத்து, சாதாரணமானவர்களைவிட பெண்ணிலை வாதம் பேசும் பெண்கள் கூட சற்று தடுமாறத்தான் வேண்டும்.

"பெண்களுக்கு எதிரானவற்றில் பெண்களே ஆர்வமுற்றிருப்பது பெருத்த துயர் தருவதாய்" குறித்து எழுதிய சந்தியாவினது வேதனை, நாற்றம் சிறுகதையில் அப்படியே வேறு கோணத்தில் சித்தரிக்கப்பட்டதன் பொருத்தப்பாடு மிக அருமை. ஆனால் ஒரு விதத்தில் பெண்ணிலைவாத சிந்தனைகள் கூர்மைப்பட்டு வருகிறதென்றால், இன்னொரு புறத்தை "நாற்றங்களும்" அதை ஒத்தனவும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவற்றைவிட பன்மடங்கு இறுக்கமடைந்து, ஒட்டகச் சிவிங்கிகள் போல் கூர்ப்படைந்து நிற்பதை இன்றும் காண்கிறோம். (வானொலியிலும் பெண்ணிலைவாதம் பேசப்படுகிறது. சந்தியாவின் கட்டுரை அங்கு மிகப் பொருத்தப்பாடாய் இருக்கும் என நான் கருதுவதோடு, வானொலியின் ஒரு நேயராகவிருந்தாலும் இக்கட்டுரையைச் சுருக்கியனுப்ப அனுமதி கிடைக்குமெனக் கருதி அனுப்புகிறேன். வானொலியில் கூட, முகம் பளபளக்க, பாதம் சிறப்புற, என பல அழகுக் குறிப்புகள் வழங்கப்படுகின்றன).

"மூன்றாவது மனிதன்" இயல்புக்கேற்ப கவிதைகளும் இருந்தமை பாராட்டுக்குரியதெனினும், தூக்குத் தண்டனைக்கு சிவப்புக் கம்பளம் - குறிப்பும் கவிதையும் என்னை அரித்தது. ஐயோ என்ற பெருத்த ஓலத்தைத்தவிர, அதற்கு அப்பால் வேறு எதனையும் தாங்கவும், அனுபவிக்கவும், காணச்சகிக்கவும், இயலாத கூடாய்; விழுந்து நொறுங்கத்தானே முடிகிறது!

"ஏழு நிற வண்ணத்திப் பூச்சியை" ஜெய்சங்கர் இவ்வளவு இலகு படுத்தி விட்டாரா? இன்னுமின்னும் அதனுள் இருந்திருக்க வேண்டும். தடயங்கள் தெரிகிறதே, முடியாத எண்ணிக்கைக்கு மேலாய் வண்ணத்துப் பூச்சியை பிடித்துப் பார்த்தேன்.

மொத்தத்தில் என் அறிவுக்குத் தக்கதாய், ஒரு குறையாவது எழுத வேண்டுமே எனத் தேடினாலும் இதழில் எனக்குத் தென்படவேயில்லை.

ஆனால் புத்தகப் பக்கத்தை அலட்சியம் பண்ணுவது போல் உள்ளது, மிக அவசியம். அதனை நிவர்த்திக்கும் முயற்சியை இதழ் 6ல் தெரியும் என நம்புகின்றேன்.

**ரீ. உருத்திரா**
**மண்டூர்.**

மூன்றாவது மனிதன் ஏலவே 04 இதழ்கள் வெளிவந்திருக்கின்றன, ஆனால் அவை எதுவுமே எனது பார்வைக்கு எட்டவில்லை. 'மூன்றாவது மனிதன்' நவீன இலக்கியப் பிரக்ஞையுள்ள சஞ்சிகையாக ஒரு தமிழ்ப் பிரதேசத்திலிருந்து வெளிவருவது குறித்து பெருமையும் மிக மகிழ்ச்சியும்.

ஒட்டமாவடி அறபாத், ஆகர்ஷியா, றஸ்மி ஆகியோரின் கவிதைகள் நெஞ்சை உலுக்கி முள்ளந்தண்டில் சில்லிட்டேறின. சி. ஜெய்சங்கர் மொழிபெயர்த்த 'ஏழுநிற வண்ணத்துப் பூச்சி' மனசைத் தொடுகிற கவிதை, மொழிபெயர்த்துப் பதிப்பித்தமைக்கு நன்றி. இந்த எல்லாக் கவிதைகளும் வன்முறைகள் தலைதூக்கியிருக்கும் காலத்தில் யுத்தம் 'ஜன்'களில் ஊறிய காலத்தில்; அது விளைவித்த கொடூரங்கள் நிகழ்ந்த காலத்தில் எழுதப்பட்டிருந்ததால் ஜீவனை உலுப்புகின்றன. உமாவரதராஜனின் கவிதை சோலைக்கிளியினுடையதை விடச் சிறப்பாகவே இருக்கிறது.

மு. பொன்னம்பலம் அவர்களுடனான நேர்காணல் வாசித்தேன். இன்றைய நவீன தமிழ் இலக்கிய விமர்சகர்கள் அல்லது ஆய்வாளர்கள் என்று கருதக்கூடிய அனேகர் 80களின் பின் எழுத்துலகில் காலடி வைத்த இளம் படைப்பாளர்களை மிக மிக இளம் படைப்பாளர்களை எப்போதுமே கவனத்தில் எடுக்கத் தவறியுள்ளனர். இவர்களின் இந்த வரலாற்றுத் தவறு ஈழத்தின் இன்றைய இலக்கியத்தை அதன் வரலாற்றை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மட்டும் முடக்கிப் போட வழி செய்திருக்கிறது.

வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வாழ்கின்ற அனேக படைப்பாளிகளின் படைப்புகள் நாட்டுச் சூழல் காரணமாக இவர்களுக்குக் கிடைக்காமற் போக வாய்ப்புகள் அதிகம்தான். என்றாலும், ஈழத்தின் இலக்கிய வரலாற்றைத் தீர்மானிக்கின்ற இந்த மாதிரியான ஆய்வுகளையும் விமர்சனங்களையும் நேர்காணல்களையும் முன்வைக்கிற போது - பதிவு செய்கிற போது - மிகச் சரியான தரவுகளையே முன்வைக்க வேண்டும். தங்களின் அறிதலிலுள்ள குறைபாட்டை மதிப்பதற்காக ஒரே இடத்தில் நின்று வட்டமடித்தல் சாபக்கேடான விசயம். 80களின் பின்னான சிறுகதை, கவிதை, நாவல், நாடகம், விமர்சனம் போன்ற துறைகள் ஒரு குறிப்பிட்ட வட்டத்திலேயே குறிப்பிட்ட சில நபர்களுடனேயே தங்கி, நின்று விடுவதான ஒரு தோற்றப்பாட்டினை இந்தப் போக்கு தந்துவிடும் அபாயம் உள்ளதல்லவா?

குறிப்பாக அது,

கவிதை என்று பேசப்படும் போது சேரன் தொடங்கி சோலைக்கிளி உள்ளிட்ட ஒரு குறிப்பிட்ட வட்டத்துடனும். சிறுகதையில் உமா வரதராஜன் தொடங்கி மு. பொன்னம்பலம் தனது பேட்டியில் குறிப்பிட்டுள்ளதைப் போல, அவருடனும். விமர்சனம் என்று வரும் போது கா. சிவத்தம்பியுடனும் தேங்கி விடும் அபாயம் உள்ளது.

ஒரு அகதிக் குடிசையில் வாழ்வின் உன்னதங்கள் என்று சொல்லப்படுபவை எல்லாவற்றையும் இழந்து யுத்த நெருக்கடிக்குள் தன்னாலியன்றளவு எழுதிக் கொண்டும் செயற்பட்டுக் கொண்டுமிருக்கின்ற தாமரைச் செல்வியை ஒரு பொருட்டாகக் கருதாமல், அவரின் கண்ணீரின் விலையை ஒரு பொருட்டாகக் கருதாமல் அதனை சுண்டி விளையாட முயன்றிருக்கும் மு. பொன்னம்பலம் தமிழ் மக்கள் இந்த துயர் மிகுந்த காலத்தில் சொரிகின்ற கண்ணீரை ஒரு பொருட்டாகக் கருதாமல் விளையாடுகிறார் என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது. 80பதுகளின் பின்னான இலக்கிய வளர்ச்சி மு.பொ. தனது பேட்டியில் குறிப்பிடப்பட்டிருக்கும் - நான் மேலே குறிப்பிட்டுள்ள அந்த குறுகிய வட்டத்துடன் முற்றுப் பெற்று விட்டதா?

சரியான; வஞ்சனையற்ற மதிப்பீடோ ஆய்வுகளோ செய்யப்படாமல் 80களின் பின்னான காலப் பகுதியிலிருந்து இன்றும் கூட தொடர்ந்தும் எழுதிக் கொண்டிருக்கின்ற இளம் தலை முறைப்படைப்பாளிகள் திட்டமிட்டு இருட்டிப்புச் செய்யப்படுகிறார்கள் என்றே நம்ப வேண்டியிருக்கிறது. ஒரு காலத்தில் மஹாகவியையும், மு.தளையசிங்கத்தையும் இருட்டிப்புச் செய்தவர்கள் - திட்டமிட்டு - இப்போது அவர்களைத் தோண்டியெடுத்துப் பூசைபண்ணி அவர்களின் பெயரால் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இது இன்றைய இளம் படைப்பாளிகளுக்கும் நிகழக் கூடாதென்றே விரும்புகின்றேன்.

இந்த யுத்தகால நெருக்கடிக்குள்ளும் நேர்மைத் தன்மையோடும் அஞ்சாமை யோடும் எழுதிக் கொண்டிருக்கிறவர்களில் கவிதைத் துறையில் - ஒட்டமாவடி அறபாத், றஸ்மி, ஆகர்ஷியா, றஜீசன், உமாகரன், எஸ். உமா ஜிப்ரான், செ.பொ.சிவனேசு, நாமகள், உதயலட்சுமி, சுதாமதி, நிலாந்தன், கருணாகரன், சந்திரபோஸ் சுதாகர், தயாளன், இயல்வாணன், சத்துருக்கன், அகிலன், ஜெய்சங்கர், நாகசிவசிதம்பரம், ந. சத்தியபாலன் போன்றோரும். சிறுகதைகளில் வசந்தன், சத்துருக்கன், சு. மகேந்திரன், சந்திரபோஸ் சுதாகர், பிரதீப் குமரன், உமா தேவன் போன்றோரும், நாடகத்தில் புதுவை அன்பன், பாலா, தங்கவேலு, ரகு, போன்றோரும், ஓவியத் துறையில் செவ்வேல், பயஸ், தயா, கோபாலி, லங்கா, ராஜன் போன்றோரும் அதிக வீச்சுடன் வாழ்வியலோடு இணைந்தும் செயற்பட்டு வருகின்றனர். இந்த இளம் படைப்புக்களின் படைப்பாளிகளை விமர்சிக்கவோ அதன் தன்மைகளை ஆராயவோ படைப்புச் சார்ந்த விமர்சகர்களும் ஆய்வாளர்களும் முயலவேயில்லை, அவை பற்றி அறிந்து மிகச் சரியான வஞ்சனையற்ற மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்பதே இங்கு நாம் சொல்ல விரும்புவது.

இந்த இளைய தலைமுறையின் இலக்கிய முயற்சியும் ஆர்வமும் இருட்டடிப்புச் செய்யப்படுகிறது. ஈழத்திலிருந்து எந்த இலக்கியவாதி பேட்டியளித்தாலும் விமர்சனங்களை மேற்கொண்டாலும் மு.பொ. பேட்டியில் குறிப்பிட்டிருக்கின்ற ஒரு தலைமுறை எழுத்தாளர்களுடனேயே முடங்கிப் போகின்றார்கள். '80களின் பின் ஈழத்தில் நிலவிய அரசியல் இராணுவவாத நிலையை எமது படைப்பாளிகள் மிகத் துல்லியமாக வெளிப்படுத்தியிருக்கிறார்களா?' என்று உங்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு மு.பொ. கொடுத்திருக்கும் பதில் ஈழத்தில் ஒட்டுமொத்த எழுத்தாள சமூகத்தை மதிப்பிட்டு வந்ததல்ல.

எழுத்தாளன் எப்பொழுதும் உண்மைசார்ந்து இயங்க வேண்டும். அச்சத்திற்கும், அடக்குமுறைக்கும் ஆளாகாமல் இயல்பழியாமல் இருப்பதே அவனுடைய சிறப்பு. இந்தச் சிறப்போடு ஒரு பகுதி இயங்க மு.பொன்னம்பலம் ஈழத்து இலக்கிய பிதாமகர்கள் என்று குறிப்பிடும் யாருமே இந்தச் சிறப்போடு இந்தப் பணியைச் செய்யவில்லை. மாறாக அவர்கள் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தனர். அல்லது தொழில் சார்ந்தும் சுகபோகங்களை அனுபவிப்பதற்காகவும் தனிப்பட்ட நலன்களுக்காகவும் நியாயச் சூழலை விட்டு ஒதுங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கு எழுத்தைவிட ஆத்மார்த்த உண்மையை, உணர்வை விட அவர்களின் இருப்பே முக்கியமாகப்படுகிறது.

தாங்கள் படைக்கும் படைப்பின் உண்மை எங்கே தங்களின் இருப்பைக் கேள்விக் குள்ளாக்கிவிடுமோ என்று அஞ்சுகிறார்கள். 'உண்மை சார்ந்து' எழுதுதல் தங்களுக்குக் கெடுதல் விளைவிக்கும் என்பதால் மு. தளையசிங்கம் குறிப்பிட்டதைப் போல 'நழுவல் இலக்கியம்' படைப்பவர்களாகவே உள்ளார்கள். ஆனால் இங்கே நிலைமை வேறு, யுத்தத்தால் பாதிக்கப்பட்டு நாளாந்தம் யுத்தத்தின் கொடுரங்களை சந்தித்துக் கொண்டிருக்கின்ற மக்களிடையே வாழ்ந்து கொண்டும் அவர்களின் கண்ணீரை இலக்கியமாக்கிக் கொண்டும் இருக்கிறார்கள் ஈழத்தில் இன்றைய இளம் தலைமுறைப் படைப்பாளிகள்.

இவர்கள் 'அரசியல், இராணுவவாத' நிலையை மிகத் துல்லியமாக தமது படைப்புகளினூடே வெளிப்படுத்தியிருக்கிறார்கள், வெளிப்படுத்தி வருகிறார்கள். இரத்தமும், சதையுமாக அந்தப் படைப்புகள் நமது மண்ணில் இன்னும் நடமாடிக் கொண்டு திரிகின்றன.

'மரணத்தில் வாழ்வோம்' கவிதைத் தொகுதி தொகுக்கப்பட்ட போது இலங்கை முழுவதிலும் இருந்த ஈழத்துக் கவிஞர்களின் பங்களிப்பும், ஆதரவும் அதற்குக் கிடைத்திருந்தது. ஆனால் அதன் பின்வந்த தொகுப்புகளில் பங்களிப்பதற்கும் அதன் வருகைக்கு ஆதரவளிக்கவும் எந்தக் கவிஞர்களும் முன்வரவில்லை. அதற்கு நான் மேலே குறிப்பிட்ட அவர்களின் 'இருப்புப் பற்றிய அச்சம்' காரணமாக இருந்திருக்கலாம். இதையும் மீறி 'காலம் எழுதிய வரி', 'வெளிச்சம் கவிதைகள்', 'வானம் எம் வசம்', 'செம்மணி' (இது 17.10.1998ல் வெளியிடப்பட்டது.) செம்மணி புதைகுழியில் புதைக்கப்பட்ட தமது உறவுகளின் துயரப்பாடல்கள் - போன்ற கவிதைத் தொகுப்புகள் வெளியிடப்பட்ட காலப்பகுதிகளில் இந்த மண்ணில் உண்மை சார்ந்தும் யுத்தக் கொடுரங்களால் பாதிக்கப்பட்ட கவிஞர்களால் எழுதப்பட்ட கவிதைகளின் தொகுப்பாகவே வெளிவந்திருக்கின்றன.

விரல் மடிப்பில் எண்ணக்கூடிய அதுவும் இந்த மண்ணின் துயரத்தோடு ஊறிப்போய் இருக்கின்ற கவிஞர்களால் இந்தத் தொகுதிகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்தத் தொகுதிகளில் உள்ள கவிதைகளில் அனேகமானவை மு.பொ. குறிப்பிட்டுச் செல்வதைப் போல பலஹீனமானவையோ, மோசமானவையோ அல்ல. படைப்பாளர்களிடையே உண்மை சார்ந்த இயங்கும் தைரியமும், துணிவும், மன உறுதியும், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக ஒன்றுபடும் திராணியும் இன்னும் ஒடுக்குவோருக்கெதிராக கிளர்ந்தெழும் நெஞ்சமுத்தமும் எப்போது மேலோங்குகிறதோ அப்போது மரணத்தில் வாழ்வோம் தொகுப்பைவிட அதன் பின்னர் வந்த தொகுப்புகளைவிட மிகவும் மகோன்னதமான தொகுப்புகளையும் படைப்புகளையும் ஈழத்து இலக்கிய உலகம் சந்திக்கும். இந்த நெஞ்சமுத்தமும் மன உறுதியும் யாருக்கு இருக்கிறதோ அவர்கள் எழுதலாம். அவர்கள் விமர்சிக்கலாம். அவர்கள் வாழலாம்.

'மூன்றாவது மனிதன்' இதழ் எங்கள் பகுதிக்கு அனுப்பி வைக்கப்படுமா? கிடைக்கும் ஓர் இதழ் இங்குள்ள ஏராளமான நண்பர்களுக்கு வாசிக்க வழங்கப்படுகிறது. சில நேரங்களில் ஒரு நாளிலோ, இரண்டு நாளிலோ இன்னொரு நண்பரிடமிருந்து இன்னொரு நண்பருக்கு மாறிப் போகிறது. இந்த நிலையால் அனேக ஆக்கங்கள் வாசிக்கப்படாமலும் வாசிக்கப்பட்டவை மறுவாசிப்புக்குட்படாமலும் போய் விடுகின்றன. இதழ் அனுப்ப முடிந்தால் தயவு செய்து அனுப்புங்கள்.

அத்துடன் "மூன்றாவது மனிதனு"க்கு இங்கிருக்கும் படைப்பாளிகளிடமிருந்து படைப்புகள் பெற்று தங்களுக்கு அனுப்பலாமா என்பது பற்றி எழுதுங்கள். கிழக்கில் பல நண்பர்கள் மிகவும் நன்றாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள் அவர்களுக்கு என் அன்பு.

**எஸ்போஸ்**
**அக்கராயன் குளம்.**

முன்பு "அலை" வந்தது, பின், "வியூகம்" வந்தது. நான் மிகவும் இதனை நேசித்தேன். தொடர்ந்தும் வெளிவர வேண்டுமென்று விரும்பினேன்; சிற்றிதழ்களின் குறை ஆயுளினால் அவை நின்று விட்டன; மழை தூவுவது போல ஆங்காங்கே சிறு சஞ்சிகைகள் தலைகாட்டுவதும் மறைந்து போவதுமாய இருந்தன; தொடர்ந்து இதுதான் நடக்கிறது. அனைத்தையும் நான் தேடி வாசிப்பேன்; அச்சிறு சஞ்சிகைகளில் எனக்கு ஏனோ (தெரியும்) ஈடுபாடு வரவில்லை.

"மூன்றாவது மனிதன்" வெளிவந்த போது அதனை வாசித்தேன்; நட்சத்திரன் செவ்விந்தியன் உங்களுக்கு ஏற்கனவே எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது போல, மூன்றாவது மனிதன் ஈழத்து இலக்கிய சிறு சஞ்சிகை வரலாற்றில் ஒரு முக்கியம்; என்பதை நானும் உணர்ந்தேன். அது தொடர்ந்தும் வெளிவர வேண்டுமென விரும்பியும் நிற்கிறேன். 5 இதழ்கள் கொண்டு வந்தது பெரிய விடயம்தான் - அது உங்களது உழைப்பின் அறுவடையாகும். ஏன் தொடர்ந்து கொண்டு வருவதில் உள்ள தடைகளை நாம் எல்லோரும் சேர்ந்து உடைத்துவிட முடியாதா? இது பற்றி நாம் ஆழமாகப் பேசவேண்டும். மூன்றாவது மனிதன் பற்றிய அறிமுக அரங்கை ஒவ்வோர் ஊரிலும் நடத்த வேண்டும்.

"மூன்றாவது மனிதன்" நிச்சயமாக அதனுடைய பாதையை சரியான சிந்தனைத் தளத்திலும், கருத்தியல் நோக்கிலும் கொண்டுள்ளது உணரக்கூடியதுதான் - மனிதனைப் பகுத்து இலக்கியத்தையும், அரசியலையும் வேறாக்க முடியாது!

அவலம் மிக்க ஈழத்து தமிழ்ச் சூழலில் உங்களின் பணி மிகவும் காத்திரமானது; உங்கள் பணியின் ஊடே மௌனம் கலைய வேண்டும். நம்மை மூடி இருக்கும் அழுக்குகள் கழுவப்படல் வேண்டும். நமது இலக்கியமும் உயிருள்ளதாக அனைவருக்கும் சென்றடைய வேண்டும் இதுவே எனது விருப்பமும்; செயலுமாகும்.

**ஏ.அப்துல் ஸத்தார்**
**திருக்கோணமலை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ACTIVE MULTI ANTENNA

யூரோமைண்ட் (Euromind) TM




**Hot Line 075-370016**

**சொற்ப கையிருப்பே உண்டு**
**உங்கள் தெரிவுகளுக்கு முந்துங்கள்.**

- VHF/UHF அலை வரிசைகளுக்கும் FM ரேடியோ அலை வரிசைகளுக்கும் பொதுவானது.
- மின்சாரத்திலும்பற்றரியாலும் இயக்கக்கூடியது.
- பூஸ்ரர் தேவையில்லை (Built-in Booster).
- இலகுவாக நீங்களே பொருத்திக் கொள்ளலாம்.

**UKAAYE**

*169, BODHIRAJA MAWATHA,*
*(Gaswork Street, Pettah)*
*COLOMBO - 11.*
*TEL : 322705 FAX : 075-370018*

ADVT.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Suriya

## Textile Mills (Pvt) Ltd.

**32-34, 2nd floor**
**3rd, Cross Street,**
**Colombo - 11.**

ADVT.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்